
# தமிழரசு

நவம்பர் 1-15, 1997 ரூ.3






50

# இந்த இதழில்...


★ கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி திறப்பு விழா 2

★ கரூர் - அரசு விழா 3

★ பழம் பாடல் - புதுப்பார்வை 5

★ நேசச் சிறகுகள் 6
- கவிஞர் நிர்மலா சுரேஷ்

★ பட்டதாரி இல்லாத குடும்பத்து மாணாக்கர் மேற்படிப்புச் செலவை அரசே ஏற்கும் புரட்சித் திட்டம் 9

★ இளநீர் - மருத்துவக் கட்டுரை 11
- டாக்டர் ஏ.ஆர். துரைராஜ்

★ சமத்துவம் வாழட்டும்; வெல்லட்டும்;
- முதலமைச்சர் கலைஞர் 14

★ வெற்றிகரமான ஒற்றைச் சாளரமுறை
- டாக்டர் அனந்தகிருஷ்ணன் 15

★ ஜவஹர்லால் நேரு பார்வையில் ஜனநாயக சோஷலிசம் 17

★ பெரம்பலூர் மாவட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகள் 22

★ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்
- முதலமைச்சர் அறிவிப்பு 25

★ குடியரசு
- முனைவர் நா. செயப்பிரகாசு 26

★ சென்னையில் நேதாஜி சிலை தியாகிகளுக்கு மணிமண்டபம் 33

★ கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் 34

★ தெரிந்துகொள்வோம் 41

★ நூல்நயம் 43

★ எங்கள் ஊர்ப் பிரச்சினை 45



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028

ஐப்பசி

நவம்பர் 1-15, 1997

மலர்:28 இதழ்:9

விலை: ரூ.3

# " 67 ஆண்டுகளுக்கு முன்பு, சுயமரியதை மாநாட்டில் போடப்பட்ட
# தீர்மானங்களை நிறைவேற்றிவருகின்ற அரசு இது!"

## திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் மருத்துவக்கல்லூரி திறப்புவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்

திருச்சிராப்பள்ளியில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் பெயரில், மருத்துவக் கல்லூரியொன்றினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.10.1997 அன்று திறந்துவைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் திரு.ஆர்க்காடு என்.வீராசாமி, திரு.துரைமுருகன், திரு.கே.என்.நேரு ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக்கல்லூரியைத் திறந்துவைத்துப் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''கடைசி நேரத்தில் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு நான் அண்ணே என்று சொன்னபோது - அவர் விழிகளை மெதுவாகத் திறந்து என்னைப் பார்த்து "நாடு இருக்கிறது; மொழி இருக்கிறது; நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று சொன்னார். அந்த நம்பிக்கை வீண்போகாமல் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை உங்களையெல்லாம் நம்பி நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அப்பொழுது, அவர் என்னை விட்டுப் பிரிந்தபோது நான் ஆட்சிப்பொறுப்பிலே இல்லை. ஆனால் அவர், நாங்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வருவோம், அவருடைய கனவுகளை நிறைவேற்றுவோம் என்று நம்பினார். அதனால்தான் "நாடு இருக்கிறது, மொழி இருக்கிறது; நீ இருக்கிறாய், என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

நான் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தாலும் இல்லா விட்டாலும், அண்ணன் கி.ஆ.பெ.போன்ற அருந்தமிழ் ஆற்றலாளர்களை, என்றென்றும் மறவாத இயக்கம், நான் சார்ந்துள்ள தி.மு.கழகம் என்பதை மார்தட்டிக் கூறுவேன்.

1930-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில், முத்தமிழ்க் காவலரால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களில் முக்கியமான தீர்மானங்கள் "இளமைத் திருமணம் கூடாது. கலப்புத்திருமணம் செய்துகொள்ளச் சட்டம் இயற்றப்பட வேண்டும், திருமணத்தில் சிக்கனம் கடைப்பிடிக்கப்படவேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும். பெண்களை ஆசிரியர் தொழிலில் அதிகமாக நியமிக்கவேண்டும்;" இதெல்லாம் அறுபத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு சுயமரியாதை மாநாட்டில் அண்ணன் விசுவநாதம் அவர்கள் முன்வைத்த தீர்மானங்களாகும்.

அந்தத் தீர்மானங்களை, இன்றைக்குத் திமுகழக அரசு எந்த அளவிற்கு நிறைவேற்றி வருகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள்.

பெண்களுக்குச் சொத்தில் சமஉரிமை என்ற சட்டத்தை, கழக ஆட்சியில் 89-ஆம் ஆண்டே நிறைவேற்றியிருக்கிறோம்.

தமிழ் வளர்ச்சிக்காக, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக 65-ஆம் ஆண்டு அண்ணன்



கி.ஆ.பெ.அவர்கள், சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு ஆறுமாத காலம் சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. அதிலும், ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டப்படவேண்டுமென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவைகளையெல்லாம் தாங்கிக்கொண்டு இந்தி எதிர்ப்பு வீரராக இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற - தானைத் தளகர்த்தராக, பெரியாரின் சேனாதிபதியாக, அறிஞர் அண்ணாவின் நண்பராக, எங்களுக்கெல்லாம் அருமை அண்ணனாக வாழ்ந்து மறைந்த, மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெயரால் இங்கே அரசு மருத்துவக்கல்லூரி ஒன்றை நிறுவுவதற்குத் துணைநின்ற அனைவருக்கும், விசுவநாதம் குடும்பத்தின் சார்பாக, அந்தக்குடும்பத்திலே நானும் ஒருவன் என்ற முறையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்".

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★

# "தமிழ்நாடே 'சமத்துவபுரம்' ஆகி, இந்தியாவே பாராட்டுமளவிற்குப் புதியநிலை உருவாகும்!"

### கரூர் மாவட்டம் வெள்ளியணையில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை

"உப்பிடமங்கலத்தில் 'நமக்கு நாமே' திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறேன். 'நமக்கு நாமே' என்றால் அரசாங்கமும், மக்களும் சேர்ந்து சில பணிகளை மக்களுக்காகச் செய்துகொள்வதுதான், நமக்கு நாமே திட்டம். உப்பிடமங்கலத்தில் ஒரு பெரிய ஏரி, 11 ஊர்களுக்குப் பயன்படக்கூடிய அந்த ஏரி பல ஆண்டுக்காலமாகத் தூர்வாரப் படாமல் கல்லும் முள்ளும் நிறைந்து, முள் செடிகள் நிறைந்து பயன்படாமல் போய்விட்டது. அந்த ஏரியைத் தூர்வார 10 இலட்ச ரூபாயில் திட்டமிட்டு 4 இலட்ச ரூபாய் அரசாங்கப் பணம், உழைப்பின் பங்காக 6 இலட்சம்-மக்கள் தருகின்ற பங்காக-பணமாக அல்ல உழைப்பாக மக்கள் தரவேண்டிய பங்கோடு இன்றைக்கு அங்கே தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

"நாம் என்று சொல்கின்ற நேரத்தில் வருகின்ற உணர்ச்சியே வேறு. அதில் ஒரு ஒற்றுமை இருக்கிறது. நான் என்றால் ஒற்றுமை இல்லை; அதில் அகம்பாவம்தான் வருகிறது. நீ என்று சொன்னால் அதில் அலட்சியம் இருக்கும்; ஒற்றுமை இருக்காது. நான் என்று சொல்லிப்பாருங்கள். இரண்டு உதடுகளும் ஒட்டாது. நீ என்று சொல்லிப் பாருங்கள் இரண்டு உதடும் ஒட்டாது. ஆனால் நாம் என்று சொல்லிப் பாருங்கள் இரண்டு உதடும் ஒட்டும். இப்படி ஒட்டுகின்ற உறவாக நாம் 'நமக்கு நாமே' என்ற அளவில் இந்தத்திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டிலே பல கிராமங்களில்; பல ஊராட்சி மன்றங்களில், அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கிய மற்றொரு திட்டம்தான் 'அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்'. இந்த வெள்ளியணைப் பகுதியில் 'நமக்கு நாமே திட்டத்'த்திற்கு 10 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் செலவுகளும்; 'அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்'தின்படி 98 இலட்ச ரூபாய் செலவிலும், இன்றைக்குப் பல திட்டங்கள் இங்கே நிறைவேற இருக்கின்றன.

மாவட்டங்கள் முழுமைக்குமாக இன்றைக்கு 36 கோடி ரூபாய்க்கு அடிக்கல் நாட்டு விழாக்கள் நடைபெற்று இருக்கின்றன.

அதிலே கரூர் - அமராவதி பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இணைந்து இருக்கின்றது. அது 17 கோடி ரூபாய்க்கான திட்டம். கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக்கட்டிடம் மற்றும் 'மாஸ்டர் பிளான் காம்ப்ளெக்ஸ்' இதற்காக 10 கோடி ரூபாய். இந்த 27 கோடி ரூபாயைத்தவிர, மாவட்டம் முழுவதும் பணி முடிந்து திறப்பு விழா நடைபெற்றிருப்பது ஏறத்தாழ 5 கோடி ரூபாய்க்கான திட்டங்களாகும்.

அஃதன்னியில் 5 ஆயிரத்து 124 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்டங்கள் இங்கே வழங்கப்படவுள்ளன. எனவே இந்த மேடையில் இன்று மொத்தம் 57 கோடியே 13 இலட்சத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டும் உள்ளன.

இந்த அரசு கொள்கையின் அடிப்படையில் அமைகின்ற திட்டம் 'சமத்துவபுரம்' திட்டம். 'அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்' ஒரு பெரிய கிராமத்தையும் சுற்றியிருக்கின்ற குக்கிராமங்களையும் எல்லாவிதமான அடிப்படை வசதிகளையும் பெறச்செய்கிற திட்டம். ''நமக்கு நாமே' திட்டம் என்பது ஒரு ஊராட்சி மன்றத்தினுடைய தேவைகளை எல்லாம் நிறைவு செய்ய அரசும், அந்த ஊர் மக்களும் சேர்ந்து நிறைவேற்றுகின்ற திட்டம்.

தொடர்ந்து தமிழகத்தில் இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒழுங்காக மக்களுக்குப் போய்ச்சேர, இந்த திட்டங்களின் பயனை ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் அனுபவித்திட இடையூறாக இருக்கின்ற சாதிமத வெறியாட்டங்கள், ஒற்றுமையில்லாத தன்மைகள், மனிதருக்குள் இருக்கின்ற வேறுபாடுகள் இவைகளெல்லாம், அறவே நீக்கப்படவேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையின்படி; பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி காட்டுதல்படி; அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய உறுதியின்படி; பெருந்தலைவர் காமராசர் போன்றவர்கள் எடுத்துக் கையாண்ட பல்வேறு சாதனைகளின் அடிப்படையில் தி.மு.கழக அரசு உங்கள் அரசு, உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு, தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் 50 இடங்களில் 'சமத்துவபுர'த்தை உருவாக்கவேண்டுமென்று திட்டம் போட்டு அந்தப் பணியும் ஆரம்பமாகியிருக்கின்றது. இரண்டு மூன்று ஊர்களில் அதை நான் தொடங்கி வைத்திருக்கின்றேன்.

இன்றைக்கு வெள்ளியணையிலும் 'சமத்துவபுரம்' ஒன்று அமைகின்றது. 'சமத்துவபுரம்' என்றால் தமிழ்நாடு முழுதும் இந்த ஆண்டு 50; அடுத்த ஆண்டு 50, முடிந்தால் 100. இப்படி ஆண்டுக்காண்டு சமத்துவபுரத்தைத் தமிழ்நாடு முழுவதும் உருவாக்குவது ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள். அந்த 100 வீடுகளில் கண்டிப்பாக 40 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மீதமுள்ள 60 வீடுகள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, முன்னேறிய சாதி மக்களுக்கு வழங்கப்படவேண்டும். ஒரு வீட்டிற்கு 35 ஆயிரம் ரூபாய் அரசே மான்யமாகக் கொடுத்து உதவும். அது அரசு தானாக வழங்குகின்ற பணம்; உங்கள் பிரயத்தனம் இல்லாமல் அரசே வழங்குகின்ற நிதி 35 ஆயிரம் ரூபாய் மேலும் வசதியாக இந்த வீட்டைக் கட்டிக்கொள்ள யாராவது விரும்பினால் அந்தத் தொகையைக் கடனாக அரசு பெற்றுத்தரும். எனவே 35 ஆயிரம் அரசு வழங்கும் மான்யத்துடனும் கூட்டுறவுக் கடனுதவியுடனும் 100 வீடுகள் கட்டப்படுகின்றன.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்தான் பாரதி. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என்று ஆத்திரத்தோடு கேட்டான், புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தமிழர்க்கு - ஏன் உலகத்திற்கே மறையருளிய திருவள்ளுவர் கூறினார்.

பெரியார் வழியில், அண்ணா வழியில் நிற்கின்ற "இந்த ஆட்சி எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்ற அந்தக்கொள்கையை நிலைநாட்ட, சமத்துவபுரங்களை உருவாக்குகின்றது. அந்த சமத்துவபுரத்தில் இடம்பெற எண்ணுகிறவர்கள் சில உறுதிமாழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டுதான் வேலூர் மாவட்டத்தில் பொய்கை கிராமத்தில் சமத்துவபுரத்தில் மக்கள் குடியேறுகிறார்கள்.

**உறுதிமொழிகளாவன:**

1. சமத்துவபுரத்தில் வசிப்பவர்கள் அனைவரும் சாதி சமயப்பாகுபாடு இல்லாமல், அமைதியாக ஒற்றுமையாக வாழவேண்டும்.
2. சமத்துவபுரத்தில் வசிப்போர், அமைய உள்ள சமுதாயக்கூடத்தில், வழிபாடு, திருமணம் போன்ற சடங்குகளும் செய்யவேண்டும். தனித்தனியாக ஒவ்வொரு மதத்திற்கும் பொது இடத்திலே வழிபாட்டுத்தலம் இல்லாமல் சமுதாயக்கூடத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வேண்டுமானால், அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளில் வழிபாட்டுத் தலங்களைத் தனியாக அமைத்துக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை.
3. சமத்துவபுரத்தில் குடிபுகுவோர் அனைவரும் தங்கள் இல்லங்களில் இறப்பு நேரிட்டால் அந்தச் சடலங்களைப் புதைக்க விரும்பினால் சமத்துவபுரத்தில் அமைய உள்ள இடுகாட்டையும், அந்த உடலை எரிக்கவிரும்பினால், பொதுச் சுடுகாட்டையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே 'ஒரு சுடுகாடு', 'ஒரு இடுகாடு' என்ற வழிமுறை கடைப்பிடிக்கப்படவேண்டும்.
4. எந்தவிதமான தலைவர்களுடைய சிலைகளையும் சமத்துவபுரத்தில் வைக்கச் சம்மதிக்கவோ அனுமதிக்கவோ மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

- மேற்கண்ட நிபந்தனைகளை மீறுவதாக ஊர்ஜிதமாகத் தெரிந்தால் விதிக்கும் தண்டனைக்குச் சம்மதிப்பதோடு நஷ்டப்பட்ட ஈட்டுத்தொகையை ஒப்படைத்து வீட்டையும் அரசே எடுத்துக்கொள்ளலாம் என்று சம்மதிக்கிறேன், என்று பயனாளிகள் கையொப்பமிட்டு அந்த உறுதிமொழியை வழங்க வேண்டும்.

வெள்ளியணையில் உருவாகிற சமத்துவபுரம் தமிழ்நாடு முழுவதும் உருவாகி தமிழ்நாடே சமத்துவபுரமாகி இந்தியாவில் இருக்கிற எல்லா மக்களும் பாராட்டுகின்ற அளவிற்கு ஒரு புதிய நிலை உருவாகும் என்ற நம்பிக்கையை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கரூர் மாவட்டம், வெள்ளியணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.10.97 அன்று நலத்திட்டங்களைத் தொடங்கிவைத்துப் பேசியதிலிருந்து.

## மாவட்ட ஊராட்சிகளுக்கு மூன்றாவது காலாண்டுத் தொகையாக ரூ.7.74 கோடி வழங்க-அரசு ஆணை!

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளையேற்று 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு 1997-98ஆம் ஆண்டிற்கு வரவு செலவுத்திட்டத் தொகையிலிருந்து ரூ.30.9485 கோடியினை தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. இந்த நிதி காலாண்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது. இதுவரை முதல் மற்றும் இரண்டாவது காலாண்டுக்கு ரூ.15.4743 கோடி வழங்கப்பட்டுவிட்டது. இப்போது மூன்றாவது காலாண்டுக்கு (அக்டோபர் முதல் டிசம்பர் 97 வரை) ரூ.7.74 கோடி 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப் படுகிறது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஒவ்வொரு காலாண்டுக்கும் வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 29,11,345 |
| 2. | வேலூர் | 47,57,189 |
| 3. | திருவண்ணாமாலை | 40,63,347 |
| 4. | விழுப்புரம் | 56,52,757 |
| 5. | கடலூர் | 34,10,701 |
| 6. | தருமபுரி | 49,10,368 |
| 7. | சேலம் | 33,73,938 |
| 8. | ஈரோடு | 29,48,705 |
| 9. | கோயம்புத்தூர் | 31,86,286 |
| 10. | நீலகிரி | 4,02,791 |
| 11. | தஞ்சாவூர் | 33,07,654 |
| 12. | நாகப்பட்டினம் | 25,35,170 |
| 13. | திருச்சிராப்பள்ளி | 28,87,794 |
| 14. | புதுக்கோட்டை | 26,74,433 |
| 15. | மதுரை | 26,97,315 |
| 16. | திண்டுக்கல் | 27,87,563 |
| 17. | இராமநாதபுரம் | 20,84,078 |
| 18. | சிவகங்கை | 18,76,682 |
| 19. | விருதுநகர் | 23,66,915 |
| 20. | திருநெல்வேலி | 31,36,973 |
| 21. | தூத்துக்குடி | 21,97,630 |
| 22. | கன்னியாகுமரி | 9,64,527 |
| 23. | காஞ்சிபுரம் | 32,52,592 |
| 24. | நாமக்கல் | 20,71,123 |
| 25. | திருவாரூர் | 20,93,174 |
| 26. | கரூர் | 13,87,379 |
| 27. | பெரம்பலூர் | 22,62,817 |
| 28. | தேனி | 11,70,002 |
| | மொத்தம் | 7,73,71,248 |

# பழம் பாடல்
# - புதுப்பார்வை !

**முன்னுரை:**

பழந்தமிழ்ப் பாடல்கள் இலக்கிய இன்பத்திற்காக மட்டும் படிக்க வேண்டியவையல்ல; கருத்துப் புரடசிக்காகவும் கட்டாயம் படிக்கப்பட வேண்டியவை.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நம்மை எதிர் நோக்குகின்ற அரசியல், பொருளியல், சமூகப் பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையுங்கூட பழைய தமிழ்ப் பாடல்களில் நாம் பார்க்கலாம்.

இலக்கியம், இன்ப நுகர்ச்சிக்காக மட்டுமல்ல. அறிவு நெறிக்கும் வாழ்க்கை மேம்பாட்டுக்கும்கூட, கட்டாயம் தேவை என்று, கண்டு, சொன்னவன் தமிழன். உலக இனங்கள் எல்லாம் மொழிக்கு மட்டும் இலக்கணம் கண்டுள்ளன. தமிழ் இனம் மட்டும்தான், வாழ்க்கைக்கே இலக்கணம் கண்டுள்ளது. 2500 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் இவற்றோடு பொருள் இலக்கணம் என்பதையும் படைத்துத் தந்தது. எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு இது. எனவே, அரசியல், பொருளியியல், சமூகவியல் பார்வையில் பழந்தமிழ்ப் பாடலைப் பார்க்கும் முயற்சி இது.

**கம்பன் பார்வையில் பெண்களின் கல்வி, சொத்துரிமை**

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற கருத்தை முன்மொழிந்த பாரதி, அதற்கான காரணத்தைப் பின்னே வைக்கிறார். கல்வியில் சிறந்தது தமிழ்நாடு என்பதற்கு என்ன சான்று? இந்தக் கேள்விக்குப் பதிலை இரண்டாவது வரியில் எடுத்து வைக்கிறார் எட்டயபுரக் கவிஞர்.

'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு'

இது இரண்டாவது வரி; கம்பன் என்ற கவிஞன் பிறந்த ஒற்றைக் காரணமே 'கல்வி சிறந்த தமிழ்நாடு', என்ற கருத்தை விளக்கப் போதுமானது, என்பது பாரதியின் கருத்து.

இந்தியா முழுவதும் மலை இருக்கிறதோ இல்லையோ உலகத்திலேயே உயர்ந்த இமயம் இருப்பதால் மலையால் பெருமையுடையது இந்தியா என்று சொல்லலாம் தானே! அதைப் போல, தமிழர்கள் முழுவதும் கற்று விட்டார்களோ இல்லையோ கம்பன் என்றவொரு கவிஞன் ஆயிரம் கலைகளின் தாயகமாக விளங்கினானே அதனால் 'கல்வி சிறந்த தமிழ்நாடு', என்று பாரதி பாடுவதிலும் பொருள் இருக்கத்தான் செய்கிறது.

கம்பன், தான் கல்வியில் சிறந்தவனாக விளங்கியது மட்டுமல்லாமல், தரணிக்கே அதன் அவசியத்தை வலியுறுத்தியவன்.

தமிழகத்தில், மன்னராட்சிக் காலங்களில் கல்வி ஒரு தனிமனித முயற்சியாகவே இருந்தது; சமூகத்தின் குறிக்கோளாகவோ, அரசுக்குரிய பொறுப்பாகவோ இருந்ததில்லை. தப்புந்தவறுமாக எழுதப்பட்ட கல்வெட்டுகளைப் பார்க்கிறபோது, பொதுக்கல்வி முறையே இல்லையோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இந்தக் குறைகளெல்லாம் களையப்பட வேண்டும் என்று கம்பன் கருதியிருக்க வேண்டும். கம்பன் கண்ட கோசல நாடு ஓர் உயரிய கவிஞனின் ஒப்பற்ற அரசியல் சிந்தனையின் உச்சகட்டம். அது ஒரு கற்பனை தேசம். அதாவது 'உட்டோப்பியா' (Utopia).

பிளாட்டோவின் குடியரசைக் காட்டிலும் கம்பன் கண்ட கோசலம் அற்புதமானது.

பொதுக் கல்வியைப் பற்றிய பேச்சே இல்லாத காலத்தில், எல்லோரும் கற்றவர்களாக இல்லாத தேசத்தில் இருந்துகொண்டு, எல்லோருக்கும் கல்வி என்பதைக் கம்பன் பாடினான். அதுவும் அவன் காலத்து உலக நாடுகளில் கூட உதாசீனம் செய்யப்பட்ட பெண்கல்வியைப் பற்றி எவரும் மறுக்க இயலாத அளவிற்குப் பெருமித உணர்வுடன் பாடினான்.

"பெருந்தடங்கண் பிறை நுதலார்க்கெல்லாம்

பொருந்துகல்வியும் செல்வமும் பூத்தலால்"

என்னும் வரியை உலகக் கல்வியாளர்கள் தங்கள் கண்களில் ஒற்றிக் கொள்ளவேண்டும். ஆண்களுக்கான கல்வியே அவசியமாக்கப்படாத காலத்தில், பெண்களுக்கான கல்வியின் பெருமையைப் பாடியவன் பெரியோன் அல்லவா.

பெண்களுக்குக் கல்வியும், செல்வமும் உரிமை என்பதே இந்த வரிகளின் பொருள்.

'கல்வி உரிமையும், சொத்து உரிமையும் இயல்பாகவே பெண்களுக்கு உண்டு' என்கிறான் கம்பன்.

பூத்தல் என்று இந்தப் பாடலில் வருகிறதே அந்தச் சொல் ஆழ்ந்த பொருளுடையது. இயல்பாகத் தோன்றுவது என்பதே அதற்குப் பொருள். இந்தப் பூத்தல் என்ற சொல்லிலிருந்துதான் 'பூதம்' எனும் சொல் பிறந்தது. பூதம் என்ற சொல்லை, பச்சைப் பிள்ளைகளைப் பயமுறுத்துவதற்காக, தமிழன் பயன்படுத்திய காலம் பிற்காலம். பேய்க்கும், பிசாசுக்கும் இந்தச் சொல்லோடு தொடர்பில்லை. 'பஞ்ச பூதம்' என்கிறார்களே அதில் இருக்கிற 'பூதம்' தமிழ்ப் பூதம் ஆகிய இந்தப் பூதம்தான்.

உலகம் பூப்பதற்கு, அதாவது தோன்றுவதற்கு, நிலைக்களம் ஆதலால், நிலம் ஒரு பூதமாயிற்று; நீர் ஒரு பூதமாயிற்று; நெருப்பு ஒரு பூதமாயிற்று; காற்று ஒரு பூதமாயிற்று; வானம் ஒரு பூதமாயிற்று.

எனவே ''பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்'' என்பதற்கு, பொருந்திய கல்வியும், அரும் பெரும் செல்வமும் பெண்களுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உரிமைகள் என்றுதானே பொருளாகிறது!

கம்பன் கண்ட இந்தக் 'கற்பனா சோசலிசம்' நடைமுறைப்படுத்தப்படாததால், நம் நாட்டுப் பெண்கள் பட்டபாடும், படும் பாடும் தாளம் படுமோ! தறி படுமோ!

இந்தத் துன்பங்களை நீக்கி, கல்வியையும், செல்வத்தையும் பெண்களின் பிறப்புரிமையாக்கத்தான் தமிழ்நாடு அரசு பெண்கல்வி வாய்ப்பினை விரிவாக்கி பெண்களுக்குச் சொத்துரிமையையும் 1989-ல் சட்டமாக்கியது.

ஒரு கவிஞர் கண்ட கனவு இன்னொரு கவிஞர் காலத்தில்தான் நிறைவேறும் போலும்.

ஆம்! கம்பரின் கற்பனை கலைஞரின் காலத்தில்தானே நனவாகியது!

## குழந்தை

*குடத்தில் இருந்த பூசணிக்காய்கள்*
*குடிக்கூலி தராத இருட்டறை வாசிகள்*
*தாயைப் பார்த்திடத் தலைகீழாகத்*
*தவத்தில் நிற்கிற மானுடக் குஞ்சுகள்*
*பையைத் திறந்து தாமே வெளிவரும்*
*பத்து மாதத் சதைநா ணயங்கள்*
*கால்கள் முளைத்த குறுந்தொகைப் பாடல்கள்!*
*கைவிரல் படைத்த ரோஜா மொட்டுகள்!*

**- கவியரசர் இளந்தேவன்**

# "சிறகுகள் விரிப்போம்" - நேசச் சிறகுகள்!

- கவிஞர் நிர்மலா சுரேஷ்



## மேயர்

நகராட்சிக் கலையில்
ஒரு புதிய அலை

* பாதரசப் பக்குவத்தில்
பண்பாடு காக்கின்ற
இளைய நிலை

* உச்சி வெயில் ஆகாத
வைகறைச் சூரியன் இவர்
நெற்றிக்கண் இல்லாத
நேச தாண்டவம் !

* சிங்காரத் தூரிகை;
திராவிட ஓவியம் !

* ஒலி பரப்பல்ல;
ஒளி பரப்பல்ல,
செயல் பரப்புச் சாதனம்

## சேதமின்றித் தேசம் காப்போம்

* சுதந்திரப் பறவைகள் நாம் !-ஆனால்
பறக்கத் தெரியாத பறவைகள் !

* கூண்டுக் கிளியாய்
இருந்தபோதே
பேசமட்டும்
கற்றுக்கொண்டோம் !
கதவு திறந்து வெளியே வந்தும்
பறக்க மட்டும் தெரியவில்லை !

* நமது சமாதானப் புறாக்கள்
வியர்க்கும் போது
வெப்பம் தணிக்க
தம் சிறகுகளால்
விசிறிக் கொள்கின்றன !

* நமது தேசிய மயில்கள்
வெயிலுக்கும் மழைக்கும்
குடை போல்-தம்
தோகைகளை
விரித்தும் மடக்கியும்
திருப்தியடைகின்றன !

* நமது குடும்பக் குருவிகளோ
குளிருக்கு இதமாய்
இறுக்கமாய்
இறகுகளால் போர்த்திக்
கொள்கின்றன !

* நமது கலை அன்னங்கள்
காதல் தயமயந்திகளின்
பஞ்சணைக்குத் தம்
தூவிகளைத் தூவி விட்டன !

* நமது சேவல்கள்
சூதாட்டக் குழுக்களின்
பந்தயச் சாதனங்களாய்
கால்களில் கத்தியும்
முறிந்த சிறகுகளுமாய்
விடியலையே மறந்து
அஸ்தமனக் கூவலுக்கே
ஆளாகி விட்டன !

* நெருப்புச் சம்பவங்களை
விழுங்கி விட்டும்
தலையைப் புதைத்துக்கொள்ளும்
தீக்கோழிகளுக்கு
சிறகுகள், வெறும்
சிங்காரம்தான் !(அலங்காரம்தான்)

* சிறகுகளை முடியிலே
தரித்துப் பெருமைப்பட்டார்கள்
சிவப்பிந்தியர்கள் !

* சிறகுகளிலே
சாமரம் தயாரித்து
சிறுமைப்பட்டார்கள்
இந்தியர்கள் !

* சிறகுகள் என்பவை
கவரிகள் அல்ல;

* இரு பக்கச் சிறகுகளை
இருநூறு ஆண்டுகள்
விலங்கு எனவே
விளங்கிக் கொண்டவர்கள்

* சிறகுகளைச்
சுமைகளென்றே கருதி
முணுமுணுத்த பறவைகள் நாம் !

* சிறகுகளை
சம்பிரதாயச் சடங்காக்கி
பூஜை செய்தவர்கள் நாம் !

* சிறகுகளாலேயே
காகிதக் காற்றாடிகளைப்
பறக்கவிட்டுக்
குதூகலித்தவர்கள் நாம் !

* கூண்டடை விட்டு
வெளியே வந்தும்
கூடுகட்டிக் கொள்ளாமல்
புயலில் சிறகுகளை உதிரவிட்டவர்கள்
நாம் !

* காற்றில் மேலெழுந்த
தூசிகளைப் பார்த்து தலைவணங்கிக்
கும்பிட்டவர்கள் நாம் !

* நமக்கு சிறகுகள் இருப்பதையே
மறந்து விட்டுப்
பயணம் செய்ய
ஒரு பறக்கும் தட்டு வராதா
என்று ஆகாயத்தைப் பார்த்து
ஏங்கியவர்கள் நாம்

* நாம் சிறகுகளைப் பத்திரப்படுத்தி
சுதந்திரத்தைத் தியாகம் செய்கிறோம்
நாம் சிலைகளைக் காப்பதற்காக
உயிர்களைப் பலியிடுகிறோம்

* சாதிகளைப் பராமரிக்க
சந்ததிகளையே அழித்துவிடுகிறோம்.

* மதவெறியை நிலைநிறுத்த
மனசாட்சியைக் கொல்பவர்கள் !

* வர்க்கங்களை நீடிக்க
தருமங்கள் செய்பவர்கள் !

* பேதங்களை வளர்க்கவே
பெயர் வைப்பவர்கள் !

* பெயர் நீக்கிப்
பெயர் பெற்றவர்
இங்கே அமர்ந்திருக்கிறார்-

* பெயர்கள்
பிறப்பின் பூகோளக் குறிப்புகள் மட்டுமல்ல
மதங்களின் அடையாள அட்டைகள்
சமுதாயத்தின் சந்ததிப் பிழைகள்
சாதியின் வால்கள்

* விரியும் மனசின் ஆளுமை
இறுக்கும் பெயரைப் பிளக்கும்

* கவசகுண்டல
கர்ணத்தனங்கள்
பெயரில் இல்லை !

* பெயரால் பெறும்
வாழ்க்கையை விட
வாழ்க்கையால்
பெறும் பெயரே
புகழ் மிகும் !

* எல்லாப் பெயர்களும்
வேற்றுமையேற்பதே
இலக்கணம் எனில்
இதோ ஏசுவின்
மலைப்பொழிவில்
கூறப்படாத அந்த
ஒன்பதாவது வாசகம்
"அநாமதேயங்கள்
ஆசிர்வதிக்கப்படுவர்
ஏனெனில்
அன்புலகம் அவர்களுடையதே"

* காயம் பட்ட சமூகத்துக்கு
நேயத்தால் மருந்திடுவோம் !
சேதமின்றித் தேசம் காப்போம்

*- சுதந்திரத்திருநாள் பொன்விழாவினையொட்டி
சென்னை மாநகராட்சி 23.8.1997 அன்று நடத்திய
"சிறகுகள் விரிப்போம்!"
கவியரங்கக் கவிதையிலிருந்து...*

# நாகப்பட்டினம் மாவட்டத்தில், 222 கடலோரக் குடியிருப்புகளிலுள்ள ஐந்தரை இலட்சம் மக்களுக்கு ரூ.98.75 கோடி மதிப்பீட்டில், கூட்டுக்குடிநீர்த் திட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருத்துறைப் பூண்டி நகராட்சி, வேதாரண்யம், தலைஞாயிறு பேரூராட்சிகள், வேதாரண்யம் ஒன்றியத்தைச் சேர்ந்த 222 குடியிருப்புகள் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த 57 குடியிருப்புகளை உள்ளடக்கிய, சுமார் 5,47,000 மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியளித்திடும் வகையில், கொள்ளிடம் ஆற்றின் நீர் ஆதாரத்தைக்கொண்டு மிகப்பெரிய அளவிலான கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு, ரூபாய் 98.75 கோடி அளவிலான மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாட்டிலுள்ள கடலோர மாவட்டங்களில் ஒன்றாகும். இம்மாவட்டத்திலுள்ள 20 ஒன்றியங்களில் 8 ஒன்றியங்கள் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. வேதாரண்யம் ஒன்றியத்தின் அனைத்துப் பகுதி, முத்துப்பேட்டை ஒன்றியத்தின் ஒரு பகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சி மற்றும் வேதாரண்யம், தலைஞாயிறு பேரூராட்சிப் பகுதிகள் அனைத்தும் நீர், உவர்ப்புத் தன்மையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், குடிநீர்த் தட்டுப்பாடு மிகவும் மோசமாக உள்ளது. இப்பகுதியிலுள்ள மக்கள் பெரும்பாலும் குறைந்த ஆழமுள்ள கிணறுகள், அடிபம்புகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளையே நம்பியிருப்பதாலும், இவைகள் கோடைக் காலத்தில் வறண்டு விடுவதாலும், பாதுகாப்பான குடிநீர் திட்டம் செயல்படுத்துவது இன்றியமையாதது ஆகும். இப்பகுதியில் தற்பொழுது நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 5லிருந்து 10 லிட்டர் வரையில் மட்டுமே ஆகும்.

1986-87ஆம் ஆண்டில், திருத்துறைப்பூண்டி நகராட்சி, வேதாரண்யம் பேரூராட்சி மற்றும் வேதாரண்யம் ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்து குடியிருப்புகளுக்கும் பட்டுக்கோட்டை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு அமைத்துக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 13.68 கோடி மதிப்பீட்டிலும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.18.30 இலட்சத்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. 60 குடியிருப்புகளுக்கான மற்றும் ஒரு கூட்டுக்குடிநீர்த் திட்டம் மதிப்பீட்டு செலவு ரூ.250 இலட்சம் எனவும், மற்றும் ரூ.2.90 இலட்சம் ஆண்டு பராமரிப்புச் செலவில் தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால், பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக, மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை.

திருவைக்காவூர் அருகில், கொள்ளிடம் ஆற்றில் அமைக்கப்பட உள்ள நீர் சேகரிப்புக் கிணற்றிலிருந்து இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான குடிநீர்த் தேவை பெறப்படும். இத் திட்டத்தின் பிரதானக் குழாய் மிக அதிகமான நீளத்திற்கு இருந்தாலும் (94.95 கி.மீ. நீளம்) உத்தேசிக்கப்பட்டுள்ள நீர் ஆதாரம் நம்பத்தகுந்த மற்றும் எல்லாக் காலங்களிலும் நீர் வழங்கக் கூடியதாகும்.

திருத்துறைப்பூண்டி நகராட்சி, வேதாரண்யம், தலைஞாயிறு பேரூராட்சிகள் மற்றும் அனைத்து வழியோர 279 குடியிருப்புக்களும் பயன்பெறும் பகுதிகளுக்கும் தேவையான மொத்த குடிநீரின் அளவு நாளொன்றுக்கு 24.05 மில்லியன் லிட்டர் ஆகும்.

இத்திட்டத்தில் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு வழங்கப்படும் நீரின் அளவு பின்வருமாறு: திருத்துறைப்பூண்டி நகராட்சி - 90 லிட்டர், வேதாரண்யம், தலைஞாயிறு பேரூராட்சிகள் - 70 லிட்டர், வேதாரண்யம் ஒன்றியத்தைச் சார்ந்த 222 குடியிருப்புகள் - 40 லிட்டர் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 57 குடியிருப்புகள் - 40 லிட்டர்.

இத்திட்டத்தில் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புக்கள் ஏற்கக்கூடிய மதிப்பீட்டிற்கான விகிதாச்சார தொகை பின்வருமாறு:

திருத்துறைப்பூண்டி நகராட்சி - ரூ.13.58 கோடி, வேதாரண்யம் பேரூராட்சி - ரூ.14.62 கோடி, தலைஞாயிறு பேரூராட்சி - ரூ.14.49 கோடி, வேதாரண்யம் ஒன்றியத்தைச் சார்ந்த 222 குடியிருப்புகள் - ரூ.40.38 கோடி, முத்துப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த 57 குடியிருப்புக்கள் - ரூ.8.46 கோடி மற்றும் வரும் காலங்களில் பயன்பெறும் 203 குடியிருப்புகள் - ரூ.7.22 கோடி.

இத்திட்டத்தின், மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 98.75 கோடி ஆகும். நபர் ஒருவருக்கு ஆகும் செலவு ரூபாய் 666லிருந்து ரூபாய் 8,983 வரையிலாகும். ஆண்டு பராமரிப்புத், தொகை ரூபாய் 14 கோடி எனவும், 1,000 லிட்டர் குடிநீருக்கான கட்டணம் ரூ.16.27 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், பயன்பெறும் பகுதிகள் குடிநீர்த் தரம் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் வருவதால் தற்போதுள்ள நடைமுறைப்படி மத்திய அரசு மற்றும் தமிழக அரசுகளிடமிருந்து மதிப்பீட்டு தொகையில் தலா 50 விழுக்காட்டினைப் பெற்று, இக்குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவுற்றவுடன், தமிழக அரசின் கொள்கைப்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும். ஆண்டுப் பராமரிப்புச் செலவினைப் பயன்பெறும் உள்ளாட்சி அமைப்புக்கள் ஏற்க வேண்டும். தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டம் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 30 மாத காலத்தில் முடிவுறும் எனக் கருதப்படுகிறது. ◆

# பட்டதாரிகள் இல்லாத குடும்பத்து மாணாக்கர் மேற்படிப்புச் செலவை அரசே ஏற்கும் வழிகாட்டும் புரட்சித்திட்டம்!



பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களைச்சேர்ந்த 100 முதல்நிலை மாணாக்கர்களுக்கு, தொழில்பட்டப்படிப்புக் கற்க நிதியுதவி வழங்கும் விழா 20.10.97 அன்று சென்னை-கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்-மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பங்கேற்று நிதி வழங்கிப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர்கள்-திரு. ஆர்க்காடு என்.வீராசாமி, புலவர் செங்குட்டுவன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தம் சொற்பொழிவின்போது குறிப்பிட்டதாவது:

சற்றொப்ப 100 பேர், மாணவர்கள், மாணவிகள் இங்கே உதவித் தொகையையும், அவர்கள் தொடர்ந்து பட்டப்படிப்பை முடிக்கின்ற வரையிலே அரசின் சலுகைகளைப் பெறலாம் என்பதற்கான சான்றிதழ்களையும் பெற்றிருக்கிறார்கள்.

என் பெயர் கொண்ட ஒரு மாணவன் வந்த நேரத்திலே நான் புன்னகை புரிந்து கேலியாகச் சிரித்தேனேயல்லாமல், மற்ற மாணவர்களை, மாணவிகளையெல்லாம் கண்டபோது, ஒரு புறத்திலே மகிழ்ச்சி, இன்னொரு புறத்திலே உள்ளத்திலே என்னையறியாத ஒரு சோகம், அதே நேரத்திலே ஒரு ஆறுதல் - ஒரு நம்பிக்கை - இத்தனை உணர்ச்சிக் கலப்படத்தோடு நான் கலந்து கொண்ட நிகழ்ச்சி - என் வாழ்க்கையிலே இந்த ஒரு நிகழ்ச்சியாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். அந்த உதவிகளையும், சான்றிதழ்களையும் அவர்கள் பெற்றபோது அவர்களை எந்த ஊர் என்று விசாரித்தேன்.

சில கிராமங்களின் பெயர்களைச் சொன்னார்கள். சிலர் நகரங்களின் பெயர்களைச் சொன்னார்கள். நானாகவே அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடுமென்று யூகித்து-கேட்கக்கூடாது, இருந்தாலும் கேட்டு வைத்தேன். கேட்டபோது அநேகமாக நூற்றுக்கு தொண்ணூறு மதிப்பெண் எனக்குக்கிடைக்கின்ற அளவிற்கு வந்த பல மாணவர்கள் மிகச் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மாணவிகள், அவர்களுடைய கரங்களிலே வெறும் கண்ணாடி வளையல்கள் இருந்ததை நான் கவனித்தேன். கண்ணாடி வளையல்களை மட்டுமே அணியக்கூடிய அளவிற்கு, சாதாரண குடும்பத்திலே பிறந்த பெண்மணிகள், இன்றைய தினம் இந்த விருதினை-இந்த உதவித்தொகையினை-இந்தச் சான்றிதழ்களைப் பெறுகிறார்கள் என்றால், இன்றைக்கு

நூறு குடும்பங்களில் எதிர்காலத்திற்கான விளக்கை-நான் மின்விளக்கு என்று கூறமாட்டேன்-அகல் விளக்கையாவது ஏற்றி வைக்கக்கூடிய அந்த ஒரு வாய்ப்பு அண்ணாவின் தம்பிகளாகிய எங்களுக்கெல்லாம் கிடைத்திருக்கிறதே என்பதை எண்ணிப் பார்த்து நான் பெருமிதம் கொள்கிறேன்.

1989-90ல் நான் நீண்ட நேரம் யோசித்து சமுதாயத்திலே அக்கறை கொண்ட பலரோடு உரையாடி, அமைச்சரவையிலே கலந்து பேசி, பேராசிரியரிடம் விவாதித்து இருவரும் சேர்ந்து அன்றைக்கு ஒரு முடிவு எடுத்தோம்.

அந்த முடிவுதான் கிராமப்புறத்திலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மேலும் பயனடையத்தக்க வகையிலே ஒரு குடும்பத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மாத்திரமல்ல; மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மட்டுமல்ல; முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தால் கூட - அந்தக் குடும்பம் பொருளாதாரத்திலே பிற்படுத்தப்பட்டிருந்தால், அதற்கு அடையாளமாக - அந்தக் குடும்பத்திலிருந்து எந்தப் பட்டதாரி மாணவனோ இதுவரை வராமல் இருந்திருந்தால் - இப்பொழுது வருகின்ற மாணவன்தான் அல்லது மாணவிதான் முதல் பட்டதாரியாக அந்தக் குடும்பத்திலிருந்து வருகிறார் என்ற சூழ்நிலை இருந்தால், அவர்களுக்குத் தொழிற்கல்வி படிக்க, தேர்ந்தெடுக்கப்படுவதற்காகப் போடப்படுகின்ற மதிப்பெண்களில் ஐந்து மதிப்பெண் கூடுதலாகத் தரப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1989-90ஆம் ஆண்டு இந்த ஆணையால் பயன்பெற்ற மாணவ, மாணவியர் 400 பேர். அதற்கிடையிலே - நல்லவேளை அவர்கள் பயன்பெற்றபிறகு - ஒருசிலர் நீதிமன்றத்திற்குச் சென்று அந்த ஆணை தவறு, செல்லாது என்று தடையாணை பெற்றார்கள். அதன் பின்னர் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதைப்பற்றி யாரும் சிரத்தை கொள்ளவில்லை. அந்த ஆணை செல்லுபடியாகாமலே போய்விட்டது. 400 பேர் பயன்பெற்றதோடு சரி.

நீதிமன்றத்திலே அடிபட்டுப்போன இந்தத்திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட முடியுமா என்று 96-ல் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எண்ணிப் பார்த்தபோது - மறுபடியும் யாராவது நீதிமன்றத்திற்குச் சென்றால், அதே விளைவு ஏற்பட்டால் என்ன செய்வதென்று ஆதங்கத்தோடுதான் - இப்படியொன்றை யோசித்தோம். மாவட்டங்களிலே முதல் மூன்று மதிப்பெண்களைப் பெறுகின்ற மாணவ, மாணவிகளுக்கு, ஒருவகையிலே அவர்களுடைய கல்வியைத் தொடருகின்ற வகையிலே, அரசே செலவை ஏற்றுக்கொள்வதென்ற ஒரு திட்டத்தையும் - மாநில அளவிலே பட்டதாரிகளிலே இதுவரை இல்லாத ஒரு குடும்பத்திலிருந்து வருகின்ற ஒரு மாணவனோ, ஒரு மாணவியோ முதல் பத்து நிலைகளிலே மதிப்பெண் பெற்றிருந்தால், அவர்களுக்கு - அவர்கள் எந்தத் தொழிற்கல்வி பயிலச்சேருகிறார்களோ, அந்தக் கல்வியை -அது மருத்துவக்கல்வியோ - பொறியியல் கல்வியோ - வேளாண்மைக் கல்வியோ - கால்நடைக்கல்வியோ - பல்மருத்துவக்கல்வியோ - இதில் எந்தப் பிரிவில் சேருகிறார்களோ அந்தத் தொழிற்கல்வியை அவர்கள் பெற - கடைசிவரை அவர்களுக்கு அரசு உதவி செய்யும் என்ற திட்டத்தைத் தான்இன்றைக்கு நாம் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

அந்தத்திட்டத்தின்படி இங்கே இன்றைக்கு ஏறத்தாழ 100 மாணவர்கள் சான்றுகளைப் பெற்றிருக்கிறார்கள். உதவியைப் பெற்றிருக்கின்றார்கள். அப்படி உதவி பெற்றவர்களை எல்லாம் நான் வாழ்த்துகிறேன்".

## சொல் ஒன்று சொல்லுங்கள்

**"வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே!"**

**- என்று புதுமைக் கவிஞரும் போற்றிடும் தமிழால், மேற்கே மெத்த வளரும் புத்தம் புதுக்கலைகளையும் கற்கலாம்.**

**தமிழால் என்ன இயலும்? என்று கேட்கும் விந்தை மனிதர் தலைகவிழ, தமிழால் என்ன இயலாது என்று வினவும் வித்தக மனிதர்கள் ஆவோம்!**

**இதோ ஓர் அழைப்பு!**

ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு பொருளுக்குத் தமிழ் சூட்டுவோம்.

**இது உங்கள் பகுதி!**

**புதுச்சொல் படைக்கும் நீங்கள் அவ்வாறு பெயர் சூட்ட என்ன காரணம் என்பதைச் சுருக்கமாக விளக்கி எழுதலாம். ஒரு வார காலத்தில் எழுதி அனுப்புங்கள். தகுதி யுள்ளவை தமிழரசில் வெளியாகும் - தங்கள் பெயரோடு!**

இந்த 'இதழ்' உச்சரிக்கும் ஆங்கிலச் சொல் **PAGER.**

**உங்கள் இதழ் உச்சரிக்கும் தமிழ்ச் சொல் யாது?**

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே' என்று வள்ளலார் பாடியுள்ளார். எல்லோரும் விரும்பிப் பருகும் இளநீர் பல பிணிகளைத் தீர்க்கும் வல்லமை பொருந்தியது. கோடைகாலத்தில் அதிகமாக குளிர் பானங்களை அருந்துவதைத் தவிர்த்து, இளநீர் அருந்துவது உடலுக்கு நல்லது. இரத்தத்தைச் சுத்தமாக்கும் நல்லவிதமான இரசாயனப் பொருட்கள் நிறைய இருக்கின்றன. அதற்காக இளநீரை அதிகமாகவும் அருந்தக் கூடாது.

அவ்விதம் அருந்தினால் உடலில் இருக்கும் நீர் அதிகமாக வெளியேற்றப்பட்டு உடல் பலவீனமாகிவிட வாய்ப்புகள் உண்டு. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு தானே?.

இளநீர் மனித இனத்திற்கு இயற்கையின் விலைமதிப்பற்ற வரப்பிரசாதம். தாகத்தைத் தணிப்பது மட்டுமல்லாமல், மிக எளிதில் ஜீரணமாகிறது. ஜீரண உறுப்புகளைத் வேகப்படுத்தி, ஆகாரம் ஜீரணமாவதைச் சுலபமாக்குகிறது.

**தீரும் பிணிகள்:**

உடல் சூடு, நீர்ச் சூடு, சிறுநீர், நீர்க் கடுப்பு, நீரிழிவு, ஆஸ்துமா, காமாலை, சொறி சிறங்கு, அம்மை போன்ற பிணிகள் மற்றும் காலரா, வாந்தி, பித்த வாத கப சம்பந்தமான பிணிகள், மூலநோய், டைபாய்டு, பேதி, இரணம், நச்சுத்தன்மை,பருவு, கரும்புள்ளி, தோல்நோய், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு, ஹிஸ்டீரியா போன்ற பிணி, நரம்பு சம்பந்தமான பிணிகள் மற்றும் பல.

**பயன் முறை:**

எக்ஸிமா தோல் நிறமாற்றம்

அரிப்பு, கைகள், பாதங்களில்
ஏற்படும் வெடிப்பு. . .

ஒரு கையளவு பச்சரிசியை எடுத்துப் புதிய இளநீரை வாங்கிச் சீவி அந்த இளநீரைக் காயிலிருந்து வெளியேற்றாமல் அதில் போட்டு ஊறவைக்கவும். நன்கு ஊறி, புளித்த வாசனை வந்த பிறகு எடுத்து தோல் நிற மாற்றம், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு இவைகள்மேல் தொடர்ந்து பூசி வந்தால், நாளடைவில் வியக்கத்தக்க விதத்தில் நலமாகும்.

**சொட்டுச் சொட்டாக நீர் போதல்...**

இளநீர் வாங்கி, சீவி எடுத்து அதில் உள்ள இளநீரை ஒரு டம்ளரில் ஊற்றி ஆரஞ்சு ஜுஸ் அதில் கலந்து அருந்தி வரும் பட்சம் நாளடைவில் சொட்டு, சொட்டாகப் போகும் சிறுநீர் நீங்கி தாராளமாக வரும் சிறுநீர்.

**அம்மை நோயினால் ஏற்படும்
தழும்புகள் மறைய. . .**

மூன்று இளநீர் வாங்கி சீவி எடுத்து, அதற்குண்டான இளநீர் எடுத்துத் தடவினால் நாளடைவில் அந்தத் தழும்புகள் படிப்படியாக மறையும். இது அனுபவ முறை.

**ஹிஸ்டீரியா என்ற பிணிக்கு. . .**

தேவையான வாழைத்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட நீரை, இளநீரோடு கலந்து அருந்தி வரும் பட்சம் நாளடைவில் ஹிஸ்டீரியா போன்ற நரம்பு சம்பந்தமான பிணிகள் நீங்கி நலம் பெறும்.

**உடலின் தோலின் மீது கொப்புளம், சொறி, சிறங்கு மற்றும் தோலில் காணும் வறட்சி, முகத்தில் காணும் சுருக்கங்கள், பரு, கரும்புள்ளிகள் நீங்க. . . எளிய முறை:**

தேவையான இளநீர்களை வாங்கி அருந்தி வந்தாலும், தினசரி முகத்தை இளநீரில் கழுவி வந்தாலும், பருவு கரும்புள்ளிகள் படிப்படியாக நீங்கி, மாசு மருவற்ற தோற்றத்தை அடைய இதுபெரும் சக்தியாக அமைகிறது.

**குழந்தைகளுக்கு:**

இந்த இளநீரில் சில அமினோ அமிலங்கள், அலனைன், ஆர்ஜுனைன், சிஸ்டைன், சிரைன் - பசும்பாலில் உள்ளதைவிட அதிகமாக இருப்பதால், குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றதாக அமைகிறது.

**நீரிழிவு நோய் பிடிக்கப்பட்டவர்களுக்கும், ஜீரண உறுப்புக் கோளாறுகளால் வேதனைப்படும் குழந்தைகளுக்கும் இவை குணமாக . . .**

தேவையான தேங்காய் நீக்கிய இளநீர்களை வாங்கி தினசரி குழந்தைகள் அருந்தி வந்தால், அவர்களது தாகத்தை எளிதில் தீர்க்கும். ஜீரண உறுப்புகளும் நன்கு இயங்கும். மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறந்த பானமாக இது அமைகிறது.

**வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியினாலும், காலராவினாலும் அவதிப்படுகிறவர்கள் குணமாக . . .**

உடலில் நீர் வற்றிய நிலையில் குளுகோஸ் கொடுப்பதற்குப் பதிலாக இந்த இளநீரை அருந்தக்



கொடுக்கலாம். நாளடைவில் மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

**மூல நோய், பிராங்கைட்டிஸ், மலச்சிக்கல் . . .**

இளநீரோடு ஒரு மேஜைக் கரண்டி தேனை ஊற்றி அருந்திவந்தால் நாளடைவில் நோய்கள் நீங்கிப் பலனை எதிர்பார்க்கலாம்.

**மஞ்சட் காமாலைக்கு . . .**

சிறுநீர்க் காய்களில் இரத்த ஓட்டத்தை அதிகரித்து தாதுக்களில் ஏற்படும் விஷத் தன்மையை நீக்குகிறது. எனவே, மஞ்சட்காமாலைக்கு இளநீர் ஓர் வரப்பிரசாதம்.

**உடலில் சூடு, குடலில் இரணம், வாந்தி இவைகள் நீங்க...**

தேவையான இளநீர் வாங்கி அருந்துவதினால், உடலில் காணும் சூடு, குடலில் காணும் இரணம், வாந்தி இவைகள் நாளடைவில் நீங்கி நலம்பெறும்.

**ஆஸ்துமா, டைபாயிட், சிறுநீர்க் கோளாறு, பேதி. . .**

இளநீரைத் தொடர்ந்து அருந்துவது சாலச்சிறந்தது ஆகும். மேலும் பெரிய இரண சிகிச்சைக்குப் பிறகு கூட இளநீர் அருந்திவரும் பட்சம் இரணம் சீக்கிரமாகக் குணமாகிவிடும்.

உணவுக்கு முன் இளநீர் அருந்த வாத நோய் போகும். மாலையில் அருந்த மெய்மிற்பித்தம் போகும். காலையில் அருந்தக் கபம் அறும்.

உணவு உண்ட பின்பு இளநீர் அரை தம்ளர் உட்கொள்ள வாதம், பித்தம், சிலேத்துமம், கண்ணோய்,பாண்டு போன்றவை தீரும். மற்றும் மலம் கழியும், நோய் அணுகாது.

**இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெற. . .**

இளநீர் மிக முக்கியமான ஒன்று. தேங்காயை எளிதில் ஜீரணிக்க முடியாத ஒருவருக்கு, இளநீர் ஒரு நல்ல பானமாகும்.

நிறைமாத கர்ப்பிணியாக உள்ள சிலருக்கு நீர் இறங்குவதற்கு உள்ள சிரமத்தைப் போக்க, தேவையான வெங்காயத்தைப் பொரித்துப் பொடி செய்து ஒரு வேளைக்கு 2 கிராம் அளவு எடுத்து ஒரு இளநீரில் கலந்து கலக்கிக் கொடுக்க 15 நிமிடங்களில் நீர் தாராளமாக இறங்கி உடல் நிலை நலமாகும்.

**சிறுநீர் எளிதாக வெளிவருவதற்கு. . .**

கதலி வாழைப்பழத்தை இளநீரில் ஊற வைத்துச் சாப்பிடுவது, சிறுநீர் எளிதாக வெளியேற்ற உதவும்.

**கண்களுக்கு...**

போதிய அளவு இளநீர் அருந்துவதினால், நாளடைவில் கண்களும் மிகுந்த பிரகாசத்தை பெறமுடியும்.



**ஆரஞ்சு நிற இளநீர்-ஏலக்காய்**

குள்ளமான தென்னை மரத்தில் காய்க்கும் ஆரஞ்சு நிறமுள்ள இளநீர்க் காயை எடுத்து, அப்படியே நீரில் போட்டு, அது சிகப்பு நிறமாகும்வரை கொதிக்க வைத்து - பிறகு, இக்காமிலிருந்து இளநீரை எடுத்து சிறிது ஏலக்காய் பொடி சேர்த்துக் கலக்கி அருந்தி வரும் பட்சம் சிறு நீரும் மலமும் எளிதாக வெளியேறும்.

**சூட்டைத் தணிக்க . . .**

உடல், அளவுக்கு அதிகமாக சூடாகிவிட்டால், தேவையான இளநீரை எடுத்து அதில் சந்தனம் சேர்த்து அருந்த சூட்டைத் தணிக்கலாம்.

மது, புகையிலை ஆகியவைகளால் ஏற்படும் தீமையினால், இந்தப் பிணிகளை அகற்ற, காலையில் பல் துலக்கிய பிறகு ஒரு வாரம் தொடர்ந்து இளநீரை அருந்தி வர மேற்கண்டவையினால் ஏற்படும் தீமைகள் விலகும்.

இருதய நோய் உள்ளவர்கள் இளநீர் அருந்தக் கூடாது. மற்றும் இளநீர் அருந்திவிட்டு இளநீரில் உள்ள வழுக்கையாக இருக்கும் தேங்காயையும் சுரண்டி சாப்பிடக்கூடாது.

காரணம்? இதில் கொலஸ்டிரால் என்ற கொழுப்புச் சத்து அதிகம் இருக்கிறது. எனவே, இளநீர் அருந்திவிட்டு அவஸ்தைப் படுவதைவிட அருந்தாமலேயே இருந்துவிடலாம்.

நிக்கோபார் தீவில் இருக்கும் பழங்குடியினர் நோயுற்ற போதும், நோயிலிருந்து நலமாகி இருக்கும் போதுகூட அவர்கள் அதிகமான இளநீரை அருந்துகின்றனர்.

உலகப் போரின்போது கூட, போர் வீரர்களுக்கு, இளநீர் ஊசி மூலமாக உடலில் செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டதாக அறிக்கைகள் உள்ளன.

ஆயுர்வேத மருத்துவத்தில் கூட இளநீர் நீர்க்குழம்பு என்னும் லோஷன், பல மூலிகைகளை இளநீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்படுகிறது. உடலில் சேரும் நச்சுத் தன்மையைச் சிறுநீர் மூலமாக வெளியேற்ற இந்த இளநீர் உதவுகிறது. மேலும், மீனினால் ஏற்படும் நச்சுத்தன்மை, கொதிக்கவைத்த இளநீரை அருந்துவதனால் முறிகிறது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் காலராவினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இளநீரை ஊசி மூலம் செலுத்தி நோயைக் குணப்படுத்தியதாகத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இளநீரில் சலைன் ஆல்ப்யூமின்கள் போன்றவை இருப்பதால், காலரா நோயினால் ஏற்படும் வாந்தி தடுக்கப்படுகிறது.


**வினிகர் தயாரிப்பு:**

இளநீரில் வினிகர் தயாரிக்கப்படுகிறது. இளநீருடன் சம அளவு பழுப்புச் சர்க்கரை சிறிதளவு "பினிஸ்மேன் ஈஸ்ட்" சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஐந்து வாரம் வரை சேமிக்கப்படும்போது வினிகராக மாற்றம் அடைந்துவிடுகிறது. பிறகு இதன் பிரதான பிரிவு அதை வடிகட்டி சுத்தம் செய்து உபயோகப்படுத்தப்படுகிறது. இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இளநீரிலிருந்து வினிகர் வர்த்தக ரீதியில் தயாரிக்கப்படுகிறது.

அண்மையில் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இளநீரின் மருத்துவக் குணங்களைத் தமது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்கள். டைட்ராமைசின் என்று பொதுவாக அழைக்கப்படும் ஆக்சிடெட்ராசைக்ளின் என்னும் ஆண்ட்டிபயாடிக் மருந்தை இளநீரிலிருந்து மிக எளிதாக உற்பத்தி செய்யமுடியும் என்று பிலிப்பைன் தேச விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

குரும்பை கருவுற்றதில் இருந்து ஏழு மாதங்கள் கழித்து எடுக்கப்படும் இளநீரில் நல்ல தரமான நீர் கிடைக்கிறது. இதில் ஐந்து சதம் கரையும் உப்புக்கள் உள்ளன. ஏழு மாத காலத்தில் உள்ள இளநீரில் அதிக அளவில் சர்க்கரை உள்ளதால் அருந்துவதற்கு இனிப்பாக இருக்கிறது.

100 கிராம் இளநீரில் 17 கலோரி சத்துள்ளது. மேலும், இளநீரில் புரோட்டின் கொழுப்புச் சத்து, சோடியம், பாஸ்பரஸ், கந்தகம், குளோரின் போன்றவையும் பி, சி வகுப்பினைச் சேர்ந்த வைட்டமின்களும் உள்ளன. எனவே, இளநீருக்கு தகுந்த இனிப்பு, இளநீரிலுள்ள சர்க்கரைச் சத்தாலும், தாதுக்களாலும் ஏற்படுகிறது.



அண்மையில் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இளநீரின் மருத்துவக் குணங்களைத் தமது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்கள். டைட்ராமைசின் என்று பொதுவாக அழைக்கப்படும் ஆக்சிடெட்ராசைக்ளின் என்னும் ஆண்ட்டிபயாடிக் மருந்தை இளநீரிலிருந்து மிக எளிதாக உற்பத்தி செய்யமுடியும் என்று பிலிப்பைன் தேச விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

**பொதுப் பண்பு:**

இளநீரில் முக்கியமாகப் பெருவாரியாக இருப்பது சர்க்கரைச் சத்துக்கள் இளநீரை தினமொன்று அருந்துவதால், மஞ்சட்காமாலை, டைபாய்ட் மற்றும் அல்சர் என்று சொல்லப்படும் வயிற்று ரணம் முதலிய உபாதைகள் வர வாய்ப்பில்லை.

இளநீரில் இரத்தத்தைச் சுத்தமாக்கும் நல்லவிதமான இரசாயனப்பொருட்கள் நிறைய இருக்கின்றன. அதற்காக இளநீரை அதிகமாகவும் அருந்தக்கூடாது. ஏன் என்றால்? அவ்விதம் அருந்தினால் உடலில் இருக்கும் நீர் அதிகமாக வெளியேற்றப்பட்டு உடல் பலவீனமாகிவிட வாய்ப்புகள் உண்டு. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்.

இளநீரில் வழுக்கை என்று சொல்லப்படும் முற்றாசிலேடையை எடுத்து, வறுத்து கசகசாவுடன் சேர்த்தரைத்து உண்டால் வாய் ரணம், நெஞ்செரிச்சல் முதலியவை நீங்கி நலமாகும்.

இளநீர் பருகிய பின் வெட்டிப்போட்ட ஓடுகள், மட்டைகளைக் குடிசை வாழ்மக்கள் அடுப்புக்கு எடுத்துச் செல்வதை நாம் பார்க்கிறோம்.

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம். அது தென்னையாக இருப்பின் நன்மையாக இருக்குமே!

"தென்னைய பெத்தா - இளநீரு
பிள்ளைய பெத்தா - கண்ணீரு"

- என்பது கவியரசர் அமரர் திரு.கண்ணதாசனின் தத்துவப் பாடல்களில் ஒன்றல்லவா! ★

# “சமத்துவம் வாழட்டும்; சமத்துவம் வெல்லட்டும் !”

## வேலூர் பொய்கையில் சமத்துவபுரத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் கலைஞர் உரை !

“இன்றைக்கு 20 ஆயிரம் ரூபாய் ஆதிதிராவிடர்களுடைய தொகுப்பு வீடுகளுக்காக மத்திய அரசு தருகிறது. அது கான்கிரீட் வீடுகளாகக் கட்டுவதற்குப் போதாது என்று மேலும் 7 ஆயிரம் ரூபாய் சேர்த்து 27 ஆயிரம் ரூபாயில் அந்த வீடுகளை கட்டித்தருகிறது.

இவைகளன்னியில், இன்றைக்கு நாம் தொடங்கிய இந்த சமத்துவபுரத்திற்காக வீடுகள் கட்ட ஒரு வீட்டிற்கு 5-சென்ட் நிலம் - மற்ற வீடுகளுக்கெல்லாம் 3-சென்ட் நிலம் என்றாலும், இந்த வீடுகளுக்கு 5 சென்ட் நிலம், அதையும் வழங்கி அந்த வீடு கட்டுவதற்காக 35 ஆயிரம் ரூபாய் அரசாங்கமே மானியமாகத் தருகிறது. அந்த வீடுகளிலே வந்து - குடிபுக- வசிக்க விரும்புகிறவர்கள் அதற்கு மேல் அந்த வீட்டை வசதியாகக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதினால் அரசாங்கம் இலவசமாகத் தருகிற உதவி நிதி, மானியம் அந்த 35 ஆயிரம் ரூபாய் போக, அதற்கு மேலும் வசதி வாய்ப்பு வேண்டும்; வீட்டைக் கட்டிக் கொள்ள விரும்பினால் அதையும் அவர்களுக்கு அரசு கடனாகப் பெற்றுத்தரத் தயாராக இருக்கிறது.

இந்த சமத்துவபுரத்தினுடைய இதனுடைய பரப்பளவு சற்றொப்ப 13 ஏக்கர். இந்த மொத்த நிலமும் மேய்ச்சல் தரை புறம்போக்காக இருந்து, கிராம நத்தமாகச் செய்யப்பட்டு உத்தரவிடப் பட்டுள்ளது. இந்த நிலம் சர்வே எண் 187 மற்றும் 188. இது தேசிய நெடுஞ்சாலையின் அருகே அமைந்துள்ளது. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சமத்துவபுரத்திற்கு எதிர்ப்புறமாக அமைந்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையம் சர்வே எண் 185 சமத்துவபுரம் அருகிலேயே அமைய உள்ளது. சமத்துவபுரத்திலே குடியிருப்பதற்காக வீடுகள் கட்டுவதற்கு வடிவமைப்பு (LAYOUT) தலா ஐந்து சென்டாக 100 நபர்களுக்கு வழங்கப்படும். ஆதிதிராவிடர்களுக்கு 40 சதவிகிதம்; பிற்பட்டவர்களுக்கு 25 சதவிகிதம்; மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு 25 சதவிகிதம்; இதர வகுப்பினருக்கு 10 சதவிகிதம் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சமத்துவபுரத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பயனாளிகள் 100 பேரும்; 19 சாதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். விசாரணை முடியும் தருவாயில் உள்ளது. குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இதில் ஆதிதிராவிடர், அருந்ததியர், வள்ளுவர், இருளர், வன்னியர், குயவர், வண்ணார், நாவிதர், விஸ்வகர்மா, யாதவர், முதலியார், நாடார், குறவர், ஜோகி, அகமுடையார், கவர நாயுடு, கிறிஸ்தவர், பிராமணர், முஸ்லிம் ஆகியோர் இந்த 19 சாதிகளில் அடங்குவார்கள். இவர்கள் 100 பேரும் ஒரே குடியிருப்பில் வாழப்போகிறார்கள். இந்த அதிசயத்தை உருவாக்கத்தான் இன்றைக்குச் சமத்துவபுரம் அரும்புகிறது என்பதை மீண்டும் மனமகிழ்ச்சியோடு, பூரிப்போடு உங்களுக்கு நான் அறிவிக்கிறேன்.

இதைத் தவிர வீட்டுமனைக்கு ஒதுக்கப்பட்ட நிலம் போக மீதமுள்ள இடத்தில் பின்வரும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. என்னென்ன வசதிகள்! மின்மோட்டாருடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தெருவிளக்குகள், பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம், தொலைக்காட்சி அறை, நூலகம், வணிக வளாகம், தொடக்கப்பள்ளி, அஞ்சல் நிலையம், சமுதாயக்கூடம், வங்கியின் விரிவு படுத்தப்பட்ட கிளை, முக்கியச் சாலைகள் தார்ச் சாலைகளாக அமைத்தல், ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனி குடிநீர்க் குழாய் இணைப்பு, பகுதி நேர நியாயவிலைக்கடை, பேருந்து நிலையம் என்று இத்தனை வசதிகளும் இங்கே இருக்கும். 200 தென்னை நாற்றுகள், பிற மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த அனைத்து வசதிகளும் நிறைந்த வீட்டுமனைகள் - குறிப்பாக சாதிமத வேறுபாடு பாராட்டாதவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட உள்ளது.

இந்த சமத்துவபுரங்கள் தமிழகம் முழுவதும் தழைத்து ஓங்கட்டும், சமத்துவம் வாழட்டும், சமத்துவம் வெல்லட்டும். நாமெல்லாம் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அண்ணா அளித்த அந்தப் பொன்மொழிக்குக் கீழே அணிவகுத்து நிற்போம்”.

*- 24.10.97 அன்று, வேலூர் மாவட்டம் பொய்கையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.*



பொய்கை ‘சமத்துவபுரம்’ தொடக்க விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன், அனைத்துவகுப்பினரும், நல்லிணக்கத்தோடு, ஒற்றுமையாய் சமத்துவ அடிப்படையில் வாழ, உருவாகவிருக்கும் ‘சமத்துவபுர’த்துப் பிரஜைகளாக வேடமணிந்து நிற்கும் மாணவ, மாணவிகள்.

# வெற்றிகரமான ஒற்றைச் சாளரமுறை

# கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஒரு புதுமை

## - முதலமைச்சர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை

டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன்

தமிழ் நாட்டிலுள்ள சுயநிதிக் கல்லூரிகளில் நிலவிய கடுமையான குறைபாடுகளைப் பற்றிய முறையீடுகளைத் தொடர்ந்து 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாளன்று சட்டப் பேரவையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், மாநிலத்தில் சுயநிதிக் கல்லூரிகளில் நிலவுகின்ற வசதிக் குறைவுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய ஓர் உயர்நிலைக் குழு ஏற்படுத்தப்படுமென்று அறிவித்தார்.

அதன்படி, தமிழ்நாடு உயர்கல்விக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் அவர்களின் தலைமையில், முன்னாள் கல்விச் செயலர் திரு எச்.வி.என்.ஷெட்டி,இ.ஆ.ப. (ஓய்வு) மற்றும் சேலம் தியாகராஜர் பல்தொழில் பயிலகத்தின் முன்னாள் முதல்வர் திரு. ஏ.தீரஜ்லால் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழில்நுட்பக் கல்வித்துறை இயக்குநர் திரு. பி. பாலகிருஷ்ணன் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக்குழு சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் தொடர்ந்து குறைகளைக் கேட்டறிந்தது. இந்தக் கூட்டங்களில் ஏராளமான மாணவர்கள், பெற்றோர்கள், தனியார் குழுக்கள் மற்றும் நிர்வாகத்தினரின் பிரதிநிதிகள், இவர்களோடு உயர்கல்வியோடு தொடர்புடைய பெருமக்கள் பலரும் கலந்துகொண்டார்கள்.

இந்தச் சந்திப்புகளில் மாணவர் சேர்க்கை முறைகள் ஒழுங்குபடுத்தப்படவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அவ்வாறு ஒழுங்குபடுத்தினால் கீழ்க்கண்ட பலன்கள் ஏற்படும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

1. மாணவர் சேர்க்கை தொடர்பான காலதாமதத்தைத் தவிர்க்கலாம்.

2. ஒரு கல்வி நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்திற்கு மாணவர்களை மாற்றம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு நிர்ப்பந்தங்களைத் தவிர்க்கலாம்.

3. பொறியியல் கல்லூரியில் எந்தப்பிரிவு ஒதுக்கப்படுகிறது என்பதை மாணவர்களின் சேர்க்கையின் போதே உறுதி செய்ய முடியும். அதனால், முன்னர் இருந்ததைப் போல எந்தப்பிரிவு தங்களுக்கு ஒதுக்கப்படுகிறது மாணவர்களும், பெற்றோர்களும் ஆண்டு முழுதும் அவதிப்பட வேண்டிய அவசியமில்லை.

4. இரண்டாம் ஆண்டில், பாடப் பிரிவுகளை ஒதுக்குவதற்காக, சுயநிதிக் கல்லூரிகளில், பெருந்தொகைகள் பறிக்கப்படுவதை இதன் மூலம் தவிர்க்க முடியும்.

தங்கள் வசதிக்கேற்ப எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்கின்ற தெளிவான கருத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்பட வகை செய்ய வேண்டும். மேலும், ஆலோசனை வழங்கும் வேளையின் போதே அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு உதவி செய்ய வேண்டும்.

இந்தக் குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு 'ஒற்றைச் சாளரமுறை' ஒன்றை உருவாக்க 1997 மார்ச் திங்கள் 31-ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் உயர்நிலைக் குழு அளித்த இடைக்கால அறிக்கையில் தமிழ்நாடு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைச் செயலர்கள் ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் எடுத்துக் கூறப்பட்டன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 1997-98-ஆம் கல்வி ஆண்டு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கு இந்த ஒற்றைச் சாளர முறையை மேற்கொள்ள எல்லா உதவியும், ஒத்துழைப்பும் உடனே வழங்கப்பட வேண்டுமென்று உடனடியாக ஆணையிட்டார்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ், பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள, அதுவும் மிகக் குறுகிய காலத்திலே இந்தப் பணியை நிறைவேற்ற, அரசின் அனைத்துத் துறைகளும் முழு ஈடுபாட்டோடு ஒத்துழைத்தன.

முந்தைய மாணவர் சேர்க்கை முறைகளில் இருந்து

**"தங்கள் வசதிக்கேற்ப எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்கின்ற தெளிவான கருத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்பட வகை செய்ய வேண்டும். மேலும், ஆலோசனை வழங்கும் வேளையின் போதே அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு உதவி செய்ய வேண்டும்."**

வந்த நிச்சயமற்ற தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு, அவற்றின் மூலம் ஆதாயம் பெற்று வந்த சிலர் இந்தப் புதிய 'ஒற்றைச் சாளரமுறை'யை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் வலிமையான வாதங்கள் முன்வைக்கப்பட்டன. வழக்கில் அரசுக்கு வெற்றி கிட்டியது. இப்படிப்பட்ட தடைகளால், புதிய முறையைத் தொடங்குவதில், சிறிது காலதாமதம் ஏற்பட்ட போதிலும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் முழு நிறைவு அளிக்கும் விதத்தில், மாணவர் சேர்க்கும் முழுப் பணியும், குறித்த காலத்திலேயே நிறைவடைந்தது. அதன் பயனாக, செப்டம்பர் மாதத்தின் மத்தியிலேயே கல்வி ஆண்டு பெரும்பாலான பிரிவுகளுக்குத் தொடங்கியது. சிற்சில பிரிவுகளுக்கு மட்டும் அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கியது.

பொறியியல் கல்லூரிச் சேர்க்கைக்காக அங்குமிங்கும் ஓடி, ஓடி, அலைந்து தங்கள் பிள்ளைகள் இந்த முறை துன்புறவில்லை என்பதைக் கண்டு பெற்றோர்களும், பொது மக்களும் பெருமகிழ்வு அடைந்தார்கள். மாணவரும், மனநிறைவும், மட்டற்ற மகிழ்ச்சியும் பெற்றார்கள். இந்தப் புதிய மாணவர் சேர்க்கை முறையில், ஒவ்வொரு நிலையிலும் ஒளிவு மறைவு இல்லாமல் இருந்ததை அனைத்துத் தரப்பினரும் மனம் திறந்து பாராட்டினார்கள்.

**ஊரக மாணவர்களுக்கு ஒதுக்கீடு:**

அரசுக்குச் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மாணவர்களுக்கு, குறிப்பிட்ட எண்ணிக்கையில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய பெருந்தேவை உள்ளது என்று உயர்நிலைக்குழு பரிந்துரை செய்திருந்தது. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளும், பொறியியல் கல்லூரிகளில் கடந்த ஆண்டு மாணவர் சேர்க்கை பற்றிய புள்ளி விவரங்களும், ஓர் உண்மையை உணர்த்தின. நுழைவுத் தேர்வுகளுக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்போது, நகர்ப்புற மாணவர்களுக்குக் கிடைக்கின்ற வசதிகள் தங்களுக்குக் கிடைக்காமல் போவதால், கிராமப்புற மாணவர்கள் அவர்களோடு போட்டியிட இயலாத நிலையில் இருக்கிறார்கள் என்பதே அந்த உண்மையாகும்.

பெரும்பாலான கிராமப்புற மாணவர்கள், ஒன்று தொழிற் படிப்புகளில் இடம்பெற இயலாது இருந்தார்கள் அல்லது பணம் செலுத்திப் படிக்கும் தனியார் துறைக் கல்லூரிகளில், இடம் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அப்படிப் பெருந்தொகை கொடுத்துப் படிக்கவும் அவர்களில் பலர் இயலாமல் இருந்தார்கள். இந்நிலையை மாற்ற, சிறிய பஞ்சாயத்துகளில் உள்ளபள்ளிகளிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு படித்து வரும் மாணவர்களுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று உயர்நிலைக்குழு பரிந்துரை செய்திருந்தது.

“பெரும்பாலான கிராமப்புற மாணவர்கள், ஒன்று தொழிற் படிப்புகளில் இடம்பெற இயலாது இருந்தார்கள் அல்லது பணம் செலுத்திப் படிக்கும் தனியார் துறைக் கல்லூரிகளில், இடம் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அப்படிப் பெருந்தொகை கொடுத்துப் படிக்கவும் அவர்களில் பலர் இயலாமல் இருந்தார்கள். இந்நிலையை மாற்ற, சிறிய பஞ்சாயத்துகளில் உள்ள பள்ளிகலிருந்து பன்னிரண்டாம் வகுப்புபடித்து வரும் மாணவர்களுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று உயர்நிலைக்குழு பரிந்துரை செய்திருந்தது.”

இந்தப் பரிந்துரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்பட்டபோது, இப்படிப்பட்ட இட ஒதுக்கீடு, அது என்னதான் வழக்கமான வகுப்புவாரி ஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் என்ற போதிலும், அது எந்த அளவுக்கு அரசியல் சட்டப்படி செல்லுபடியாகும் என்னும் ஐயங்களும் தீவிரமாக எழுப்பப்பட்டன. இருந்தபோதிலும், நமது முதல்வர் அவர்கள் இந்தப் பரிந்துரையின் நியாயத்தை உணர்ந்து பொறியியல் கல்லூரிகளுக்கான 1997-98-ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கையின் போதே இது செயல்படுத்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். கிராமப்புறத்தில் வாழ்கின்ற மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளுக்கு ஈடுசெய்யும் வண்ணம் இந்த முயற்சி எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். ஒருவேளை, சில சட்டப்பிரச்சினைகளின் காரணமாக இது அனுமதிக்கப்படா விட்டாலும் கூட, ஒரு சீரிய செயலை மேற்கொண்டோம் என்னும் சிந்தையின் நிறைவு நமக்கு இருக்கும் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தாக இருந்தது.

நல்லவேளையாக நீதிமன்றத்திற்கு இது கொண்டுசெல்லப்பட்ட போது நீதி மன்றமும் இதை ஏற்றுக் கொண்டது.

இதன் விளைவாகப் பொறியியல் கல்லூரிகளில் இடம் பெற இயலாத அல்லது பெருந்தொகை செலுத்தி மட்டுமே இடம்பெற வேண்டிய சூழலில் இருந்த கிராமப்புற மாணவர்கள் பலர் தற்போது பொறியியல் கல்லூரிகளில் முன்னைவிட சாதகமான ஒதுக்கீடுகளைப் பெற்றிருக்கிறார்கள். உயர்நிலைக் குழுவின் பரிந்துரையும் அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேருள்ளமுமே இந்தச் சாதனையை நிகழ்த்தி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# ஜவஹர்லால் நேருவின் பார்வையில்...

## ★ ஜனநாயக - சோஷலிசம்

## ★ மதச்சார்பின்மை - ஒற்றுமை

## ★ அணிசேராக்கொள்கை - சமாதான சகவாழ்வு

எந்த ஒரு அரசமைப்பையும் விட சமத்துவத்தைச் சட்டமாகக் கொண்டு அமையப்பெற்றுள்ள ஜனநாயக அரசுதான், நானறிந்த வரையில் சிறப்பு மிக்கதாகும். அது வாழ்வியலில், அறத்தை நியமமாகக் கொண்ட ஒரு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தனிநபராகவோ, அல்லது ஒரு குழுவாகவோ, எவ்வகையில் நீங்கள் சிந்தித்துச் செயல்படுகிறீர்கள் என்பதை வைத்துதான், நீங்கள் ஜனநாயகவாதியா? அல்லவா? என்பதைக் கணிக்க முடியும்.

ஒழுக்கம், பொறுமை, பரஸ்பர மதிப்பு ஆகியவையே ஜனநாயகத்திற்குத் தேவையான வையாகும். ஒரு ஜனநாயக அமைப்பில், இணங்கவைத்தல், பரஸ்பர விவாதம் ஆகியவற்றினால்தான் மாற்றங்கள் நிகழுகின்றன; வன்முறைகளினால் அல்ல.

ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்; வாக்குரிமையைச் சமஉடைமையாகப் பெற்றிருப்பதால் மட்டுமே அது சமத்துவமாகாது; ஆனால், பொருளாதார, சமூகச் சமநிலையே ஜனநாயகத்தின் பொருளாகும். ஒரு பிடிவாதமான ஒரு கோட்பாட்டாலோ! அல்லது மதத்தாலோ நான் பிணைக்கப்பட்டவனல்ல; ஆனால், நான் மனிதனுடைய உள்ளார்ந்த ஆன்ம நெறியினை நம்புகிறேன். தனி மனிதனுடைய உள்ளார்ந்த பெருந்தன்மையை நான் மதிக்கிறேன். ஒரு கோட்பாடாக, அதை அடைவது என்பது சற்றுச் சிரமமே. சமத்துவத்தை வலியுறுத்துகிற ஒரு சமூக அமைப்பில், பெரிய வேறுபாடு இன்றி ஜனநாயகத்தை எய்திட இயலுமென்றே நான் நம்புகிறேன். பணம் படைத்தவரின் இழிவான நடத்தையை எவ்வளவு வெறுக்கிறேனோ அதே அளவு ஏழையரின் ஏழ்மை நிலையையும் நான் வெறுக்கிறேன்.

**ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்; வாக்குரிமையைச் சமஉடைமையாகப் பெற்றிருப்பதால் மட்டுமே அது சமத்துவமாகாது; பொருளாதார, சமூகச் சமநிலையே ஜனநாயகத்தின் பொருளாகும். ஆனால், நான் மனிதனினுடைய உள்ளார்ந்த ஆன்ம நெறியினை நம்புகிறேன்**

பாராளுமன்ற அமைப்பிலான அரசை, நாம் உயர்வாகக் கருதுகிறோம், ஏனெனில், சிக்கல்களைக் கூடி விவாதிப்பதில், அது ஒரு அமைதியான முறையாகும். ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை, எனினும், வாதிடுதல், விவாதித்தல், தீர்மானித்தல் அதை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றாலான, ஒரு முறையாகும். எவ்வகையிலேனும், ஒரு பாராளுமன்ற அமைப்பிலான அரசில், சிறுபான்மையினர்க்குச் செயலாற்ற ஒரு முக்கியப் பங்கு உண்டு. பெரும்பான்மையினர்க்கு வெறும் பெரும்பான்மை என்பதாலேயே இயற்கையிலேயே அதற்கான தனிப்பங்கு இருக்கத்தான் வேண்டும். சிறுபான்மையைப் புறக் கணிக்கின்ற பெரும்பான்மையாக அது இருக்குமெனில், அது பாராளுமன்ற ஜனநாயகத்தை நிறைவான, மனப்பாங்குடன் செயல்படுத்துவதாகாது.

போர்க் காலக் கண்ணோட்டத்தில்கூட, ஜனநாயக முறையைப் பயன்படுத்துவதென்பது ஒரு நல்ல முடிவின்பாற்பட்டதேயாகும்; எடுத்த எடுப்பிலேயே அடித்துச் செல்லக்கூடியதாக இருக்கக்கூடாது. அது வேகமாய்ப் பாய்ந்து செல்லக்கூடியதாக, கட்டுப்பாடின்றி இருக்கக் கூடாது என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே, போர் திணிக்கப்படுகின்ற நிலையிலும் கூட, மக்களின் உற்சாகத்தை ஜனநாயகப் பாணியில் பயன்படுத்துவது ஒரு வினாவாக மாறிவிடுகிறது; நாட்டைக் காக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாலும் கூட வரம்புக்குட்பட்டே அதைப் பயன்படுத்திட வேண்டும். நீண்ட தூரப் பார்வையின் அடிப்படையிலேயே நாம் சிந்தித்தாக வேண்டும். நம்முடைய மூச்சை, விரைவிலேயே இழந்துவிடுகிற நிகழ்ச்சியாக அது இருந்துவிடக் கூடாது. நாம் நீண்ட தூரம் ஓடியாக வேண்டும். அதற்கான தீர்மானத்தோடு நீண்ட தூரத்திற்குக் கொண்டு செல்லும் மனவுரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

சோஷலிசத்தை நம்முடைய குறிக்கோளாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏனெனில், இது நமக்குச் பொருத்தமானதாகத் தெரிவதாலும், பயன்தரக்கூடியதாக இருப்பதாலும், நம்முடைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இதை விடுத்து வேறு வழியேயில்லை என்பதாலும் சோஷலிச முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக் கிறோம். அமைதியான ஜனநாயக முறையினால், விரைவான வளர்ச்சியினைப் பெற இயலாது, எனச் சிலரால் பேசப் பட்டாலும், இக்கூற்றை என்னால் ஏற்க இயலாது. உண்மையிலேயே, இந்தியாவின், இன்றைய நிலையில், ஜனநாயக முறைகளிலிருந்து முரண்

படுகின்ற எத்தகைய எத்தனிப்பும் பிளவில் தான் கொண்டுபோய் விடும். அதோடு, முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் முடக்கப்பட்டுவிடும்.

**சோஷலிசத்தை நம்முடைய குறிக்கோளாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏன்? இது நமக்குச் பொருத்தமானதாகத் தெரிவதாலும், பயன்தரக்கூடியதாக இருப்பதாலும், நம்முடைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இதை விடுத்து வேறு வழியேயில்லை என்பதாலும் சோஷலிச முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.**

உலகப் பிரச்சினைகளுக்கு, தீர்வுகாணக் கிடைத்திட்ட, ஒரு திறவுகோல், சோஷலிசமே. வெறும் மனித இனநலப் பற்றாளனாக இல்லாமல், விஞ்ஞானப் பொருளாதார அடிப்படையிலேயே நான் இச்சொல்லைப் பயன்படுத்துகிறேன். எவ்வகையிலும், சோஷலிசம், பொருளாதாரச் சித்தாந்தத்தை விட, ஒருவகையில் சிறந்ததாகும். இது ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்பதனாலேயே அது என்னைப் பாதித்துள்ளது. ஏழ்மை, வேலையில்லாப் பெருஞ்சுமை, அவமதிப்பு, தன்னுரிமையற்ற நிலை ஆகிய இந்திய மக்களின் இத்தகு துயரங்களுக்கு சோஷலிசத்தைத் தவிர வழியேதுமில்லை. ஜனநாயகத்துடன் சோஷலிசத்தை எவ்வகையில் அமைதி மற்றும் சட்டப்பூர்வமான முறையில், இணைப்பது என்பதுதான், நம் முன்னேயுள்ள வினாவாகும். இந்தியா, தனக்கு முன் வைத்துக்கொண்டிருக்கிற பிரச்சினை இதுதான். எவ்வித வற்புறுத்தல் அல்லது கட்டாயத்தின் பேரிலும் இதனை நாம் வெற்றி கொள்ள இயலாது. மக்களின் நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் பெற்றுத்தான் இதை அமல்படுத்த வேண்டும்.

நம்நாட்டில், சோஷலிசப் பாங்குடைய ஒரு சமுதாயத்தை அமைப்பதே நமது குறிக்கோளாகும். இந்தியாவில், ஆண், பெண், குழந்தைகள் அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டுமென்பதும், ஏற்றத்தாழ்வுகள் மறைய வேண்டுமென்பதும் நமது குறிக்கோளாகும். இது ஒன்றும் எளிய குறிக்கோளல்ல, பயிற்சி, கல்வி மற்றும் இதுபோன்ற, ஒரு நூறு இதர வழிகள் மூலமாக மனித இயல்புகளை மேம்படுத்த வேண்டும் என்பதே இதன் பொருளாகும். நமது உணர்வுகளை, நமது சிந்தனைகளை, நமது செயல்பாட்டு முறைகளை, நாம் எவ்வாறு நெறிப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே சோஷலிசம் அமையும். இந்த மாற்றங்களை அமைதியான, நல்லிணக்க முறைகளுடன் கொண்டு வர வேண்டுமென்பது நினைவு கூற வேண்டிய முக்கிய அம்சமாகும்.

### மதச்சார்பின்மை - ஒற்றுமை

நம் நாட்டின், வரலாற்றில், நீண்ட நெடுங்காலமாகவே மிகவும் போலியான, பிரிவினைக்கு வழிவகுக்கும், எண்ணங்களின் தாக்கம் தொடர்ந்து கொண்டேயிருந்தது ஒருதுரதிர்ஷ்டமானதாகும்இதன்விளைவாகஆக்கப்பூர்வ நோக்கில் சென்றிருக்க வேண்டிய நமது மாபெரும் சக்தியனைத்தும் உட்பூசல்களினால் வீணடிக்கப்பட்டது. மேலும், இத்தகைய நிகழ்வுகளின் வாயிலாக, இந்திய நாட்டின் இத்தகு வரலாற்றிலிருந்து, நிச்சயமாக ஒரு சிலவற்றையாவது, நாம் படிப்பினையாகப் பெற்றிருக்க வேண்டும். சிந்தனையாற்றல், நடிப்பாற்றல், கலை நுணுக்கம், இசைத்திறம் போன்ற மனித முயற்சிகளின், ஒவ்வொரு துறையிலும், புலமை பெற்ற சாதனையாளர்களை நம்நாடு பெற்றிருக்கத்தான் செய்தது. அவரவர்கள், தத்தம் வழிகளில் தனித்தனியாக ஏகியதாலும், நாட்டைப் பிளவுபடுத்துகின்ற சுபாவம் நம்மிடையே நிலவியதாலும், இத்தகைய அனுபவங்களைப் பயன்படுத்திட எத்தனிக்காததால் நாம் தோல்வியுற்றோம்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணி, வலுப்படுத்திக் கொள்வதுதான், ஒரு நாட்டின் முழு முதற்கடமையாகும். இன்ன பிற நடவடிக் கைகளை ஒப்புவமை செய்து பார்க்க இதுதான் ஒரு அளவு கோலாகும். நாட்டை மறந்துவிட்டு, எமது ஜாதி, எமது மொழி, எமது மாநிலம், எமது குழு போன்ற குறுகிய எண்ணங்களுக்கு முக்கியத்துவம் அளிப்போ மேயானால், அது நமது நாட்டை அழிவுக்குக்கொண்டு வந்துவிடும்.


ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவரா? அல்லது நாட்டைச் சார்ந்தவரா? என்பதை ஒவ்வொரு இந்தியரும் தனக்குத்தானே பார்த்துக்கேள்வி எழுப்பிக் கொள்வாரேயானால், உறுதியாகத் தேசிய உணர்வு உருவாகின்ற வேளை வந்து விட்டது என்றே கருதலாம். இந்த நாட்டின் ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும், இன்னும் பார்க்கப் போனால், குழந்தைகள் கூட, எதிர்நோக்க வேண்டிய ஒரு சவாலுக்குரிய தருணமிது.

ஓரளவிற்கு, அரசியல் அடிப்படையில், ஒருமைப்பாட்டுணர்வு ஏற்பட்டுள்ளது என்றே நம்பலாம். எனினும், நாமெல்லாம் ஒருவர் என்ற பிரிக்க இயலா ஐக்கியத்தோடு கூடிய உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாடு இன்னும் ஆழமாக வேரூன்ற வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாகும். வியக்கத்தக்க நமது கலாச்சார வேறுபாடுகளை நிலை நிறுத்திக் கொள்ளும் அதே வேளையில், மிகவும் சக்திவாய்ந்த ஒரு தேசிய அமைப்பாக நமது நாடு உருவாகியாக வேண்டும். கலாச்சார, மத மற்றும் நமது மொழி வேறுபாடுகளை அடக்கி ஒடுக்கிக் களைந்துவிட வேண்டும் என்பதை நான் விரும்பவில்லை; சிச்சிறு சச்சரவுகளின் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகளை உணர்ந்து நாம் மாறியாக வேண்டும்.

நம்மைப் பிரிக்கக் கூடியதா? அல்லது ஒன்றுபடுத்தக்கூடியதா? என்று நமக்கு நாமே வினா எழுப்பிக் கொண்டு, ஒவ்வொரு செயலிலும் சிந்தித்து ஈடுபட வேண்டு மென்பதையே நான் வலியுறுத்துகிறேன். இதன் மூலம், உங்களுடைய நடவடிக்கைகளை, நீங்களே அளவுபார்த்துக் கொள்ள இயலும். நம்மைப்பிரித்துத் தனிமைப்படுத்தக் கூடியதாக இருப்பின், அவை கெட்டவையே. இதயப் பூர்வமாகவும், மன வலிமையுடனும்

நமது ஒற்றுமை இருக்க வேண்டும்; வெறும் வாய்வார்த்தையாக மட்டும் இல்லாமல், ஆத்மார்த்தமானதாக ஒழுக்கமும், ஒருமைப்பாடும் இருந்திடல் வேண்டும்.

இந்தியா, ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை நம்முடைய அரசியல் சட்டத்தில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்காக, இந்தியாவில் மதமே இருக்கக்கூடாது என்று அர்த்தமாகாது. அவரவர்களுடைய நம்பிக்கைகளைச் சமமாக மதித்தல்; எவ்வகை நம்பிக்கையை அவர்கள் வெளிப்படுத்தினாலும் அவைகளை ஏற்றுச் சமவாய்ப்பளித்தல் என்பதுதான் 'மதச்சார்பின்மை' என்பதன் பொருளாகும். இந்தியாவில் மிக மிக முக்கியமானதாக, நமது பண்பாட்டின் உயிரனைய நிலைப்பாடாக, நாம் எப்பொழுதும் இதனை மனதில் இருத்திக் கொண்டாக வேண்டும்.



நம்நாட்டில், எத்தகைய இன வாதத்தையும் நம்மால் சகித்துக் கொள்ள முடியாது; ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சமஉரிமை மற்றும் சமவாய்ப்பு இங்கு அளிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள, ஒவ்வொரு மதத்திற்கும்,நம்பிக்கைக்கும், முழு உரிமையை வழங்கிடும் 'மதச்சார்பற்ற' ஒரு நாட்டைத்தான் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

எதிர்கால வரலாற்றாளர்கள் என்ன கூறக்கூடும்? எல்லோரும் ஒற்றுமையாக உழைக்க வேண்டும் என்று கற்பித்த மாபெரும் தலைவர் மகாத்மாவைப் பெற்ற நாடு இது என்றுதானே பதிவு செய்வார்கள். ஒருவரையொருவர் பிரிக்கக்கூடிய தடைச் சுவரை உடைத்தெறியுங்கள் என்றுதானே மகாத்மா காந்தி அடிகள் கற்பித்தார். அரிஜன மக்களை முன்னேற்றமடையச் செய்யுங்கள் என்றும் அவர் வலியுறுத்தினார். எந்த ஜாதி, எந்தக் கோட்பாடு அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவராயினும், ஒவ்வொருவரும், முழு உரிமையையும், சுதந்திரத்தையும், சமமாகத் துய்ப்பவர்களாக இருக்க வேண்டுமென்பதே அவரது பேரவாவாகும். குமரிமுனையிலிருந்து, இமாலயம் வரை உள்ள நமது மக்கள், தங்களது புறச்சுமைகளைத் தூக்கியெறிந்துவிட்டு அண்ணல் காந்தியடிகளின் தலைமையையேற்று, ஒரே அணியில் ஒத்த மனத்தினராகக் கிளர்ந்தெழுந்து, முன்னோக்கிச் சென்றுதானே சுதந்திரத்தை வென்றார்கள். அதனால் தானே அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னர், வானவெளியில் இந்தியாவின் 'சுதந்திர நட்சத்திரம்' உதயமானது. உலக அரங்கில், இந்தியாவின் குரல் கேட்கத் தொடங்கியது; ஏனெனில், அது இந்தியாவின் சத்தியக்குரலாகவே இருந்தது. பின்னர், அதே இந்திய மக்கள், கவனமற்றவர்களாக, வீணான கனவுகளில் வீழ்ந்து தங்களுக்குள்ளே சண்டையிட்டுக்கொண்டனர். சில நேரங்களில் மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், சில சமயங்களில் மொழி அல்லது மாநிலத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொண்டார்கள். இத்தகு தவறான போக்குகளால் நம்மை நாமே இழந்துவிடக்கூடாது. நம் நாடு வீழ்ச்சியடைவதை, நாம் எவ்வகையிலும் அனுமதிக்கக் கூடாது. நம்முடைய பலவீனங்களினால், விலைமதிப்பற்ற கருவூலமாம், நம்முடைய சுதந்திரத்தை நம் கரங்களின் வாயிலாகவே நழுவவிட்டு விடக்கூடாது.

'அணிசேராமையும் - சமாதான சகவாழ்வும்'

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:- அமைதியின்பால் நாட்டம்; அதிகார வர்க்க நாடுகள் அல்லது அதிகாரவர்க்கக் கூட்டமைப்புகளுடன் அணிசேராமை; ஆனால், ஒவ்வொரு கருத்து மோதல்கள் அல்லது சொற்பூசல்களில், சுதந்திரமான அணுகுமுறை; தனி நபர் அல்லது நாட்டின் சுதந்திரத்தைப் பராமரித்தல்; வகுப்பு வேற்றுமையை அகற்றுதல்; உலகத்திலுள்ள பெரும்பான்மை மக்களை வருத்துகின்ற நோய், அறியாமை போன்றவற்றை அகற்றுதல் ஆகியவையாகும்.

இந்தியா விரும்புகின்ற, "அமைதியின்பால் நாட்டம்" என்பது ஒரு எதிர்மறைநிலையோ அல்லது நடுவுநிலைக் கொள்கையோ அல்ல. மகாத்மா காந்தியடிகளின் உபதேசங்களிலிருந்தும், நாம் மேற்கொண்ட சுதந்திரப்போராட்ட அனுபவங்களின் வாயிலாகவும் 'உலக அமைதி' என்ற உயிரனைய கொள்கையைத்தான் நாம் ஐயத்திற்கிடமின்றிப் பெற்றுள்ளோம்.

மனித சுதந்திரத்தை விரிவுபடுத்துவதும், உலக அமைதியைத் தொடர்ந்து பாதுகாத்தலுமே, நமது வெளி நாட்டுக் கொள்கையின், முக்கிய நோக்கங்களாகும். இந்தச் சகாப்தத்தில், இந்தியா வெளிநாட்டு அரசியலில் புதிதாக இருக்கலாம்; ஒப்புநோக்கில், வல்லரசு நாடுகளைப்போன்று படை வலிமையில் மிக அற்பமானதாகத் தோன்றலாம். தடமற்ற, கரடுமுரடான பாதைகளில், பலநூற்றாண்டுகளாகப் பயணித்துப்பெற்ற சிந்தனை மற்றும் அனுபவத்தின் வாயிலாகப் பல வீரதீரச் செயல்களை வாழ்க்கையின் அனுபவங்களாகப் பெற்ற பழம்பெருமைக்குரியது நம்நாடு. இத்தகு நீண்ட காலவரலாற்றில் அமைதியைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது, இந்தியனின் ஒவ்வொரு எழுச்சியும், அமைதியை வேண்டிய வாழ்த்துப் பாவாகவேதான் இருந்திருக்கிறது.

மகாத்மா காந்தியின் எழுச்சியில்தான், நம்முடைய கடந்தகால மற்றும் தற்கால அமைதிக்கான நுட்பம் மற்றும் நடவடிக்கைகளின் படிப்பினை அடங்கியுள்ளது. மனிதனுடைய சுதந்திர உரிமைக்குச் சவாலாக, அது எத்தகைய ஒரு முகாமிலிருந்து வந்தாலும், அதை எதிர்கொள்வதில், உண்மை நிலைக்கு ஒத்துழைப்பதில் நாம் குருடர்களாக இருந்ததில்லை; எங்கு மனிதச் சுதந்திரம் அழிக்கப்படுகிறதோ அல்லது நீதி மிரட்டப்படுகிறதோ அல்லது எங்கு ஆக்கிரமிப்பு நடைபெறுகிறதோ, அத்தகு தருணங்களில் இந்தியா உறுதியாக நடுவுநிலையை மேற்கொள்ளாது.

அமைதியும், சுதந்திரமும் பிரிக்க முடியாதவை, என்பதை நாம் நம்புகிறோம்; மனிதஉரிமையை மறுக்கும் செயல் ஏதாவதொரு இடத்தில் உருவாகினாலும், அது, எல்லா இடங்களிலும் சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிப்பதாகவும், பிரச்சினைகளுக்கும், போருக்கும் வழிவிடுவதாகவும் ஆகிவிடும்.காலனி ஆதிக்கம், பிறரது ஆதரவின்கீழ் வாழுகிற தன்மை மற்றும் அத்தகைய அடிமைநிலையிலுள்ள மக்களின் அடிமைத்தளையகற்றி, விடுவிப்பதில் இந்தியா குறிப்பாக ஆர்வம் கொண்டுள்ளது; எல்லா இனங்களுக்கும் அங்கீகாரம் என்ற தத்துவத்திலும் அவைகளுக்குச் 'சமவாய்ப்பு' என்ற செயல் நோக்கிலும், இந்தியா ஆர்வம் பூண்டுள்ளது. பிறர் மீதான ஆதிக்கத்தையோ, அல்லது பிற மக்களின் மீது சலுகை அடிப்படையிலான ஆதிக்கத்தையோ இந்தியா விரும்பவில்லை.

**பெற்ற சுதந்திரத்தைப் பேணி, வலுப்படுத்திக் கொள்வதுதான், ஒரு நாட்டின் முழு முதற்கடமையாகும்.**
**இன்ன பிற நடவடிக்கைகளை ஒப்புவமை செய்து பார்க்க இதுதான் ஒரு அளவு கோலாகும்.**
**நாட்டை மறந்துவிட்டு, எமது ஜாதி, எமது மொழி, எமது மாநிலம், எமது குழு போன்ற குறுகிய எண்ணங்களுக்கு முக்கியத்துவம் அளிப்போமேயானால், அது நமது நாட்டை அழிவுக்குக்கொண்டு வந்துவிடும்.**

இந்நோக்கில், இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கையும், அதன் அடிப்படை நோக்கங்களும், ''இந்தியாவின் கொடை'' என்பதில் ஐயமில்லை. ''சமாதான சகவாழ்வு'' என்ற, இக்கொள்கை பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு, உலகம் முழுவதும் இக்கொள்கை பரவியதோடு அல்லாமல், பெரும்பான்மை நாடுகளில், அது மாறுதலை உண்டாக்கியது என்பதோடல்லாமல் மேலும் படிப்படியாக கருத்தாழமிக்க அர்த்தங்களை ஏற்படுத்தியது. உட்பிரச்சினைகள், வெறுப்புகள், பகைகள் போன்ற கருத்து வேறுபாடுகளுக்கிடையில், உலகமானது, தவிர்க்க இயலாத நிலையில், நெருங்கிய நல்லிணக்கத்தை நோக்கியே முன்னேறியது; ஒரு ''உலக மக்கள் பொதுவுரிமையரசு'' என்ற ஒரு கட்டமைப்பை உருவாக்க முனைந்தது; குடியுரிமைபெற்ற மக்களையும், சுதந்திர நல்லிணக்கத்தையும் கொண்ட அத்தகைத்தான ஒரு உலகை நிர்மாணிப்பதற்காகத்தான் 'இந்தியா' எப்போதும் செயலாற்றும்.

ஒரு குடியுரிமைபெற்ற, ஜனநாயகக் குடியரசை, நாம் காண விழைவோமேயானால், அதற்காகப் பிற நாடுகளுடனான நல்லிணக்கத்தொடர்புகளை, நமக்கு நாமே, துண்டித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை; எனவே, அடுத்த நாடுகளுடன் இந்தியா, அமைதிக்காகவும், சுந்திரத்திற்காகவும் முழுமையான இணக்கத்தைக் கடைப்பிடிக்கும். பிரிட்டன், பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் யூனியன் போன்ற பெரிய மற்றும் சிறிய நாடுகளுடன் இந்தியா இணக்கமான நல்லுறவை வலுப்படுத்திக்கொள்ளும். ஆசியாவானது, ஒரு செய்தியை உலகிற்கு அறிவிக்க எத்தனிக்குமானால், இனிவரும் காலங்களில், ஏதோ ஒரு ஆதிக்க சக்தியின் 'ஆணவக்கட்டளை'க்குக் கீழ்ப்படிவதாக அது இருக்கக்கூடாது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் 'ஆமாம் ஐயா' என்று கீழ்ப்படிகிற இழிநிலை, இனி இருக்கவே இருக்காது, என நான் நம்புகிறேன். இத்தகைய இழிநிலைகளை நாம் ஏற்கனவே ஏராளமாக அனுபவித்து விட்டோம். பெரிய நாடுகளுடனான நட்புணர்வை, நாம் மதிப்போம்; ஆனால், அத்தகு தருணங்களில், அவர்களோடு, சமமாக அமர்ந்து, சகோதரத்துவ அடிப்படையில் கலந்துரையாடுவதாகத்தான் அது இருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பு, பல கட்டங்களில் தோல்வியுற்று, பலவீனமாக இருந்தாலும், ஒரு வகையில் அது ஒரு சிறந்த அமைப்பாகும். அவ்வமைப்பானது, ஒரு வகையான உலக அரசாக அல்லது உலக நிறுவனமாகத் திகழும் வண்ணம் ஒவ்வொரு வழியிலும் அதை அரவணைத்து ஊக்கப்படுத்திட வேண்டும்.

விரும்பியபடி வாழ, முன்னேற்றமடைய அவரவருடைய விதியை அவரவரே நிர்ணயம் செய்துகொள்ள, உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உரிமையுண்டு. சமாதான சகவாழ்வை மேற்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. அமைதியாகச் சேர்ந்து வாழவும், பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளவும் முழு உரிமையைத் தக்க வைத்துக்கொள்ளலாம். அவரவர்களுடைய கொள்கைகள், கோட்பாடுகள், நம்பிக்கைகளில் அவர்கள் மாறுபடலாம்.

கொள்கை, கோட்பாடு, நம்பிக்கைகளில் அவரவர்களுக்குள் நம்பிக்கையை, வலிமையினாலோ அல்லது பெரும் பலத்தைக்காட்டி அச்சுறுத்தியோ, எவராவது மாற்ற எத்தனிப்பார்களானால், அத்தகைய எந்தவொரு முயற்சியும், அனைவருக்கும் கேட்டையே விளைவிக்கும். பிறரை வெறுக்கின்ற மனப்பாங்கையும், வன்முறையையும், வேறுபாடுகளையும் விட்டொழித்தலே, 'சமாதான சகவாழ்விற்கான' ஒரே வழியாகும்.

நீதியும் தர்மமும் இதையே வற்புறுத்துகின்றன. ஆனால், நடைமுறைப் பொது அறிவு இன்னும் அதிகமாக இதை வற்புறுத்துகிறது.

போர், அமைதி, இயல்பு வாழ்வை நிலைநிறுத்தல் ஆகியவைகளைவிடப் பெரிய பிரச்சினைகளை, உலகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எதைத் தெரிவு செய்வது என்னும் பிரச்சினை இப்போதைப்போல் வேறெப்போதும் இந்த உலகை எதிர்நோக்கியதில்லை. தாமாக அழிந்து

போவதா, வாழ்வதா என்பதே இன்று தெரிந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

அனேக மக்கள், அணுவாற்றலைப் பயன்படுத்திடும் போர் அபாயங்களிலிருந்து தப்பிக்க, பதுங்குகுழி அமைக்கலாம் அல்லது எலிகளைப் போல் பொந்துகளில் மறைந்துகொள்ளலாம் என்று எண்ணியும், பேசியும் வருகின்றனர். நம்முடைய முழுச்சக்தியையும், ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தி, இத்தகைய பேராபத்துகளிலிருந்து தற்காத்துக்கொள்ள இயலாது போனால், இது நமது காலத்தில் நம் மீதான ஒரு மோசமான விமர்சனத்தையே உருவாக்கும்.

தொலைத் தொடர்பில் ஏற்பட்டுள்ள ஒரு புரட்சிகர மாறுதலாலும், அணுசக்தியின் வரவினாலும், மனித வர்க்கத்தின் மொத்தக் கட்டமைப்பே மாறிக் கொண்டிருக்கிறது. அரசியல் களத்தில் மாறிவருகிற இத்தகு சூழலில், சிறிய, பெரிய நாடுகள் நூறு சதவீத தேசிய சுதந்திர உரிமையைத் தக்க வைத்துக் கொள்ளவே விரும்புகின்றன; ஆனால், உலகத்தின், இன்றைய சூழலில் இதைத் தொடர்வது அவைகளுக்குக் கடினமானதே. இந்நிலையில், ஒருமுறையான 'உலக அமைப்பு'த் தோன்றியாக வேண்டுமென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை; ஆனால், அது தனி நபர் சுதந்திரம், தேசிய சுதந்திரம் ஆகிய இயல்பான உரிமைகளை இழக்கச் செய்திடும் வகையில் இருந்துவிடக்கூடாது என்பதையே நான் வலியுறுத்துகிறேன்.

தொகுப்பு : இரா.பரதன், எம்.ஏ.,
Source : **A study of Nehru by Rafiq Zakaria**



# குழந்தைகள்

தங்க மாதுளைச் செங்கனி பிளந்த
மாணிக்கம் அந்த மதலையின் சிரிப்பு
வாரீர் அணைத்து மகிழவேண் டாமோ
பாரீர் அள்ளிப் பருகமாட் டோமோ
செம்பவ ழத்துச் சிமிழ்சாய்ந்த அமுதாய்ச்
சிரித்தது பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம் சிரித்தது வானமே!

- பாவேந்தர் பாரதிதாசன்

இன்பக் கதைகளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ!
அன்பு தருவதிலே - உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ!

- மகாகவி பாரதி



பிள்ளைகளைத் திருப்திப் படுத்தும்
மனிதனைப் பெரியவர்களும்
மகிழ்ச்சியுடன்
ஏற்றுக் கொள்கிறார்கள்.

- ஜேம்ஸ் போஸ்வெல்

வாழ்நாளின் இனிமையான பருவம் இளமை!
ஆனால் நாம் இதனை
முதுமையில்தான் உணருகின்றோம்.

- கிளாடார்



ஆண்கள் மரங்கள்; பெண்கள் மரத்தைச் சுற்றித்
தழுவிக் கொண்டிருக்கும் கொடிகள்;
குழந்தைகள் கொடிகளில் கூத்தாடும்
மணமுள்ள மலர்கள்.

- இங்கர்சால்

# சுதந்திரப் போராட்டத் தியாகிகள் - பெரம்பலூர் மாவட்டம்

**லாடபுரம் மு. குருசாமி நாயுடு:**

இவர் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் உள்ள லாடபுரம் கிராமத்தில் 1908-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13-ஆம் நாள் பிறந்தார். 1941-ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டங்களில் கலந்து கொண்டு சென்னை மத்தியச் சிறைச்சாலையில் 4 மாதங்களும் வேலூர் சிறையில் 1 மாதமும் இருந்துள்ளார்.

மேலும் ஆங்கிலேயருக்கு எதிரான கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டதால் 24.11.1941 முதல் அலிபுரம் சிறையில் 6 மாதமும், பெல்லாரியில் 3 மாதமும் சிறை தண்டனை பெற்றுள்ளார். அதனையடுத்து 1942-ஆம் வருடம் பெரம்பலூர் கிளைச்சிறையில் 2 மாதம் பாதுகாப்புக் கைதியாக இருந்துள்ளார்.

வேலூர் மற்றும் சென்னை 'அரிஜன சேவா சங்கப்பள்ளியில்' கைத்தொழில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். தற்பொழுது தொடர்ந்து பொதுச்சேவையில் ஈடுபட்டு வருகிறார். இவர் திருமணம் செய்து கொள்ளாத தியாகி என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். கையால் காகிதம் தயாரித்தல் என்னும் நூல் எழுதி,பலரின் பாராட்டைப் பெற்றவர்.

**ஆனந்த விகடன்(7.11.1943)**

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் இந்தியாவுக்குத் தேவையான காகிதம் பூராவும் இந்தியாவிலேயே உற்பத்தியாகி வந்தது. ஆனால் இந்தியா நாளடைவில் அன்னியருடைய அரசாட்சிக்கு உட்பட்டதன் பயனாக, இந்தக் காகிதத் தொழில் சீர்குலைந்தது. வெளிநாட்டிலிருந்து வரும் காகிதத்தையே நம்பியிருக்கும்படியான நிலைமை நம் நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது.



யுத்தத்தின் விளைவாக, வெளி நாடுகளிலிருந்து வழக்கமாக வந்து கொண்டிருந்த காகிதம் இப்போது தடைபட்டுவிடவே, நம் நாட்டில் இன்று காகிதத்திற்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. என்ன விலை கொடுத்தாலும் காகிதம் கிடைப்பதில்லை. ஆகவே கையால் காகிதம் செய்யும் தொழிலை விருத்தி செய்தே இந்தப் பஞ்சத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தப்பத்தில் கையால் காகிதம் செய்வதைப்பற்றிய விவரங்கள் அடங்கிய இந்த அரிய நூல் வெளிவந்திருப்பது குடிசைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருவதாயிருக்கும். இந் நூலை மிகத் தெளிவாகவும், ஸ்வாரஸ்யமாகவும் எழுதியிருக்கும் ஸ்ரீ குருசாமி நாயுடுவுக்குத் தமிழ் நாட்டினர் கடமைப்பட்டவராவார்கள்".

**தினமணி (1.11.1943)**

"தன் பலத்தையே நம்பி வாழவேண்டியதன் அவசியத்தை யுத்தம் பல வகைகளில் இந்தியருக்குப் போதித்திருக்கிறது. காகிதப் பஞ்சம் கண்டோம். விஷம் போல் விலை ஏறியது. பணம் நிறைய கொடுத்தாலும் காகிதம் கிடைப்பது அரிதாகிவிட்டது.

வாழைச் சருகுகளிலும், காய்ந்த இலைகளிலும் எழுத வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காகிதத்துக்கு முற்றிலும் வெளிநாட்டையே நம்பி இருந்தால் . . .

நல்லவேளை! எப்போதும் போல் மகாத்மா இவ் விஷயத்திலும் இந்தியர் தவிக்காமலிருக்க ஒரு வழி காட்டினார். "ஒவ்வொரு பகுதியும் தனக்கு வேண்டிய பொருளைத் தானே தயார் செய்துகொள்ள" வேண்டுமென்றார். காந்திஜி உபதேசத்தோடு நிற்கவில்லை. அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தை ஆரம்பித்தார். பல குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிரளித்தார். அவைகளில் கையால் காகிதம் செய்வதும் ஒன்று. இச்சங்கத்தில் பயிற்சி பெற்ற பலர் நாடெங்கும் இத் தொழிலை போதித்தனர்.

இவ்வகையில் பயிற்சி பெற்ற ஸ்ரீ.மு.குருசாமி நாயுடு தம் செந்த அனுபவத்தைக் கொண்டு கையால் காகிதம் செய்யும் தொழில் முறைபற்றி எளிய நடையில் இப்புத்தகம் எழுதியுள்ளார்.

*தியாகிகள் விடுதலைவீரர்கள் மட்டுமல்ல, கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளித்த வித்தகர்களும் ஆவார்கள். காகிதம் கிடைக்காமல் காய்ந்த இலைகளிலும், வாழைச் சருகுகளிலும் எழுதவேண்டியிருந்த காலத்தில் அவர்கள் கையால் காகிதம் தயாரித்தார்கள். தானே அப்படித் தயாரித்தது மட்டுமல்லாமல்; 'கையால் காகிதம் செய்வது எப்படி' என்று நூல்எழுதி எல்லோரையும் ஊக்கப்படுத்திய லாடபுரம் மு.குருசாமி நாயுடு அவர்களை அந்த நாளில் பத்திரிகைகள் எப்படிப் பாராட்டின என்பதை இந்தக் கட்டுரையில் காணலாம். இந்த வகையில் இது ஒரு காலக்கண்ணாடி.*

கையால் காகிதம் செய்வதற்கு, முக்கியமாக வேண்டியது தண்ணீர் வசதி. இது இருக்குமிடங்களில் இத்தொழிலை நடத்துவதில் யாதொரு கஷ்டமும் இருக்காது. "பத்துத் தொழிலாளரை வைத்து தொழில் நடத்துவதற்கு வேண்டிய தன்மையில்'' இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

காகிதம் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள், கூழ் தயாரித்தல், காகிதம் எடுத்தல், காகிதம் செய்தல், கவர், பாக்கிங் மற்றும் பலவகையான காகிதம் செய்யும் முறை, கலர் கொடுக்கும் வகை ஆகியவைகளை 10 அத்தியாயங்களில் ஆசிரியர் விவரித்துள்ளார். "இக்காலத்தில் காஸ்டிக் கோடா கிடைப்பது அரிதானதால் அது இல்லாமலேயே காகிதத் தொழில் செய்யலாம். இதற்கு பதில் சுண்ணாம்புக் காரத்தைக் கொண்டே இத் தெர்ழில் செய்து வந்துள்ளோம்'' என்ற தங்கள் சொந்த அனுபவத்தையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இதற்கு வேண்டிய சாதனங்கள் சம்பந்தமான படங்கள் பலவும் இப் புத்தகத்தில் இருக்கின்றன. இத்தொழிலை நடத்த விரும்புவோர் - கதரையும், கையால் செய்த காகிதத்தையும் உபயோகியுங்கள்!

### திரு. தி.கே.சுப்பையா



இவர் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள திருமானூரில் 1923-ஆம் வருடம் நவம்பர் மாதம் 27ஆம் நாள் பிறந்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் 1941-ஆம் ஆண்டு நடந்த சத்தியாகிரகப் போராட்டம், பின்னர் 1942-ஆம் ஆண்டு நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் ஆகியவற்றில் பங்கேற்றுப் பலமுறை சிறைவாசங்களை ஏற்றுள்ளார்.

### சிறை செல்லுதல்

டி.கே. சுப்பையா அவர்கள் போர் எதிர்ப்பு பிரச்சாரத்தைக் கிராமம், கிராமமாக செய்துகொண்டு தனது சக தொண்டர்களுடன் கால்நடையாக டெல்லி நோக்கிச் சென்றார். வழியில் சென்னையில் ஆங்கில அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அங்குச் சத்தியாகிரகம் செய்யவே கைது செய்யப்பட்டனர். ஒரு சிலருக்கு இரண்டு மாத தண்டனையும், ஒரு சிலருக்கு ஒரு மாதம் தண்டனையும் அளிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் கூட்டம் கூட்டமாகக் கொண்டு செல்லப்பட்டு சென்னை "பெனிடியன் ஷிரி'' சிறையில் அடைக்கப்பட்டனர்.

டி.கே.சுப்பையா அவர்கள் தீவிரமாக மக்களிடையே யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தை விளக்கமாக விளக்கிக் கொண்டு சென்னையைச் சென்றடைந்தார். ஆங்கிலேயர்கள் இவரைக் கைது செய்வதற்காகத் தருணம் பார்த்து இருந்தனர். அங்குக் காங்கிரஸ் தொண்டர்களுடன் இவரும் சத்தியாகிரகம் செய்யவே ஆங்கில அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிபதியால் ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பெற்றார். இத்தண்டனையை நாட்டிற்காகத் தியாக நோக்குடன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். தொண்டர்களுக்கு உற்சாகமூட்டி அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார். அரியலூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களிலும் இருந்த முக்கிய காங்கிரஸ் தொண்டர்களையும், ஊழியர்களையும் செயலில் இறங்க ஊக்கமூட்டினார். பல மாவட்டங்களிலும் சுற்றிவிட்டு, தன் கடமைகளை முடித்து விட்டு விருதுநகர் சென்றார். அன்று இரவே காமராஜர் கைது செய்யப்பட்டார். இதன் காரணமாக பல மாவட்டங்களிலும் ஆகஸ்ட் போராட்டம் வெடிப்பதற்கு காமராஜர் அவர்கள் பெருந்துணை புரிந்தார்கள்.

### திருச்சி மாவட்டத்தில் ஆகஸ்ட் போராட்டம்

1942-ஆம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்ட் போராட்டத்தில் திருச்சி மாவட்டமும் தனது பங்கை நிறைவேற்றத் தவறவில்லை. திருச்சி மாவட்டத்தில் டி.எஸ். அருணாசலம் தலைமையில் செப்டம்பர் 5, 6-ஆம் தேதிகளில் உடையார்பாளையம் தாலுக்காவில் போராட்டம் நடைபெற்றதால் என். ஹாலாஸ்யம், குரும்பலூர் நடேச அய்யர் டி.எஸ்.அருணாசலம் மற்றும் அரியலூர் எல். சபாபதி பிள்ளை ஆகியோர் திடீரென கைது செய்யப்பட்டனர்.

ஆகஸ்ட் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். ஒரு சிலரின் தவறான நடவடிக்கைகளால் நீதிபதி டி.எஸ். அருணாசலத்தை மட்டுமே தண்டித்து ''அலிப்புரம்'' சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டார்.

### ஜெயங்கொண்டத்தில் ஊழியர்கள் படையெடுப்பு

ஜெயங்கொண்டம் தாலுகா அலுவலகத்தைத் தீயிடுவதுக்கென்று திட்டம் தீட்டப்பட்டது. பிரபல ஊழியர்கள் கைது செய்யப்பட்டதால் இத் திட்டத்தை நிறைவேற்ற திருக்களப்பூர், கூத்தூர், வெத்தியார் வெட்டு, சிலகால், முதலிய ஊர்களிலிருந்து காங்கிரஸ் ஊழியர்கள் பொதுமக்கள் பின் தொடர அதிகாலையில் ஜெயங்கொண்டம் நோக்கி புறப்பட்டனர்.

ஜெயங்கொண்டத்தில் காங்கிரஸ் ஊழியர்கள் போராட்டம் செய்யவே அவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் முக்கிய காங்கிரஸ் தொண்டர்கள் பன்னிரண்டு பேர்களாவர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதிபதி ஒன்பது மாதங்கள் தண்டனை அளித்துத் தீர்ப்புக் கூறினார். அவ்வாறு கைது செய்யப்பட்டுத் தண்டனை அளிக்கப்பட்டவர்கள் 'அலிப்புரம்' சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

டி.கே.சுப்பையா அவர்களுக்கு நீதிபதி ஒன்பது மாதங்கள் தண்டனை அளித்துத் தீர்ப்புக் கூறினார். இவருடைய தீவிரச் சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகவும், பலரையும் போராட்டத்தில் ஈடுபடுமாறு தூண்டியதன் காரணமாகவும் மேலும் மூன்று மாதம் கூடுதலாகத் தண்டனை பெற்றார்.

மேலும் 1952-62 சட்டமன்ற உறுப்பினராகவும், 1966-72 சட்டமன்ற மேல்சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். இவர் 1984-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் மாரடைப்பால் இறந்துவிட்டார். இவரது மனைவி பெயர் திருமதி இராஜேசுவரி அம்மாள். இவருக்கு இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர்.


## திரு.பி.எஸ்.சாம்பசிவம்



இவர் 1919-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ஆம் நாள் கரூரில் பிறந்தார். தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம் அரியலூரில் 32 வருடங்களாக வசித்து வருகிறார். 1932-ஆம் வருடம் பள்ளியில் 2-ஆம் வகுப்பு படிக்கும்பொழுது சுதந்திர முழக்கங்களை முழக்கி மாணவர்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வை ஏற்படுத்தியுள்ளார். 1939-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலகப்போரின் போது ஆங்கிலேயருக்கு இந்தியர்கள் உதவிடக் கூடாது என்னும் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

மேலும் 1939-ஆம் ஆண்டு முதல் 1944-ஆம் ஆண்டு வரை தண்டனைக் கைதியாகவும், பாதுகாப்புக் கைதியாகவும், வேலூர், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, தஞ்சை சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டுள்ளார். தற்பொழுது தொடர்ந்து பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

## திரு.வி.சிதம்பரம்



இவர் பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திலுள்ள மருதூர் கிராமத்தில் 1920-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ஆம் நாள் பிறந்தார். தற்பொழுது 30 வருடங்களாக அரியலூரில் வசித்து வருகிறார். 1941-ஆம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு சென்னை மத்தியச் சிறைச்சாலையில் 2 மாதம் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். தற்பொழுது மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகிறார்.


## திரு.எஸ்.எஸ்.ஆர்.முத்துக்குமாரசாமி



இவர் பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திலுள்ள மருதூர் கிராமத்தில் 1910-ஆம் ஆண்டு பிறந்தவர். தனது சிறுவயதிலிருந்தே விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். 1940-ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட 'தனி நபர் சத்தியாக் கிரகப்போராட்டத்தில்' கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

1946-ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி அவர்கள் ரயில் மூலம் அரியலூர் வந்தபொழுது, காந்திஜி அவர்களிடம் தனது கைக்கடிகாரம் மற்றும் தங்கச் செயினை அரிஜன நிதிக்காக வழங்கியுள்ளார்.

1972-ல் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தியாகிகளுக்கு கொடுக்கப்பட்ட தாமிர பத்திரம் பெற்றவர். காந்திஜி, ஜவஹர்லால் நேரு, படேல் முதலிய தலைவர்களை நேரில் சந்தித்துள்ளார். இவர் தற்பொழுது தொடர்ந்து பொதுச்சேவை செய்து வருகிறார்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில் 22.10.1997 அன்று, பொதுப்பணித்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், சிறந்த சேவையாற்றிய பொறியாளர்களுக்கு அண்ணா விருதுகளையும், நீர்வள ஆதார அமைப்பிற்கு புதிய ஆய்வு ஊர்திகளையும் முதலமைச்சர் **கலைஞர்** வழங்கினார். பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அருகில் உள்ளார்.

# விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்

## மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை-சேப்பாக்கம் வளாகத்தில், வேளாண்மைத்துறை இயக்குநர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 23.10.97 அன்று திறந்துவைத்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன், மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை இணைஅமைச்சர் திரு.டி.ஆர்.பாலு, மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்,



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"கடந்த ஆண்டு, இந்த ஆட்சி உருவான பிறகு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 23 வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களும், ஐந்து வேளாண்மை இணை இயக்குநர் அலுவலதங்களும் கட்டப்படத் தொடங்கப்பட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

### என்றைக்கும் புறக்கணித்ததில்லை

வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்காக இந்தக் கூடுதல் கட்டடம், கீழ்த்தளம், அடித்தளம் மற்றும் முதல்மாடி, இவற்றைக்கட்டி முடிக்க 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கியது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதியாண்டில் வேளாண்மை விரிவாக்க இனத்தின் கீழ் 9 வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகங்கள், 26 வேளாண்மை உதவி இயக்குநர் தகவல் மையங்கள் கட்ட, 17 கோடியே 22 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்வேன். இந்தக் கட்டடப் பணிகள் அனைத்தும் பொதுப்பணித்துறையினரால் மேற் கொள்ளப்படுகின்றன.

விவசாயிகளை நாம் என்றைக்கும் புறக்கணித்ததில்லை. பாதுகாக்கத் தவறியதும் இல்லை. அலட்சியப்படுத்தியதில்லை.

மேயர் ஸ்டாலின் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல அவர்கள் இந்தியாவின் முதுகெலும்புகளாக இருக்கிறார்கள். எனவே அந்த முதுகெலும்பிலே ஒரு கோளாறு வர, இந்த அரசு என்றைக்கும் பார்த்துக்கொண்டிருக்காது.

அதனால்தான் இங்கே அருமை நண்பர் வீராசாமி எடுத்துக்காட்டினார். மின்சாரத்தை இன்றைக்குப் பயன்படுத்தும் ஏழை விவசாயிகள், எளிய விவசாயிகள் என்றுகூட பாகுபாடில்லாமல், எந்த விவசாயிகளாக இருந்தாலும் அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குகின்ற ஒரே அரசு இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். பஞ்சாப்பிலே நம்மைப்பார்த்து அறிவித்திருக்கிறார்கள். அது நடைமுறைக்கு வந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இந்தியாவிலேயே அன்று முதல் இன்று வரை 1974-75ஆம் ஆண்டிலேயிருந்து தொடங்கி விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை நாம் வழங்குகிறோம்.

### புயல், வெள்ள நிவாரண நிதி

1996ஆம் ஆண்டு ஜூன் மாதம், மற்றும் அதே ஆண்டு டிசம்பர் மாதம் இந்த இரண்டு வேளைகளிலும் ஏற்பட்ட புயல், வெள்ளம்-இதனால் பாழ்பட்ட விவசாயிகள் பதைத்திட வேண்டாமென்று-அவர்களுக்காக 55 கோடி ரூபாய்க்கு மேல் நிவாரண உதவியை நாம் வழங்கியிருக்கிறோம்.

### விவசாயிகளின் வேதனையைத் தீர்த்திட அதிக அளவில் நெல்கொள்முதல்

எங்களுக்கு நீங்கள்தான் கைகொடுக்க வேண்டுமென்று விவசாயி கண்ணால் பார்த்துக் கேட்டாலே போதும், இந்த அரசைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கவலையைத் தீர்க்க-கரம் நீட்டக்கூடிய அரசு கழக அரசு என்பதற்கேற்ப ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மெட்ரிக் டன் நெல்லை, தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும், வேறு சில மாவட்டங்களிலும் இன்றைக்குக் கட்டாயக் கொள்முதல் அல்ல; அரசுக்குத் தேவையில்லாமலே அவர்களுடைய தேவையை நிறைவு செய்ய-அவர்களுக்காகச் சேவை புரிகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இன்றைக்கு ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மெட்ரிக் டன் நெல்லைக் கொள்முதல் செய்திருக்கிறது.

கடந்த காலத்திலே எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு, ஏறத்தாழ 400க்கு மேற்பட்ட கொள்முதல் நிலையங்களைத் திறந்து அந்த நெல்லையெல்லாம் வாங்கிய பெருமையும் இந்த ஆட்சிக்கு உண்டு. இப்படி விவசாயிகளுடைய தொல்லைகளை, துயரங்களைப் போக்குகின்ற அரசாக இந்த அரசு இன்றைக்கு இருக்கின்றது". ★

# 'குடிஅரசு'

முனைவர். நா. செயப்பிரகாசு

**இந்திய விடுதலைக்கு முந்திய தமிழ் இதழ்கள்:**
*(சென்ற இதழ்த்தொடர்ச்சி)*

**கவிதைகள்:**

சொல்லவரும் செய்திகளைச் சுவையான முறைகளிலும், வலியுறுத்த விரும்பும் கருத்துக்களை வனப்புமிகு வடிவங்களிலும், வெளிப்படுத்தும் முறைகளில், குடி அரசு இதழின், இலக்கிய நெஞ்சமும் புலப்படுகிறது. தொடக்க கால இதழ்களில் தோன்றாத கவிதைப் படைப்புகள், பாடல் மேற்கோள்கள் சுட்டப்பட்டவை தவிர காலப்போக்கில், படிப்படியாக இடம் பெற்று விளங்குதலைக் காண முடிகிறது.

குடி அரசுக்குப் பாவேந்தர் அளித்த வாழ்த்துப் பாடல், 'நமது பத்திரிகை' என்ற தலைப்பிலமைந்த பாடல் - என முன்னர் குறிப்பிட்ட பாடல்கள் மட்டுமல்லாமல், பல கொள்கைப் பாடல்களும், இரங்கற் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீ வ.வெ.சு. ஐயர் மீது 'சரம கவிகள்' என்ற தலைப்பில் (21.6.25) இதழில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் பாடல் இடம் பெற்றுள்ளது.



"தமிழ் மொழியின் பெருமை தன்னை
உலகறிய எடுத் தறைந்த
தனிப்பறையின்
பேரோசை தணிந்ததையோ
..... ..... .....
அமிழ்ந்து றங்கும் தமிழர்களை
அடிமையிருள் அகன்றதென அழைத்
தெழுப்பும்
கோழிகுரல் அடைந்ததேயோ
தேனாட்டும் தென்மொழியும் தெருளோட்டும்
வடமொழியும் தெளியத் தேர்ந்து
மேனாட்டின் பலமொழியும் மிகக் காட்டிக்
கடைந்தறிந்த ஞானமெல்லாம்
தாய்நாட்டின் விடுதலைக்கே தனி நாட்டித்
தவம்புரிந்த தகைமையாளர்
வானாட்டின் சிறந்ததென்பாய் தமிழ்நாட்டைத்
துறந்து நீ போய் வாழ்வா யெங்கே" (பக்.5)

இதைப் போலவே, தேசபந்துவுக்கான, தூத்துக்குடி ஏ. மாசிலாமணிப் பிள்ளையின் இரங்கற் பாவும் இடம் பெற்றுள்ளது. (5.7.25 பக்.11)

ஆர். வரதப்பனின், (31.1.26 பக்.11),

"தீட்டுத் தீட்டென்று சொல்லி தூரவிலக்கி
எங்களை ஆட்டிவைத்த காலமெல்லாம் அடியோ
டழிந்து
நாட்டின் சுதந்திரத்தை நாங்கள் அடைவோம் நீ
நாடிவர வேண்டாம் நீஓடு பேயே" என்னும்,

"தீண்டாமைப் பேயை ஓட்டும் பாட்டு"
இடம் பெற்றுள்ளது.

16.10.48 இதழில் வெளிவந்துள்ள், இரா.வ. பார்த்தசாரதியின் பாடல் இங்கு நினைக்கத்தக்கது.

"ஓதிய வேதங்கள் போதும் - அவை
நீதிக் கதையெனச் சாற்றிய தெல்லாம்
காதுக்கினிய தென்றாலும் - நம்மைச்
சாதிக் குழியினில் தள்ளியே தீரும்.
..... ..... .....
வள்ளுவன் காட்டிய வாழ்வு - அந்த
வள்ளற் பெருந்தகை வாழ்த்திய பாதை
துள்ளுகிழவர் பெரியார் - மூன்றும்
மெள்ளமெள் ளநம்மை மீட்டியே தீரும்"

20.10.48 இதழில், "ஒன்று கூடுவோம்" என்ற தலைப்பில்,

"தமிழ்நாடு செழிக்க நல்ல திட்டம்
போடணும்
தரணியில் சிறந்த நாடெனப் புகழ்பெற
வேணும்
கொஞ்ச நேரங்கூடச் சும்மா
குந்தியிராமல்
கொல்புலிபோல் தமிழ்காக்க ஒன்று கூடணும்"

என்னும் கி. இராவணன் பாடல் முழங்குகிறது.

மொழி நலங் காக்கும் முயற்சிகள் குறித்த பாடல்கள் பல உள்ளன. "பெருமாள் மாடு" என்ற தலைப்பில் அமைந்த புலவர் வாணிதாசனின் பாடல்: (25.9.48 சனி)

"டிடும்... டிடும்... டும்...
தமிழ்கெடும் எங்கள் தமிழ்கெடு மெண்ணு
உன் இனத்தவங்க ஊர்ஊராய்ச் சொன்னா
சட்டம் போடணும் தடியடி செய்யணும்
டிடும்... டிடும்... டும்...
இல்லா விட்டா பதவியை விட்டு
இழிச்சி விடுவேன் இழிச்சி விடுவேன்
நல்லதோ கெட்டதோ நான் சொல்லறதே
எல்லாம் செய்யணும் எல்லாம் செய்யணும்

டிடும்... டிடும்... டும்...
இந்தப் பெருமா மாடுக ளெல்லாம்
இனத்தையும் பாரா இழிவையும் பாரா;
பதவிக் காகத் தன்மானம் விற்று
செய்யும் எதையும்... எண்ணிச் செய்யாதே;
ஆனால் பெருமா மாடோ
தலையை ஆட்டும் தப்பு செய்யாதே !..."

"விரைந்து வாரீர்" என்னும் தலைப்பில் சாமி. பழனியப்பன்,

"செந்தமிழைக் காத்திடுவோம்! நீவி ரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் களநோக்கி விரைந்து வாரீர்"

குடி அரசு இதழின் பல பாடல்கள், தமிழ் மொழியின் நலன் காணும் முயற்சியாகவும் - காட்டும் முயற்சியாகவும் - காக்கும் முயற்சியாகவும் - விளங்குதல் வெளிப்படை.

**கட்டுரைகள்:**

குடி அரசு இதழில் வெளியாகியுள்ள கட்டுரைகள் பெரும்பாலும் சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகளாகவும், சமுதாய விழிப்புணர்வுக் கட்டுரைகளாகவும், சமுதாய மேம்பாட்டுக்கான கட்டுரைகளாகவும் விளங்குகின்றன. பெண்ணடிமை - புராண - இதிகாசப் பொய்ம்மைகள் - தீண்டாமை, மூட நம்பிக்கைகள் - கள்ளுண்ணாமை தொடர்பான கட்டுரைகளாக அவை அமைந்துள்ளன. சொற்பொழிவுகளும், பிற ஏடுகளின் மொழியாக்கங்களும், இதற்கெனவே எழுதப்பட்டவைகளும், இதில் கட்டுரைகளாக வெளியாகியுள்ளன. மொழி - கலை - இலக்கியம் தொடர்பான, கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இயந்திரமும், கை இராட்டினமும் (ஈ.வெ.ரா.), அன்பு (சிவாச்சாரிய சுவாமிகள் சொற்பொழிவு) தமிழ் மொழி வளர்ச்சி (டி.என். சிவஞானம் பிள்ளை சொற்பொழிவு) பெண்கள் அறம் (சிவாச்சாரிய சுவாமிகள் சொற்பொழிவு) - நெஞ்சு பொறுக்குதில்லையே (சி. ராஜகோபாலாச்சாரியார்) - இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள் (கி.ஆ.பெ. விசுவநாதன் பிள்ளை) துர்பாக்கியமான சோதரிகள் (காந்தியடிகள்) செயற்கை மழையின் உபயோகம் (வீ. சுப்பிரமணிய ஐயர்) காப்பிக் குடியும் மதுபானமும், வாலிபர் கடன், தமிழரசர்கள் க. பொற்கைப்பாண்டியன் (கே.எஸ். ஆறுமுகம் பிள்ளை) பால்ய விவாகம் (சோ. இரர்மசாமி) தீண்டாமை (ஈ.வெ.ரா. சொற்பொழிவு) இந்தியத் தொழிலாளர் (ஒரு தொழிலாளர் எழுதுவது) - எல்லோருமோர் குலம் (இளங்கோ) கிராமப் பிரவேசம் (ராமதாசன்) குருகுலம் (ஈ.வெ.ரா.) உண்மையான கல்வி எது (சுத்தானந்த பாரதியார்) - லஞ்சம் (ஈ.வெ.ரா.) திருவள்ளுவரும் மருந்தும் (என். சிவசுப்பிரமணியம்) தீண்டாமை இந்து மதத்திற்குச் சாபக் கேடா! உயிரா? தைரியம் (சுப்பிரமணிய பாரதியார்).

நாட்டுப்புறங்களின் நிலைமை-தமிழ் மக்கள் உயர்வு (தி.க.உலகநாதபிள்ளை) - பெண்கல்வி (திருப்பூர், கே.வி.வெங்கடாசலம் பிள்ளை) - தமிழ்மொழி (தி.க.உலகநாதம்பிள்ளை)- தமிழ்மொழி (மு.கோவிந்தராஜ நாட்டார்)... தமிழ்ப்பொழில் - பாஷாபிமானம் - இந்திய வறுமை-உண்மையான தீபாவளி (ஈ.வே.ரா)-இந்து மதத்தில் நமது பெண்களின் நிலைமை (வேப்பிரமாணம்)-பிறமதம் புகுதலும் தீண்டாமையும் (ப.வீரப்பபிள்ளை)- சிசுமரணம்-கிராம சுகாதாரம் (காசியர் மொழி பெயர்ப்பு)-பெண்கள் விடுதலை (மணமகள்) - தற்காலப் பெண்டிர்-தற்காலக் கல்வியிலுள்ள குறைகள் (எம்.ஏ.ஆண்டமுத்து கவுண்டர்)- குறள்-தமிழிற்கு துரோகமும் ஹிந்து பாஷையின் இரகசியமும் (சித்திரபுத்திரன்)-தொழிலாளர் இயக்கம்-தற்கால நிலைமை-போலீஸ் நிர்வாகம் -காந்தியின்றிக் கதிமோட்சம் இல்லை-சமத்துவம் (கொழும்பு சமத்துவ ஊழியனில் பெ.சுப்பிரமணிய செட்டியார் எழுதியது)-நூலறிவும் உணர்வும் -சுயமரியாதை உணர்வின் காரியம் (புதுவை பாரதிதாசன்)-தமிழைப் பிடித்த சனியன் (சாமி.சிதம்பரனார்)-கல்வி நீரோடை - எனப்பல - பல்துறைத் தலைப்புகளிலும் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கே.ஆண்டாள் அம்மாள் (நமக்கு இன்னும் சாதிவேண்டுமா) எஸ்.நீலாவதி (1.பெண்மக்களே எழுங்கள்-வைதீகக் கோட்டையைத் தகர்த் தெறிவோம் (2.அடிமை உலக விடுதலை) வைதீகர் கொடுமையும், தீண்டாதார் துயரமும், செல்வி சிவகாமி, சிதம்பரனார், ஆர்.நாகலட்சுமி, காஞ்சிபுரம் சுவர்ணாம்பாள் (கவிதை-தமிழகம் தழைக்கத் தாய்மார் வருவீர்) ஆர்.அன்னபூரணி அம்மாள் (இந்த ஆயாசம் எந்த நாட்டிலுள்ளது? ...வேத புராணங்களா வெகு கூடிவரக் குப்பைகளா - பதிலிருக்கும் பண்டிதர் வெளிவருக-இந்திய சகோதரிகளே இன்னும் உறக்கமா ?விழிமின். .எழுமின் !...1932 ஆனி 27.ப.6) எனப் பெண் எழுத்தாளர்களும், தமது பங்களிப்பைக் குடிஅரசு வழி தந்துள்ளனர். மூவலூர் ராமாமிர்தம்மாள் போன்றவர்களும் பெண்கள் விழிப்புணர்வு பற்றி எழுதியுள்ளனர்.

குடிஅரசு இதழின் நடையியல்பு-சமூகக் கண்ணோட்டம்-சமுதாயப் பொறுப்புணர்வு ஆகியனவற்றை வெளிப்படுத்தி விளக்கும் வகையில் அமைந்த சில பகுதிகளைப் பார்ப்போம்.

ஈரோடு பெண்பாடசாலையில் ஆங்கிலக்கூத்து. இம்மாதம் 1-2 வெள்ளிக்கிழமையன்று ஈரோடு உயர்தர ஆரம்பப் பாடசாலையில், நடைபெற்ற பரிசளிப்பு விழாவினைக் காணச் சென்றிருந்தோம். அங்குக் கண்ட காட்சியால், எமது மனம் பதைபதைத்ததை ஒரு சிறிதும் விவரித்துக் கூறுதல் இயலாது. ஒரு மேடையின் மேல் இளம் சிறுமிகள்

சிலர் ஆங்கில உடை தரித்து...மேனாட்டு முறையில் நடனஞ்செய்து கொண்டிருந்தனர் .. இக்கொடுங்காட்சி எமக்களித்த துயரம் ஒரு புறமிருக்க, மற்றொரு விஷயமும் எமக்குப் பெருந்துன்பத்தையளித்தது...இன்னொரு காட்சி. சிறுமியர் இருவர், அருவருக்கத்தக்க ஆடைகளாலும் அலங்காரப் பொருள்களாலும், விதூஷக வேடம் புனைந்து மேடைமீது கத்திக்கொண்டும் குதித்துக் கொண்டும் நின்ற நிலை, எமது மனத்தைத் துளைத்தது. என்னே! நமது வீழ்ச்சி! என்று எண்ணி, நாம் பெருந்துயர் உழந்தோம். நமது சிறுமிகள்-தமிழ்நாட்டுத் தவப்புதல்விகள்-கற்புத்திறம் பூண்ட கண்ணகி வழித்தோன்றிய கன்னியர், அறம் வளர்த்த அம்மை மணிமேகலை வழித்தோன்றிய மழலை மொழி மாணவிகள்-சிறுமை வழிகளில் வலியப் புகுத்தப்படுவதைக் காண மனம் ஆற்றாது உடனே திரும்பி விட்டோம்.

நாட்டிற்கே அவமானம். தேசிய உணர்ச்சி நாடெங்கும் பரவி வரும் இக்காலத்தில் நகரசபையாரால் பரிபாலிக்கப்படும் ஒரு பள்ளிக்கூடத்தில் பெண் குழந்தைகள் ஆங்கில நடனம் பழகக் கற்பிக்கப்படுதல் ஒரு பெரிய அழியாத அவமானமாகும். தற்காலக் கல்வி முறையே இத்தகைய சீர்கேடுகளுக்கு முக்கிய காரணம்.

பெண்மை அழியவா?..ஒரு கேள்வி?..(பாடசாலை நிறுவுதல்..)பிறந்த நாட்டு நாகரிகத்தில் வெறுப்பும் வெளிநாட்டு நாகரிக நடையுடை பாவனைகளில் விருப்பு ஏற்படும் வண்ணம் பயிலுவித்து வருங்காலத்தில் அவர்களின் குடும்ப வாழ்க்கையைப் பாழாக்குவதற்கா?...பண்பாட்டுப் பாதுகாவலனாகக் குடிஅரசு குரல் கொடுப்பதும் உணரப்படவேண்டியதாகும்.

(7.6.25 இந்துக்களின் கொடிய வழக்கம் என அமைந்த தலையங்க நடை)

"ஆ! கொடுமை! கொடுமை!...இக்கொடூரமான கொலையை-பாதகச் செயலைக் கேள்வியுற்ற இந்திய மக்கள் அனைவரும் மனம் பதைபதைப்பர், உள்ளமுருகுவர். உடலம் நைவர், கண்ணீரை ஆறாய்ப் பெருக்குவர், கரைகாணாத துன்பக் கடலில் வீழ்வர், இளஞ் செல்வச் சிறுமியர்களாக இருப்பின் நெருப்பில் வீழ்ந்த புழுப்போல் துடிதுடிப்பர். பெண்மக்கள் எனுஞ்செல்வம் படைத்த தாயாரும், தந்தையரும் மனங்கலங்கி, மாழ்ந்து, வெய்துயிர்த்து நிற்பர். விம்மி,விம்மி அழுவர்(ப.6)

இதைப்போன்றே 7.6.25 இதழ் பக்.7இல் ஐயர் பிரிந்தார் என்ற தலைப்பில், "பாபநாச அருவியில் நீராடி, விளையாடி, களியாட்டயர்ந்து, இயற்கைத் தேவியின் இன்பம் நுகர்ந்து-இன்ப வாரிதியில் திளைத்து நின்ற திருவாளர் வ.வெ.ஸு ஐயர் திடீரென மறைந்து விட்டார். தெய்வத் தமிழ்நாட்டையும் தீஞ்சுவைத் தமிழ்மொழியையும் விட்டு அகன்றார். எமதருமைத் தாய்நாடு, எழில்மிக்கு மாண்பமை மாநிலத்தரசியாய் விளங்கும் காட்சியைக் கண்குளிரக் கண்டு களிப்பெய்தி

## 'குடி அரசில்' பெரியார் எழுதியது

**த**மிழர் தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் மறைவு குறித்து 17.3.1940ஆம் நாளைய 'குடியரசு' ஏட்டில்-- "பன்னீர் செல்வமே மறைந்து விட்டாயா?" என்கிற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியதில் சில பகுதிகள் இவை:

... 'காலஞ்சென்ற பன்னீர்செல்வம் என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது. நெஞ்சு 'திக்திக்'கென்று அடித்துக்கொள்கிறது. மெய் நடுங்குகிறது. எழுதக் கையோடவில்லை. கண் கலங்கி மறைக்கிறது. கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது. பன்னீர்செல்வத்திற்குப் பாழும் உத்தியோகம் வந்ததும் போதும், அது அவரது உயிருக்கே உலையாய் இருந்ததும் போதும். அவர், தமிழர்களைப் பரிதவிக்கவிட்டு மறைந்துவிட்டார்'. . .

'என் மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்தபோதும் இயற்கைதானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா? இது பேராசையல்லவா என்று கருதினேன். பத்து வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன், படித்துவிட்டு இந்தியா வந்து சேர்ந்து சரியாக இருபதாவது வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; கதறவில்லை.'

'பன்னீர் செல்வத்தின் மறைவு மனதை வாட்டிடுகின்றது. தமிழர்களைக் காணுந்தோறும் தமிழர் நிலையை எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கிறது. காரணம்--முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுகதுக்கத்தைப் பொறுத்தது. தன்னலம் மறையும்போது, அவர்களது மறைவின் நினைவும் மறந்துபோகும். பன்னீர் செல்வத்தின் மறைவு பொது நலத்தைப் பொறுத்தது. எனவே, தமிழர்களைக் காணுந்தோறும் நினைக்குந்தோறும் பன்னீர்செல்வம் ஞாபகத்திற்கு வருகின்றார். இது என்று மறைவது? இவருக்குப் பதில் யார் என்று மனம் திகைக்கிறது. பாழாய்ப்போன உத்தியோகம், சர்க்கரை பூசிய நஞ்சுருண்டைக்குள் குத்திய தூண்டில் முள்ளாக இருந்துவிட்டது. ஆம், முள்ளில் பட்ட மீனாக ஆகிவிட்டார் செல்வம். இனி என் செய்வது?...'

நிற்கும் பெரும்பேற்றின் மீதுள்ள பேரவாவினைத் துறந்து செல்லவும் ஒருப்பட்டனர்''-என அமைந்த தமிழ் நடையின் தன்மையும், தகைமையும் உணரப்பட வேண்டியவை.

அன்றைய கல்வி பற்றிய, கருத்தும் - கணிப்பும் பற்றிக் குடியரசு கொடுத்த குரல்(30.8.25,ப.3)

"சென்னையில் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா.

இவ்வருடம் சென்னை மாகாணத்தில் 84 ஸ்திரிகளுள்பட 1744 பேருக்கு அடிமை முத்திரை வைக்கப்பட்டது.

மணிகளாகவும், மாணிக்கங்களாகவும் உள்ள பல வாலிபர்களும் ஸ்திரீ ரத்னங்களும் அடிமை முத்திரையைப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அதாவது இவ்வருடம், சர்வகலாசாலைப் பட்டம் வழங்கிய விழாவில்...அரசாங்கத்தார் அவர்களது கல்வியான அடிமைத்தன்மையைப் போதித்து ... அடிமை முத்திரையைத் தலையிலடித்து, அடிமைச் சின்னத்தையும் கையில் கொடுத்து, அடிமைக்குத் தக்கவன் என்ற நற்சாட்சிப் பத்திரமும் அளித்து வெளியிலனுப்பி விடுகிறார்கள். இவ் அடிமைகளால் உலகும், உலகிலுள்ள ஜீவன்களும், சத்தியம், கர்மம், நீதி, அன்பு, பரோபகாரம், தேசபக்தி இன்னோரன்ன பிறவும், கடவுள் ஒருவர் இருக்கிறாரா? என்றும் சந்தேகப்படத்தக்க வண்ணம் நாசமடைந்துவருகிறது...இதில் ஆங்கிலேயக் கல்வி முறைகளால் நேர்ந்த இழிவுகளையும் - தவறான வழிகாட்டுதல்களையுமே குடிஅரசு குறிப்பிட்டுக்கூற முற்பட்டுள்ளமை எண்ணப்பட வேண்டியதாகும்.''

பல்கலைக்கழக நியமனங்கள் குறித்தும், தமிழ் மொழியின் நிலை குறித்தும் குடிஅரசு கொண்டிருந்த அக்கறையும் வெளிப்படுகிறது.

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தி எதிர்ப்புக் காலத்தில், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் பாடுபட்ட தோழர் டி.பி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டபோது வெறுப்புற்றிருந்த பல தமிழ் மக்கள் அறிஞர் அ. சிதம்பரநாதனார் பேராசிரியராக வந்த செய்தி கேட்டு மிகவும் மகிழ்வெய்துகின்றனர்.

அறிஞர் அ. சிதம்பரநாதனார் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ் ஆசிரியர்களின் உயர்வுக்கும் தமிழ்நாட்டின் விடுதலைக்கும் பாடுபடுவதையே குறிக்கோளாகக் கொண்டவர். எனவே, அன்னார் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்றமையான தமிழ் மக்கள் பெரிதும் பயனடைவர் என்பது உறுதி''
(ஆர். 27.7.1946 ப.2)

சமுதாயப் பொறுப்புணர்வும் விழிப்புணர்வும் வேண்டும் பகுதியில் அமைந்த நடை:

''திராவிடர்கள் பலர் தங்கள் அறிவையும் மானத்தையும் இழந்து இப்பண்டிகையைக் (கார்த்திகைப் பண்டிகை) கொண்டாடுகின்றனர்.

இப்போது காலம் மிக நெருக்கடியானது. எங்கும் பஞ்சம் தலை விரித்தாடுகின்றது. உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை என்ற பேச்சே மக்களின் அன்றாடப் பேச்சாகவுள்ளது. இந்நிலையில் நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள விறகுகள் வீணாகக் கொளுத்தப்படப் போகின்றன. அளவில்லாத எண்ணெய்யும் நெய்யும் பாழ்படுத்தப்படப் போகின்றன. இரயில் வசதி போதிய அளவுக்கு இல்லாத இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பல வகையிலும் தொல்லைப்படத்தான் போகின்றார்கள்.

இவர்களுக்கு என்றுதான் அறிவுக் கண் திறக்கப்படுமோ'' (20.11.1946. ப.7)

இதழியல் கூறுகள்:

இதழ்களின் இன்றியமையாக் கூறுகளாக விளங்கும், துணுக்குகளாகவும் துண்டுகளாகவும் அமைந்த உரையாடல்கள், விளம்பரங்கள், செய்தித் திரட்டு, மதிப்புரை, கருத்துப்படம், பிழைதிருத்தம் (சிறுகதை) போட்டி அறிவிப்புகள், கேள்வி பதில்கள் (சித்திர குப்தன்) ஆகிய பல பகுதிகளைக் கொண்டதாகவும் குடி அரசு விளங்குகிறது.

1. உரைத் துண்டுகள்; துணுக்குகள்: நயமான நையாண்டித் தனத்துடன் தன் கருத்துக்களையும் தெளிவையும் பாமர மக்களுக்கு நாடகப் பாங்கில் வெளியிடும் உத்தி குடிஅரசில் சிறப்பாக அமைந்துள்ளது.


சான்று.1 "பிராயச் சித்தம்" 16.8.1925 ப.3

ஒரு பெரிய மனிதர்: வாருங்கள் சாஸ்திரிகளே! உங்களை வரவழைக்க வேண்டுமென்றிருந்தேன்... நீங்களே வந்து விட்டீர்கள்!...

சாஸ்திரி : அப்படியா... என்ன விசேஷம்!...

பெரிய மனிதர் : ஒரு பையன் தத்துக் கிளியின் கழுத்தில் கயிற்றைக் கட்டி . இறுக்கிக் கொன்றுவிட்டான். இதற்கேதாவது பிராயச் சித்தம் உண்டா?

சாஸ்திரி : ஆஹா... உண்டு. அவன் பெற்றோர் 108 தங்கத் தத்துக் கிளிகள் செய்து 108 பிராமணர்களுக்குத் தந்தால் பாவம் தீர்ந்து போகும். இல்லாவிட்டால் அந்தப் பையனைப் பார்க்கவே கூடாது.



## புதுடெல்லி மதநல்லிணக்க விழாவில் தமிழக அரசு கலைக்குழுவிற்கு முதல் பரிசு!

தேசிய ஒருமைப்பாட்டையும், மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் "அஞ்சுமன் சாயர்குல் பெடரேஷன்" சார்பில் பூக்காரர் பேரணி என்ற விழா நடத்தப்பெற்று வருகிறது.

கடந்த 18.10.97 அன்று நடைபெற்ற இவ்விழாவில் பல்வேறு மாநில அரசுகளின் சார்பில் பல கலைக்குழுவினர் பங்கேற்றுக் கலைநிகழ்ச்சிகளை நடத்தினார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் கலைமாமணி முனைவர் சோமசுந்தரம் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது; அத்தனைக் குழுக்களிலும் சிறந்த வகையில் நிகழ்ச்சிகளை நடத்தியமைக்கான முதல் பரிசினையும், தமிழகக்குழு பெற்றுள்ளது.

இவ்விழாக்குழுவின் பொதுச் செயலாளர் திரு.யோகேஸ்வர் தயாள், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இதைக் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசிற்குப்பாராட்டுதெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு நடைபெறும் விழாவில் இம்முதல் பரிசுக்கான சுழற்கேடயம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற டெல்லி மாநிலத் துணை நிலை ஆளுநர் மேதகு தேஜேந்திர கன்னா மற்றும் டெல்லி மாநில முதல்வர் மாண்புமிகு சாகிப்சிங் வர்மா ஆகியோர் தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்ட கலைக்குழுவினரின், கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்துப் பெரிதும் பாராட்டியதாகவும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

விழாவைக் காண வந்திருந்த சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் இக்கலை நிகழ்ச்சிகளைக் கண்டு அடிக்கடி கைதட்டி ரசித்துத் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள் என்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

---

பெரிய மனிதர்: ...பையன் உங்க பையன்தான்!

சாஸ்திரி:... இனி அப்படிச் செய்யாதே எனச் சொன்னால் போதும்!...

சான்று 2. கள்ளுக்கும் விஷத்திற்கும் வாக்குவாதம் (16.8.1925, ப.5)

விஷம்: ஓ கள்ளே! நீ என்ன மகா கெட்டிக்காரன் மாதிரி பேசுகிறாய்!... ஒரு கடுகளவு ஒரு மனிதனுக்குள் பிரவேசித்தேனேயானால் அவன் உயிரை வாங்கிப் பிணமாக்கி விடுவேன். ...நீ. பீப்பாயளவு உள்ளே போனாலும் ஒன்றும் செய்வதில்லை...

கள்ளு: அப்படியா! உன்னால் என்ன செய்யமுடியும்? ..ஒரு மனிதன் உயிரை மாத்திரம்தான் வாங்கமுடியும் இது யாரும் செய்து விடுவார்கள்... என் சங்கதியைக் கேள்!... நான் ஒரு மனிதனுக்குள் சென்றேனேயானால் அவன் புத்தி, மானம், சொத்து இவ்வளவையும் பிடுங்கிக் கொள்வதோடு உயிர் இருக்கவே பிணமாக்கி விடுவேன்... இது உன்னாலாகுமா?...

இவ்வாறு பல பகுதிகள் சுவையாகவும், சுருக்கமாகவும் அமைந்துள்ளன.

விளம்பரங்கள்: விளம்பர விகிதம் பற்றிய விளம்பரமும், (பக்கம் ஒன்றுக்கு மாதம் ரூ.35, அரைப்பக்கத்திற்கு ரூ.20, கால்பக்கத்திற்கு ரூ.12 அரைக்கால் பக்கத்திற்கு ரூ.7 தடவை ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு அணா 6) சுவையான சொற்களிலிலமைந்த விளம்பரங்களும் குடி அரசில் இடம் பெற்றிருந்தன.

சான்று 1:

வந்தே மாதரம்
இதுகாறும் ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாத
அபூர்வமான மருந்து இதுவே!
அதுதான் மூட்டைப்பூச்சி எமன்!

உங்கள் வீடுகளில் எவ்வித சந்துகளில் அபாரக்கணக்கான மூட்டைப் பூச்சிகளிருந்தாலும் பஞ்சில் ஒரு சொட்டு மருந்தை எடுத்து அங்கு விட்டால் அந்தக்கணமேசாகுமென்பதுதிண்ணம். சந்தேகமிருந்தால் ஒரு மூட்டைப் பூச்சியைப் பிடித்து எமன் பார்வைக்கு விட்டால் சாகும் விதம் அறிவீர்கள்.

2 அவுன்ஸ் பாட்டில் ரூ.1.00
1 அவுன்ஸ் பாட்டில் ரூ.0.80
மயிலர் திருமாளிகை
காங்கயம் (வழி) திருப்பூர்.

சான்று.2

கதர் !
காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்.
கற்பக விநாயகர் கதர் நிலையம்
மண்டி வீதி-ஈரோடு.

குடிஅரசு இதழ் க.அப்பையாவால் ஈரோடு சுயராஜ்யா அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிமிடப் பட்டது என்பதற்கான குறிப்பும் இதில் இடம் பெற்றுள்ளது.

பாரீஸ் லேடிகளின் லீலா வினோத போட்டோ மோதிரம்- சுகந்த பரிமள ஸ்நானப் பொடி-

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்-சரீர மர்ம சாஸ்திரம்-ஒர் மானிட மர்ம நூல்-அமிர்தார்ணவ லேகியம்-முந்துங்கள்! 10 ரூபாய் மதிப்பிடக்கூடிய 220 சாமான்கள் இனாம்.

கோல்ட் பிளேடட் நிப் பவுண்டன் பேனா.

வந்தாலும் போனாலும் சரி என்ற
லாட்டரி இல்லை!
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை!
பட்டப் பகல் போல் வெட்ட வெளிச்சமானது.

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32 ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் பெறலாம்.

இம்ப்ரூவ்ட் லீவர் பாக்கெட் கெடியாரங்கள்

### குடிஅரசு வழி அறியப்படும் நூல் வெளியீடுகள்-நூல் மதிப்புரைகள்:

1. பஞ்சாமிர்தம் - சஞ்சிகை
2. சிந்தாமணி-(ஆசி) பாலம்மாள்
3. ஜாரதுஷ்டிரன்-சுத்தானந்த பாரதி
4. அறநூல் - சுத்தானந்த பாரதி
5. இந்திர குலபோதினி-(மாத சஞ்சிகை) எஸ்.ஸ்ரீனிவாசன் பிள்ளை.
6. அகில பானு-வாரபத்திரிகை
7. குகானந்த கீர்த்தனம்-உலகுசுந்தரம்
8. இன்ப வாழ்வு - திரு.வி.க.
9. தர்மசங்கடம் - நாடகம்
10. முருகன் - திரு.வி.க.
11. நீதேசோபகாரி-தமிழ் வாரப்பதிப்பு
12. தட்சிண சரித்திர வீரன்-நூலாசிரியர் மாதவையர்
13. அன்பானந்தன்-மாதசஞ்சிகை ஆசிரியர் ஏ.பெருமாள், தமிழ் முரசு ஆசிரியர் மா.பொ.சி. பூந்தோட்டம், சேலம் - மாதவெளியீடு - வை.திருநாவுக்கரசு

    தென்நாடு-ஈ.சுப்பிரமணியம்,ஆம்பூர்

    திராவிடமணி-திருச்சி
14. சத்தியார்த்தப்பிரகாசம்-தயானந்த சரஸ்வதி
15. தெய்வீகன்-மாதாந்திரம்-
16. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது வரலாறு-கோவை கி.கு. நாராயணசாமி முதலியார்
17. வீரசிங்க தானாஜி அல்லது ஒரு மகாராஷ்டிர வீரன் - சோழவந்தான் மு.சுப்பிரமணிய முதலியார்
18. தஞ்சைமித்திரன் (ஆசிரியர் சேஷாத்திரி)
19. தேசபந்து-தூத்துக்குடி
20. வைத்தியசந்திரா-கரூர்
21. ஜம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரம்-(ஆசிரியர் முத்து நாடார்
22. தனித்தமிழ்க் கட்டுரைகள்-நாகை நீலாம்பிகை
23. நாமக்கல் கவிஞரின் நாவன்மை-மா.தேவராசன்
24. புரட்சிக்கவி தந்த புதையல் - திருவத்திபுரம்-தேவராசன்
25. கடவுளும் பிரபஞ்சமும்-சிங்காரவேலு
26. மங்கள நாதன் அல்லது மாயமங்கை (புதுக்கதை நூல்)-திருச்சி பெ.பரிமளாப்பல்லவராயர்

### குடியரசுப் பதிப்பக வெளியீடுகள்:

கைவல்யம் அல்லது கலைக்கியானம் - இராமாயண ஆராய்ச்சி - ஞான சூரியன் - மனுநீதி மருமம்-இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு-சுயமரியாதைத் தாலாட்டு - சோதிடப்புரட்டு - தர்மபரீஷை அல்லது புரான ஆபாசம் - சுயமரியாதைப்பாடல்-ஈ.வே.இராமசாமியின் சீர்திருத்த மாநாட்டுச் சொற்பொழிவு-பங்கஜம் நாடகம்-அகத்தியர் ஆராய்ச்சி-கடவுளை நிந்திக்கும் சுயவர்கள் யார்?...

(சுயமரியாதைக்காரர்கள் அல்ல; பிராண மரியாதைக்காரர்கள்தான்)-கதர்

**செய்தித்திரட்டு:**

நாடெங்கிலும்-உலகில் நடந்த இன்றியமையாத செய்திகளின் சுருக்கங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்றுள்ளன. ஜப்பான் பூகம்பம்-ஜார்ஜ் மன்னரின் பிறந்த நாளை முன்னிட்டுப் பலருக்குப் பட்டங்கள் கிடைத்தமை-இரத்தக் கொடி ஊர்வலம் தொழிலாளர் வேலை நிறுத்தம் - புயல் - லோகமானிய திலகரின் தகனஸ்தலத்தைச் சுற்றிலும் வேலி - வெள்ளப்பாழ்-காந்தியடிகள் பயணம் - மாநாடுகள் - எனப்பல்வேறு வகையான செய்திகளும் தொகுக்கப் பட்டப்பொதுஅறிவு ஏடாகவும் குடிஅரசு தொண்டு செய்துள்ளது.

பிழைதிருத்தம் - வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள் - இயக்கத்தோழர்கள் தொண்டர்கள் மறைவுச்செய்தி - கருத்துப்படம்-கவிஞர்கள் படைப்பாளர்களின் படங்கள்-கேள்வி பதில்(சித்திரகுப்தன்) ஆகிய பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

குடிஅரசு சிறுகதைப்போட்டி (11.9.48 அறிவிப்பு-விடுகவி-வினா-விடைகள்(ஜோடிக் குதிரையின் மேல் ஒருவனே ராஜா - பாதரட்சையணிந்தவர்...உயிரில்லை பேசும் ஊசி போட்டால் ஓசை மிகும்- கிராமபோன்..) ந.ல.மு.தொகுத்தது பிற பத்திரிகைகளின் கருத்து (வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பற்றிக் காஞ்சிபுரம் மாநாட்டுத்தலைவர் (திரு.வி.க.) நடத்தை பற்றிய கருத்துத்தொகுப்பு)

| | |
|---|---|
| தமிழ்நாடு | 29.11.1925 |
| சகோதயம் | 26.11.25 |
| ஊழியன் | 1.12.25 |
| ஸ்வராஜ்யா | 24.11.25 |
| லோகோபகாரி | 26.11.25 |
| தீனபந்து | 1.2.25 |

-சான்றாபிரங்கள் (மாணவர் சேர்க்கை, சென்னை மாகாணக் கல்லூரி, லயோலா கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, விவேகானந்தக் கல்லூரி-எண்ணிக்கைப் பட்டியல் விவரம்-23.3.46 ப.3)-பிழை திருத்தம் என்னும் பல பகுதிகளும் குடிஅரசில் குறிப்பிடத்தக்கன.

இராட்டைச் சங்கம், நூற்போர் சங்கம், இருந்ததையும், தேசீய பிராமணல்லாதார் சங்கமும், பிராமணரல்லாதாரின் பத்திரிகைகள் சங்கமும் அவசியம் வேண்டுமென்பதையும் குடியரசு குறிப்பிடுகிறது.

இயற்கை மதம்-சிதம்பர ரகசியம்-சுதந்தரப் போர் அல்லது உப்பள முற்றுகை - பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா - மாதர் சுதந்தரம் அல்லது பெண்மக்கள் பெருமை (சாமி சிதம்பரனார்), குடியரசு ரிவோல் மலைகள்-ஆராய்ச்சி அணிகலம் - சுயராஜ்யம் யாருக்கு - சாமிகளின் அடிமைகள் என சமகால-இதர பதிப்புப் புத்தகங்கள் இருந்ததையும் குடியரசு வழி அறிய முடிகிறது.


ஊழியன் - பொது ஜனப்பிரியன் - சித்திரபுத்திரன்-காலி மணிபர்ஸ்-அனுபவ வைத்தியன்-செய்யுள் பித்தன்-எனப் பல புனைபெயர்களும் காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் நன்மையைக்கருதி தமிழ் நாட்டிற்குத் தனிப்பல்கலைக்கழகம் வேண்டுமென (1925 ஆகஸ்ட் 23 தஞ்சை) முடிவு செய்யப்பட்டது. இந்தியாவில் இந்து பெண்பிள்ளைகளுக்கு குடும்பச் சொத்தில் பாகம் கொடுக்க வேண்டும்-வாணியம்பாடி இந்து மாதர்களின் வேண்டுகோள்(13.9.25 ப.9) போன்ற எதிர்காலத்திட்டங்களை எடுத்துரைக்கும் முயற்சியிலும் குடிஅரசு ஈடுபட்டமை உணரப்படுகிறது.

சமகால இதழ்களின் கருத்துக்களைத் தம் தலையங்கத்தில் குறிப்பிடுதல்-கருத்து விளக்கங்கள்-முரண்பட்டன,வற்றுக்கு மறுப்புரைகள்-(பத்திரிகை பகிஷ்காரம்) புறக்கணிப்புகள்-எனப் பல நிலைகளிலும் குடிஅரசு செய்திகளை வெளியிட்டுச் செயல்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல நகரங்களிலும், ஈப்போ, சிங்கப்பூர் போன்ற பிற நாட்டு நகரங்களிலும் குடிஅரசு தன் பணியைச் செய்தது.

மிக விரிவான ஆய்வுக்குத் தேவையான பல களங்களைக் கொண்டதாக விளங்கும் "குடிஅரசு" ஒரு பல்துறைப் பயன்பாட்டுச் சமுதாய-சமத்துவ-ஏடு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழக வரலாற்றிலும்-தமிழ் வளர்ச்சியிலும்-தமிழர் வாழ்விலும் குடிஅரசு என்றும் நினைவை அள்ளும்; நிலைபேறு கொள்ளும்.




சுதந்திரப் போராட்டக் கனல் மூண்டிருந்த காலத்தில் வெளியான ஆங்கில நாளிதழ்களில் ஒன்றான 'த பாம்பே கிரானிகல்'!

# சென்னையில் நேதாஜிக்கு சிலை, தியாகிகளுக்கு மணிமண்டபம்

- முதலமைச்சர் **கலைஞர்** அறிவிப்பு

"பெரியவர் நிஜலிங்கப்பா அவர்கள் என்னைப் பார்த்து "நன்றி" என்று கூறினார். "எதற்காக ?" என்று கேட்டேன். "தியாகிகளுடைய ஒய்வூதியத்தை 1500 ரூபாயிலிருந்து 3000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறாய்; அதற்காக நன்றி" என்று குறிப்பிட்டார். நான் "அது என்னுடைய கடமை. என்னுடைய உணர்வு-அதைத்தான் செய்திருக்கிறேனே தவிர, நன்றி பாராட்ட ஒன்றிமில்லை; நன்றியை எதிர்பார்த்து இந்தக் காரியத்தை நான் செய்யவில்லை" என்று அவரிடம் எடுத்துக் கூறினேன்.

ஏற்கெனவே விஸ்வநாததாசின் வாரிசுகளுக்கு ஒரு குறைந்த தொகையை ஒய்வூதியமாக 1973-74ஆம் ஆண்டுகளிலே நான் முதல்வராக இருந்தபோது வழங்கி யிருக்கிறேன். இருந்தாலும்கூட, அந்தத் தியாகியின் இல்லம் மதுரை - திருமங்கலத்திலே இருக்கிறது என்பதையும், அது இடிந்து கலனாகிப் போய்க் கிடக்கின்றது என்பதையும், அந்த இல்லத்தை அரசு நினைவுச் சின்னமாக ஆக்க வேண்டு மென்பதையும் குமுதம் பத்திரிகையில் எழுதிக்காட்டியவர் நம்முடைய குமரிஅனந்தன் தான்.

**விஸ்வநாததாஸ் இல்லம்**

இலக்கியச் செல்வர் குமரிஅனந்தனின் கட்டுரையைப் படித்ததும் உடனடியாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு "அப்படி ஒரு இடம் இருக்கிறதா ?" என்று கேட்டேன். "இருக்கிறது; நடிப்புச் செல்வமாக விளங்கி, தியாகச் செல்வமாக ஒளிவிட்ட தியாகி விஸ்வநாததாஸ் வாழ்ந்த இல்லம் இருக்கிறது; அது ஏலத்திலே போய்விட்டது; என்று சொன்னார்கள். "ஏலம் எடுத்தவரிடத்திலே, நான் கேட்டதாகச் சொல்லுங்கள்; அதைத் திருப்பித்தர முடியுமா என்று கேளுங்கள்" என்று சொன்னேன்.

என் பெயரைப் பயன்படுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கேட்க, தாராளமாகத் தருகிறோம் என்று சொல்லி - அதற்கு பதினோரு இலட்ச ரூபாய் திருப்பித் தரவேண்டும், ஏலத்திலே நாங்கள் எடுத்திருக்கிறோம் என்று சொன்னவுடன் - 11 இலட்சம் ரூபாயை உடனடியாகத் திருப்பித் தர உத்தரவிட்டேன்.

விரைவில் அந்த வீடு, ஏற்கெனவே அமைந்திருந்த அந்த முகப்புக் கெடாமல், அந்த நினைவு மாறாமல், விரைவிலே புதுப்பிக்கப்பட்டு, தொடர்ந்து அதோடு ஒரு மண்டபமும் சேர்த்துக் கட்டப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நேதாஜியின் சிலை**

இன்று நேதாஜியின் நூற்றாண்டுவிழா. நேதாஜி சொன்னார். "துக்கங்களை அனுபவிப்பதில் கஷ்டமே இருக்கிறதென்று பெரும்பாலோர் மருண்டு பின் வாங்குகிறார்கள். அது தவறான அபிப்பிராயம். துக்கத்தில் கஷ்டம் இருப்பது போலவே அளவற்ற ஆனந்தமும் இருக்கிறது. அந்த ஆனந்த ஊற்றைக் கண்டறியாதவனுக்கே கஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் துக்கத்தின் மத்தியில் இன்பத்தை நுகரும் ஒருவன் சக்திமானாகி ஒளிபெற்று விடுகிறான்" என்று சுபாஷ் சந்திரபோஸ் தெரிவித்திருக்கிறார்.

அத்தகைய நேதாஜியின் உருவச் சிலை ஒன்று தயாராகிக் கொண்டிருக்கின்றது - தமிழக அரசின் சார்பிலே வெகு விரைவிலே அந்த உருவச் சிலை தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரத்திலே அமைக்கப்படவிருக்கின்றது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னையில் மணிமண்டபம்**

காமராஜர் அரங்கத்திலே நடைபெறுகின்ற இந்த விழாவில் - பெரியவர் நிஜலிங்கப்பா அவர்கள் முன்னிலையில் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் அவர்களின் வேண்டுகோளை, அன்புக் கட்டளையாக ஏற்றுக்கொண்டு, சென்னை மாநகரத்திலே தியாகிகள் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும், அதனுடைய திறப்பு விழாவிற்கு, இங்கே வருகை தந்துள்ள பெரியவர் நிஜலிங்கப்பா அவர்கள் வரவேண்டும் என்ற அழைப்பையும் விடுத்து விடைபெறுகிறேன்".

*- 21.10.97ல் சென்னையில் நடைபெற்ற 'நேதாஜி நூற்றாண்டு விழா'வில் பேசியதிலிருந்து.*

## எலிசபெத் இராணியாரின் நன்றி

அண்மையில் தமிழகத்திற்கு வருகைபுரிந்த இங்கிலாந்து அரசி இரண்டாவது எலிசபெத், திரு.எடின்பரோ கோமகன் ஆகியோர், தமிழகத்தில் தாங்கள் மேற்கொண்ட இரண்டு நாள் சுற்றுப்பயணம் தங்களுடைய மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது எனத் தெரிவித்துள்ளனர்.

தமிழக மக்கள் அவர்களுக்கு அளித்த வரவேற்பு இதயத்திற்கு இதமாக இருந்தது எனவும், அது என்றென்றும் மறக்க முடியாததாக இருந்தது எனவும், முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அளித்த நினைவுப் பரிசு மிகவும் சிறப்பான நினைவுப் பரிசாக அமைந்திருந்தது எனவும் பாராட்டி அதற்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துள்ளனர்-என்று சென்னையில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சிலிலிருந்து **திரு.ராபர்ட் ஃபெல்லேர்** தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம்

DWCRA



வன்முறை தவிர்த்து, 'சாத்வீக' நெறியில், தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் 'அஹிம்சா' வழியில், அயராது பாடுபட்டு, நாமெல்லாம் **'சுதந்திரக்காற்றை'ச்** சுவாசிக்க வழிவகுத்து, தன் **உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம்** செய்தவர் அண்ணல் காந்தியடிகள் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

ஒருபுறம், அன்னிய, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அறப் போராட்டங்களில், ஈடுபடுத்திக் கொண்டு, குமரிமுனையிலிருந்து இமாலயம் வரையிலுள்ள இந்திய மக்களை ஒருங்கிணைத்து, சாத்வீக அடிப்படையில் போராடி, நமக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்து உலக வரலாற்றில் 'மகாத்மாவாக' வர்ணிக்கப்பட்ட காந்தியடிகள், நம் நாட்டில், நம்முடைய ஆணாதிக்க வர்க்கத்தால், இல்வாழ்வுச் சிறையில், அடிமைகளாய் ஆக்கப்பட்டிருந்த, இந்தியப் பெண்களின் கையறு நிலைகண்டு வருந்தினார். பொறுமையின் சிகரமான நம் பெண்கள், வம்சாவழியாக, பலநூற்றாண்டு களாக, உரிமையற்றவர்களாக அவர்களின் உள்ளார்ந்த சக்தியின் ஆற்றலை உணராதவர்களாக, வெறும் இயந்திரங்களாகச் சுழன்று வருகிறார்களே என்று அவர் பல்வேறு கட்டங்களில் தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தத் தயங்கியதேயில்லை.

நம் நாட்டின், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வம்சாவழியாகப் பேணி வருகின்ற நம்முடைய மாதரசிகளின் உரிமையைப் பற்றி காந்தியடிகள் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

**'ஆணுக்கும், பெண்ணுக்கும் வேறுபாடு என்பது புறப்பார்வையில் மட்டுமே; வேறு எவ்வகையிலும் என்னால் பிரித்துப்பார்க்க இயலாது'.** மகனுக்குச் சொத்துரிமை தருகின்ற நம்முடைய குடும்பக்கட்டமைப்பில், மகளுக்கு மட்டும் ஏன் சொத்துரிமை தராது இழிவுபடுத்தப்படுகிறது? **எனவே, பெண்கள், ஆணுக்கு நிகராக, எல்லாவகையிலும், தங்களுடைய உரிமையை** நிலைநிறுத்திட, முயல வேண்டுமென்று, இடையறாது வலியுறுத்தினார்.

சுதந்திரப் போராட்ட காலத்தில், **காந்தியடிகளின் சாத்வீக அணுகுமுறைகளால்** ஈர்க்கப்பட்ட **ஈ.வெ.ரா.பெரியார்** அவர்கள், நாட்டின் விடுதலை வேண்டியும், அதே நேரத்தில், இந்தியச் சமூக அமைப்பில், வகுப்புவாத வேறுபாடுகளனைத்தும் களையப்பட்டு, 'சமூக நீதி சமமாக்கிடப்பட வேண்டுமென்ற இலட்சியத்தையும்', அவர் தொடர்ந்து வலியுறுத்தினார்.



பின்னர், சமூக நீதிக் காவலராகப் பிரகடனப்படுத்தப்பட்ட, தந்தை பெரியார் அவர்கள், நாடு அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு விட்டதால் மட்டுமே, இந்தியாவை முழுச்சுதந்திர நாடாக என்னால் ஏற்க இயலாது. ஏனெனில், **மதத்தின் பெயரால், சாதியின் பெயரால்** நிலவிவருகின்ற, சமநிலையற்ற வகுப்புவாத, மூட **நம்பிக்கைகள், வேரோடு கெல்லி எறியப்பட்ட பின்னரே, உண்மையான சுதந்திரத்தை நம்மால் துய்க்க முடியும்** என்று வலியுறுத்தியதோடு மட்டும் நின்றுவிடாமல், பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று சாத்வீக நெறியில் நடத்திக் காட்டினார் என்பதை, வரலாற்றில் மறைத்திட இயலாது.

அதிலும், குறிப்பாக, ஆணாதிக்க முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும்; குடும்பக்கட்டமைப்பில் தவிர்க்க இயலாத் தகுதியைப் பெற்றிருக்கின்ற **நம்முடைய இல்லத்தரசிகள், ''வெறும் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரங்கள் அல்ல''. எனவே, சமூக அமைப்பில், பெண்களுக்கு நிரந்தரமான சமூக அந்தஸ்து வழங்கப்பட்டேயாக வேண்டுமென்பதில், அவர் உறுதியாக இருந்தார்.** அத்தகைய சமூக அந்தஸ்து எய்தப்பட வேண்டுமெனில், முதலில், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டாக வேண்டுமென்பதையும், பெண்கள் மூடப் பழக்கங்களிலிருந்து விடுபட்டு, ஆண்களைப் போல் கல்வியில் உயர்ந்து நிற்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார். ஆண்களுக்கொப்ப அனைத்துத் துறைகளிலும் பணியாற்றிட முன்வருவதன் மூலம், அடக்கி வைக்கப்பட்டிருந்த தங்களது முழுச்சக்தியையும், ஆற்றலையும் உரியமுறையில் பயன்படுத்திடும் வகையில், நம் பெண்கள் சுதந்திரப் பறவைகளாக வெளிவர வேண்டுமென, இடையறாது தன்னுடைய எழுத்தாலும், பேச்சாலும் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார்.



தந்தை பெரியாரின் 'கொள்கைவாரிசாக' ஏற்றுக்கொள்ளப்பட்ட பேறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், **"ஜாதி பேதமற்ற-அதே நேரத்தில் வர்க்கபேதமற்ற ஒரு சமத்துவ சமுதாயம்"** உருவாக வேண்டுமென்பதை வலியுறுத்திப் போராடினார் என்பதை வரலாறு மறைக்காது; மறுக்காது.

அத்தகைத்தான, சமூகப் புரட்சி வெற்றியடைய வேண்டுமெனில், பெண்ணினத்தைச் சமமாக மதிக்கின்ற மாண்பும், பொருளாதாரப் பங்கீட்டில், சமநிலையும் எய்திடப்பெற வேண்டுமெனப் பேரறிஞர் அண்ணா வலியுறுத்தினார். இத்தகு, நிலை உருவாக வேண்டுமானால், பெண்களுக்கு, முதலில் கல்வி வாய்ப்பு பரவலாக்கப்பட வேண்டுமென்றும், அதுதான் ஒரு சராசரி ஜனநாயக அமைப்பின் முழுமுதற் கடமையாக இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார்.

அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா ஆகிய, நமது மாபெரும் தலைவர்களின் கனவுகளனைத்தும் நனவாகிடும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அயராது செயலாற்றி வருகிறார்.


பெண்களுக்குக் கல்வி என்பது அனைத்து மட்டத்திலும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில், அவர் மிகுந்த அக்கறை காட்டிவருகிறார். ஏனெனில், பொருளாதார நிலையை அடிப்படை ஆதாரமாகக் கொண்டிருக்கின்ற, நம் சமூக அமைப்பில், எதிர்கால வாரிசுகளை ஈன்றெடுத்துப் பேணிவளர்த்து, கல்வி கற்றிட அனுப்பிவைத்து எல்லா நிலையிலும் முழுமை பெற்றவர்களாக அவர்களை ஆளாக்குவதில் தாய்மையின் பங்கென்பது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.




எனவே, பெண்களுக்குச் சமவாய்ப்பு, சமஉரிமையைச் சட்டப் பூர்வமாக்கிடும் வகையில், ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சொத்துரிமை சமமாக வழங்கப்பட்டாக வேண்டுமென்று கலைஞர் அவர்களால் 89-90ல் சட்டம் இயற்றப்பட்டது. **எதையும், எதார்த்த நடைமுறை நிலைப்பாட்டில், பிரச்சினைகளை லாவகமாகக் கையாண்டு, ஒரு புதிய நோக்கில், ஒரு புதிய அணுகுமுறையில், அடித்தளத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், ஆர்வம் காட்டிவரும் முதலமைச்சர் கலைஞர், பெண்கல்வி முதன்மைப்படுத்தப்பட்டாக வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.**

பொதுவாக, ஆரம்பக்கல்வி என்பது அரசால் 'கட்டாயக்கல்வியாக' அறிவிக்கப்பட்டிருந்தும் கிராமப்புறப் பெண்களைப் பொறுத்தவரையில், அது ஓரளவிற்குத் தான் வெற்றியைத்தந்திருக்கிறது. ஏனெனில், பொருளாதாரத்தை மையமாகக் கொண்டிருக்கின்ற, நம்முடைய சமூக அமைப்பில், அன்றாடம், அரை வயிற்றுப்பாட்டிற்கே, அல்லலுறுகின்ற அடித்தளத்து மக்களிடம் இதைப்பற்றிய விழிப்புணர்ச்சியும் இல்லை; அக்கறையும் இல்லை. அதிலும், அமைப்புச்சாரா, அன்றாடக்கூலிகளாக, வாழ்க்கையை நடத்தி அல்ல, கடத்திக்கொண்டிருக்கின்ற மக்களின் கவனத்தைக் கல்வியின்பால் ஈர்ப்பது என்பது ஒரு எளிதான காரியமன்று. ஆனால், அதைச்:ாதித்துக் காட்டியே ஆகவேண்டும் என்பது தவிர்க்க இயலா ஒன்றாகும். எனவேதான், இத்தகைத்தான நடவடிக்கையின் முதற்படியாக 'குழந்தைத்தொழிலாளர்' முறை அறவே ஒழிக்கப்படவேண்டுமென்பதில், அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது.

ஆனால், பெண்கல்வி, முழுமையாக நிறைவேற்றப்பட்டால்தான், அது எதிர்காலச் சமுதாயம், அறிவார்ந்த சமுதாயமாகப் பரிணமித்திட வழிகாணும் அடிப்படைச் செயலாக அமையும். இதில், அடித்தளத்து மக்களின் குறிப்பாகக் கிராமங்களில், பெண்ணைக் கல்விகற்க அனுப்புவதில், பெற்றெடுத்த தாய்மார்களிடம் நிலவி வரும், அத்தகைய ஈடுபாடென்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில், மனைவியும், கணவனும், வேலைக்குச் செல்லவேண்டிய, அன்றாடக் கட்டாயச் சூழலில், **இல்லத்தில் தாய்விட்டுச் செல்கின்ற எஞ்சிய வேலை, கைப்பிள்ளையாகவுள்ள, தங்கையையோ, தம்பியையோ பராமரித்து - தண்ணீர்கொணர்ந்து - விறகுச்சுள்ளி சேகரித்தல் வரையிலான இத்தகைய பணிச்சுமைகள் கிராமத்துச்சிறுமி மீது அவள் அறியாமலேயே, இயல்பாகவே சுமத்தப்பட்டு விடுகின்றன.**





**படித்தாகவேண்டும் என்ற உயரிய நோக்கில், இத்திட்டத்தில் மனுச்செய்த தகுதிபடைத்த எல்லா ஏழைப் பெண்களுக்கும், குறியீடு எதையும் நிர்ணயிக்காமல், திருமண நிதிஉதவி கிடைத்திடும் வகையில், புதிய ஆணையினைப் பிறப்பித்துள்ளார்.**

ஏனெனில், இத்திருமண நிதிஉதவித்திட்டத்தில், தற்பொழுது பயனடையும் பெண்ணானவள், தன்னுடைய படிப்பறிவை, எதிர்காலச்சந்ததிக்குப் பயனளிப்பதாக ஆக்கி காட்டுவாள்; அதோடு, தான் பெற்றெடுக்கும் குழந்தையைப் படிக்க வைப்பதில், முனைப்போடு துணிந்து நிற்பாள் என்பதில் ஐயமில்லை.

எனவே, இத்தகைத்தான சூழ்நிலையில், பெண்கல்வி பொருளாதார ரீதியாகவே ஏழ்மைநிலையிலுள்ள, அடித்தட்டு மக்களின் மனதில் வேரூன்றிடச் செய்திடும் அடிப்படைப் பணியாக, இந்தியத்திருநாட்டின் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, முன்னோடித்திட்டமாக, 1989-ல் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டதுதான் 'மூவலூர் இராமமிர்தத் தம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவி'த்திட்டமாகும். இத்திட்டத்தின்படி, எட்டாவது வரை படித்த ஏழைப்பெண்களுக்குத் திருமண நிதிஉதவியாக, ரூ.5000 வழங்கப்பட்டது.

ஆனால், கடந்தகாலங்களில், இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை; இத்திட்டத்தின் பயன்கள் ஆராயப்படாமல் அரைக்கிணறு தாண்டிய நிலையிலேயே இருந்துவந்தது.

எனவே, மீண்டும் ஆட்சிப்பொறுப்பேற்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ரூ.5000-ஆக வழங்கப்பட்ட ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவியை ரூ.10,000-ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டார். இதன் பயனாகக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, ரூ.46 கோடியில், 46,000 ஏழைப்பெண்கள் பயனடைந்துள்ளனர்.

பெண்கள் கல்வி கற்றால், அது முதலில், இல்லத்தையும், சமுதாயத்தையும் கற்றவர்களாகக் கொண்ட அறிவுப்பூர்வ அமைப்பாக மாற்றும் என்பதில் உறுதியான நம்பிக்கை பூண்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள், **ஏழை, எளிய அடிமட்டத்து நிலையிலுள்ள பெண்களும், குறைந்தபட்சம் 8-வது வரையிலாவது**

வளர்ந்து வரும் அறிவியல் பூர்வமான அறிவுலகுக்கேற்ப, நம்முடைய பெண்கள் அனைவரும் கற்றாக வேண்டும்; அதன் மூலம் அறிவார்ந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இது போன்று பல்வேறு வழிகாட்டும் திட்டங்களை அறிவித்துள்ளார்.

பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சார்ந்த முதல்நிலை பெறும் மாணவ, மாணவியர்களின் மேற்படிப்புச் செலவை, அரசே ஏற்கும், என்ற புரட்சித் திட்டத்தின் மூலம், நாடு உயரும், சமுதாயம் உயரும் என்று பெருமிதத்தோடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அண்மையில் இத்தகைய 100 குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்கட்குச் சான்றிதழும், நிதியுதவியும் வழங்கப்பட்டன.



இதே போன்று, ஈ.வெ.ரா.நாகம்மையார் பெண்கள் கல்வித் திட்டத்தின் கீழ், பட்டதாரிப் பெண்களை அதிக அளவில் உருவாக்கிட வேண்டுமென்ற உயரிய நோக்கில், ஆண்டு வருமானம் ரூ.24,000-க்குக் குறைவாக வருமானம் பெறும் அனைத்துப் பிரிவினர், அனைத்து மதத்தினர் என்ற சமத்துவ அடிப்படையில் எல்லா இனத்தைச் சார்ந்த பெண்களும் பட்டம் பெற்றிடும் வகையில், இளங்கலை பயில (B.A.) ரூ.500-ம் இளம் அறிவியல், இளம் வணிகவியல் (B.Sc., B.Com.,) பயில ரூ.750-ம், தொழில் நோக்குள்ள இளநிலைப் பட்டப் படிப்பிற்கு ரூ.1,000-மும் மூன்றாண்டுகளுக்குத் தொடர்ந்து, கல்விக் கட்டணமாக, வழங்கப்படுகிறது. பொறியியற் கல்லூரிகளில், கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ததோடு, தனியார் கல்லூரிகள் உட்படப் பொறியியற் கல்லூரிகளில் இடம் எளிதாகவும், விரும்பிய பாடமும் கிடைத்திட இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் **'ஒற்றைச்சாளர'** முறையும், இவ்வாட்சியில்தான் செயல்படுத்தப்படுகிறது. இதேபோன்று மருத்துவ, விவசாயக் கல்லூரிகளிலும், கிராமப்புற மாணவ, மாணவியர்க்கு அடுத்த ஆண்டு முதல் 15 சதவிகித ஒதுக்கீடு செய்யப்படுமென்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார். மேலும் பெண்கள் கல்லூரி இல்லாத ஊரகப்பகுதிகளிலுள்ள அரசு ஆண்கள் கலைக் கல்லூரிகளில் பெண்கள் பட்டப்படிப்பு மேற்கொள்ள 30 சதவீதம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**இத்தகைத்தான, புதுப்புதுத் திட்டங்களின் வாயிலாக, எதிர் காலத் தமிழகம், முழுமையான கல்வியறிவு பெற்ற, மாநிலமாகத் திகழும் - அதுதான் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 'தொலை நோக்கிலான' அறிவுலகம் படைக்கும் உயரிய குறிக்கோளாகும்.** இத்தகைய முயற்சிகளின் பயனாகப் பெண்கல்வி நமது மாநிலத்தில் பரவலாக்கப்பட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும்.

மேலும், பெண்கள் இவ்வாறாகக் கல்வியறிவு பெற்று, சுய சிந்தனை மிக்கவர்களாகச் சமூகத்தில் தங்களுடைய நிலையினை உயர்த்தித் தக்க வைத்துக் கொள்பவர்களாக, பரிணாமம் பெறவேண்டும். இத்தகு நிலைகளினால்தான் நம்முடைய சமூகத்தில் உரிய மாற்றங்கள் நிகழும் என்ற நம்முடைய முன்னோடித் தலைவர்களின் கனவுகளை நனவாக்க அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் உருவானதுதான் **'கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமாகும்'.**

## இத்திட்டத்தின் உயரிய நோக்கங்கள்:

கிராமப்புற மகளிரின் பொருளாதாரத் தகுதியை உயர்த்துவது. எனவே கிராமப்புறங்களிலுள்ள குடும்பத்துப் பெண்கள், தாங்கள் இல்லத்தில் அடிப்படையாக மேற்கொள்ளும், உணவு தயாரித்தல், குழந்தைகளைப் பேணுதல் போன்ற குடும்ப நலம் காக்கும் பணிகளுக்கிடையில், கிடைக்கின்ற ஒய்வு நேரத்தை, பொருளீட்டும் வகையில் பயன்படுத்துவது; அதாவது அந்தந்தப் பகுதிகளின் அடிப்படை ஆதாரங்களை மையமாக வைத்துச் சிறு தொழில்களில் ஈடுபடுத்தி, பெண்களையும் வருவாய் ஈட்டுபவர்களாக உருவாக்குவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்தகு, நிலை மாற்றம் ஏற்படும்பொழுது, பெண்களின் மனித சக்தி வீணாகிவிடாமல், வருவாய் ஈட்டப் பயன்படுத்தப்படுகிறது. அதன் மூலம் சமூக அந்தஸ்தில், ஆணுக்கு நிகரான நிலையை எய்திடும் வகையில் அவர்களுடைய மனப்பாங்கில், புதிய நம்பிக்கையும், புதிய வலிவும், உற்சாகமும் ஏற்படுகிறது. எனவே, கணவனது வருவாயை மட்டும் நம்பியிருந்த, நிலை மாறி, எதிர்காலச் செல்வங்களாம் குழந்தைகளை, நல்ல ஊட்டச்சத்து உணவு அளித்து, உரிய வயதில் பள்ளிக்கு அனுப்பி வைக்கும் கடமையை நிறைவேற்ற வாய்ப்பு உருவாகிறது. **பொருளாதார அடிப்படையில், ஆணுக்கு நிகரான நிலை எய்தப்படுவதால், பெண்கள் பிரச்சினைகளை எளிதில் எதிர்கொள்கின்ற தெம்பையும், மனஉறுதியையும் இயல்பாகவே பெற்றுவிடுகின்றனர்.**

## திட்டச் செயற்பாடுகள்:

இத்திட்டத்தில் பங்குபெற, கிராமப்புறங்களில் அவ்வவ்விடங்களில் இருக்கக்கூடிய, இயற்கை ஆதாரங்களை, அடிப்படையாக வைத்து, தொழில்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இதில், குறைந்தது 15-லிருந்து 20 ஏழைக்குடும்பப் பெண்கள் பங்கேற்கும் வகையில் ஒரு குழு அமைக்கப்படுகிறது.




*கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியப்பகுதியில் 15 குழுக்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன. அய்யனாருத்தில், பாய் பின்னும் தொழில்மூலம் வருவாய் ஈட்டும் பெண்.*



இந்நிலையில், இந்த ஆதி திராவிடர் இனப் பெண்கள் 15 பேர் ஒரு குழுவாக ஒருங் கிணைந்து, கிராமப்புற மகளிர் மட்டும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிதியுதவி கோரி, கயத்தாறு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை அணுகினார்கள். இவர்களுக்குச் சுழல் நிதியாக 15,000 ரூபாய் வழங்கப்பட்டது. இந்நிதியைக் கொண்டு மூலப் பொருட்களை மொத்தமாக நேரில் சென்று வாங்கி, அனைத்து 15 பெண்களும் ஒரே இடத்தில் அமர்ந்து தீப்பெட்டியின் அடிப்பெட்டியினை உற்பத்தி செய்தனர். அவற்றை அருகிலுள்ள, தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்கு நேரிடையாக நல்ல விலையில் விற்றனர். இதனால், அட்டைப் பெட்டித் தயாரிப்புக் கூலியையும், அதோடு கிடைத்த இலாபத்தையும் அவர்களே பெற்றனர்.

இக்குழுவின் ஜூன் 1997 முடிய வரவு செலவுப்படி, மூலப் பொருள் கொள்முதலுக்கென ரூ.5,44,992-ம் குழு உறுப்பினர்களான 15 ஆதிதிராவிடர் இனப்பெண்களுக்குக் கூலியாக ரூ.2,24,000-மும் ஆக ரூ.7,68,992 செலவிடப்பட்டது. உற்பத்திப் பொருள் விற்று முதலாக ரூ.8,06,400 வரவாகப் பெறப்பட்டது. எனவே, ரூ.37,408

எத்தொழிலை, உருவாக்கலாம்? என்பது கிராம சேவிகா மற்றும் உதவித்திட்ட அலுவலர் (கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம்) ஆகியோரால் தேர்வு செய்யப்படுகிறது. இதில் பங்குகொள்ளவிழையும் பெண்களுக்கு ஊரக இளைஞர்கள் சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்படுகிறது.

பயிற்சி பெற்ற, ஒவ்வொரு குழுவும், கூட்டாகத் தொழிலை மேற்கொள்ள, மத்திய-மாநில அரசுகளின் சார்பில், ஒவ்வொரு குழுவுக்கும் ரூ.25,200 சுழல்நிதியாக வழங்கப்படுகிறது. இதை மூலதனமாக வைத்து, தாங்களே சுயமுயற்சியில், ஒற்றுமையோடு உழைப்பதன்மூலம், மேற்கொள்ளும் தொழிலைப் பொறுத்து, நாளொன்றுக்கு ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ.25-லிருந்து ரூ.50 வரை வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியம், செட்டிகுறிச்சியில் வாழும் ஆதிதிராவிட இனப் பெண்கள் தீப்பெட்டி அடிப்பெட்டி தயாரித்தல், தீக்குச்சி அடுக்குதல் போன்ற கைத்தொழிலை நம்பி வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதற்கான மூலப் பொருட்களை வாங்க இவர்களிடம் நிதி வசதி இல்லா நிலையில், இடைத் தரகர்கள் புகுந்து இவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்காமல், கொள்ளை லாபத்தைச் சுரண்டிப் பெற்றார்கள்.



கடலூர் மாவட்டம், கடலோரக்கிராமமான தாளங்கொடா என்னும் ஊரில், மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட 20 பெண்கள், இத்திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்து, சுழல்நிதியுதவி பெற்று மீனை நேரடியாகப் பணம் கொடுத்துக் கொள்முதல் செய்தனர். இதனால், இடைத்தரகர்களின் குறுக்கீடு ஏதும் இல்லாததால் சில்லறை மீன் வியாபாரத்தில், இவர்களுக்கு அதிக இலாபம் கிட்டியது. தற்பொழுது சராசரியாக நாளொன்றிற்கு ஒவ்வொரு பெண்ணும் ரூ.60-க்கு மேல் இலாபம் ஈட்டுகின்றனர்.

இதனால், இவர்கள் இல்லங்களில் புதுப்பொலிவையும் சமூகத்தில் ஒரு நிலைத்த அங்கீகாரத்தையும் பெற்று, மனத்தெம்புடன் வாழ்கின்றனர். எனவே, இவர்களது சந்ததியினர்களின் வளர்ச்சி அறிவுபூர்வமாக அமையும் என்றே நம்பலாம்.

நிகர லாபமாக ஈட்டப்பட்டு, அதில் சுழல் நிதியாகப் பெறப்பட்ட ரூ.4,300 திரும்பச் செலுத்தப்பட்டது.

எனவே, கூலியுடன் சேர்த்துக் குழுவிலுள்ள 15 ஆதிதிராவிடப் பெண்களுக்கும் மாத வருவாயாகச் சராசரியாக ரூ.1,218 கிடைத்துள்ளது. குடும்பத்திற்குத் தேவையான அன்றாட அடிப்படைப் பணிகளையும் செய்து முடித்து, எஞ்சிய நேரத்தில் இச்சிறு தொழிலில் முழுமையாக ஈடுபட்டு, ஒற்றுமையாக உழைத்து, கிராம அடிப்படையில் நல்ல வருவாய் ஈட்டிடுவதன் வாயிலாக, இப்பெண்களுக்குச் சம அந்தஸ்தும், புதுத் தெம்பும், புதிய நம்பிக்கையும் பிறந்துள்ளன. எனவே, இனி இவர்களது அடுத்தக்கட்டக் கடமையான தங்களது எதிர்காலச் சந்ததியை கல்வியறிவு பெற்ற சமுதாயமாக ஏற்றம் பெறச் செய்வது என்பது மிகவும் எளிதான ஒன்றே.



கமுதி ஊராட்சி ஒன்றியம், உ.புதூர் கிராமப் பெண்கள் குழு நடத்தி வரும் கறவைப் பசுக்கள் வளர்க்கும் பால் பண்ணைத் தொழில்.

நடப்பு நிதியாண்டில் 1951 குழுக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டு 1997 செப்டம்பர் முடிய 619 குழுக்கள் ஏற்படுத்தப் பட்டு, இதன் மூலம் 8324 கிராம மகளிர் பயனடைந்துள்ளனர்; காய்கறித் தோட்டங்கள் அமைத்தல், பூந்தோட்டங்கள் அமைத்தல், பாய் முடைதல், ஓலையைக் கொண்டு வண்ணப் பொருட்கள் தயாரித்தல், கூடை முடைதல், கறவை மாடுகள் வளர்த்தல், நைலான் கூடை பின்னுதல், சேமியா தயாரித்தல், தென்னங்கீற்று முடைதல், கயிறுத் தொழில், நரிக்குறவப் பெண்கள் பங்கு கொள்ளத்தக்க பாசி மணி தயாரிப்பு, மீன் வியாபாரம், சப்பத் தயாரித்தல், வத்தல், வடகம் மற்றும் அப்பளம் தயாரித்தல் போன்ற தொழில்களின் மூலம் பெண்கள் வருவாயை ஈட்டி, ஒரு தன்னம்பிக்கையுடன் சமூக அங்கீகாரத்தைப் பெறுகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

"நரிக்குறவப் பெண்கள் குடும்பத்தோடு ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி, பெண்கள் குழுவாக ஒருங்கிணைந்து, பாசிமணி மாலை தயாரித்து, பொருளீட்டும் ஒரு வெற்றிக்கதை."

நரிக்குறவ இனத்தைச் சார்ந்தவர்கள், பொதுவாக, ஒரே இடத்தில் நிரந்தரமாக வாழும் வழக்கமுடையவர்கள் அல்ல. ஊர்ஊராக அலைந்து, கூடாரம் (டென்ட்) அமைத்து, அதிகபட்சம் ஓரிரு மாதங்களுக்குமேல் ஓரிடத்தில் தங்க மாட்டார்கள். ஆடவர்கள் வேட்டையாடி, வேட்டைப் பொருட்களை விற்றும், பெண்கள் பாசிமணிகளை ஓரோரிடமாக அலைந்து திரிந்தும் விற்பார்கள். இத்தகைத்தான, வருவாய் ஓர் நிரந்தரமானதன்று; அரைவயிற்றுப்பாட்டிற்கே போதாத நிலை; எனவே, வயிற்றை அரைகுறையாகவாவது நிரப்பிக் கொள்ள, வீடுவீடாகச்சென்று, பிச்சை பெறும்நிலை; இதுதான், நரிக் குறவமக்களின் அவலம் நிறைந்த பொருளாதார நிலையாகும்.



இவர்களை ஒரே இடத்தில் தங்கவைக்க, ஆங்காங்கே, இலவச வீடுகட்டித்தருதல், இவ்வினத்துச் சிறார்களைக் கல்விகற்க வைக்கத்தக்க ஏற்பாடுசெய்தல், வருவாய் ஈட்டத்தொழிலுக்கு மான்யத்துடன் கூடிய கடன்வசதி செய்து கொடுத்தல் போன்ற பல்வேறு முகத்தான், அரசு தன் உதவிக்கரத்தை நீட்டத்தான் செய்கிறது என்பது உண்மையே.

கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தைச்சார்ந்த கெங்கைகொண்டான் கிராமத்தில், ஓர் அதிசயம் நிகழ்ந்தது; ஆம், இத்தகைய 'நாடோடி' வாழ்க்கையினை சகஜமாக

ஏற்றுக்கொண்டிருந்த நரிக்குறவர் நிலையாக கெங்கை கொண்டானிலேயே தங்கமுடிவெடுத்தார்கள். ஆனால், நிரந்தரத்தொழிலில்லாமல், அவர்களுடைய வறுமையும் அவலமும் தொடரத்தான் செய்தது. அத்தகைய வறுமைச் சூழலில் நரிக்குறவப் பெண்களின் நிலை, மிக வேதனைதரத்தக்க 'சோகம் நிறைந்த - சோதனைத் தொடராகவே' இருந்து வந்தது.

இந்நிலையில், உழைக்கவும், அதன்மூலம் பொருளீட்டவும், தயாராக இருந்த அப்பெண்களுக்கு, நம்பிக்கை நட்சத்திரமாக உதயமானதுதான், 'கிராமப்புற ஏழை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமாகும்' நரிக்குறவப் பெண்களின் பாரம்பரியத் தொழிலான, 'பாசிமணி தயாரிக்கும் தொழிலை மேற்கொண்ட இவர்களுக்கு மூலப்பொருட்களை வாங்கி தொழிலைத் தொடரப் பொருளாதார நிலை குறுக்கிடத்தான் செய்தது.

எனவே, இந்நரிக்குறவப்பெண்கள் சற்றுத் துணிச்சலோடு, 1990ல் கம்மாபுரம் ஒன்றிய அலுவலகத்திற்குக் கடனுதவி கேட்டுச் சென்றனர். அவ்வலுவலகத்தில், அவர்களுக்கு 'கிராமப்புற ஏழை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின்' அனுகூலங்கள் குறித்து விளக்கம் தரப்பட்டது. அதனடிப்படையில், 20 நரிக்குறவப் பெண்மணிகள் ஒரு குழுவாக ஒருங்கிணைந்தனர்; நரிக்குறவப் பெண்களின் 'பாசிமணி தயாரிக்கும்' இச்சிறு தொழிலுக்கு, தலா ரூபாய் 6,000 வீதம், 1,20,000 ரூபாய் வங்கிக்கடனாகப் பெற்றுத் தரப்பட்டது. அதோடு, அக்குழுவிற்கு சுழல்நிதியும் வழங்கப்பட்டது. எனவே, பாசிமணித் தொழிலுக்கான மூலப் பொருட்களை, இந்நிதியைக் கொண்டு, மொத்தமாக வாங்கினர்; தொழில் தொய்வின்றி நடைபெற்றது. தயாரான பாசிமணிமாலைகள், உள்ளூர்ப் பகுதிகளிலேயே விற்பனையாயின.

எனவே, இக்குழுவைச் சேர்ந்த ஒவ்வொரு நரிக்குறவப்பெண்ணுக்கும் நாளொன்றுக்குச் சராசரியாகக் குறைந்தபட்சம் 20 ரூபாய் வருமானம் கிட்டியது. வங்கிக்கடனுக்கான தவணைத் தொகையும் இந்நரிக்குறவப் பெண்களால், தவறாமல் திருப்பிச் செலுத்த முடிந்தது. வருவாயாகக் கிடைத்ததைக் கொண்டு தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

தற்பொழுது, இவர்களுக்கு எதிர்காலச் சந்ததியை, கல்விகற்றவர்களாக, ஏனைய சமுதாயத்தினரைப் போன்று முன்னேற்றம் அடைந்தவர்களாக சமூகத்தில் உரிய அந்தஸ்தைப் பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்ற உந்துதலால், உத்வேகமும், புதிய நம்பிக்கையையும் பெற்றுள்ளனர் என்பது, ஓர் பாராட்டப்படவேண்டிய அம்சமாகும். 'தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே; துணிந்துநில்; தொடர்ந்துசெல்; வெற்றி நிச்சயமே' என்ற முதுமொழி இவர்களுக்குச் சாலப்பொருத்தமன்றோ ?

இத்திட்டத்தில் பங்கேற்றுப் பயனடைய விரும்பும் ஊரகக்கிராம ஏழைப் பெண்கள், மேலே விவரித்தவாறு, 15 அல்லது 20 பெண்கள் ஒரு குழுவாக இணைந்து, வாய்ப்பான ஒரு தொழிலைத் தெரிவுசெய்து, கிராமசேவிகா அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி, தொழில்நுட்ப உதவி, பயிற்சி மற்றும் நிதிஉதவிகளைப் பெற்றிடலாம்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பதால் கிராமப்புற ஏழைப்பெண்கள் இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் முயன்று பார்க்கலாமே!

தொகுப்பு: **இரா.பரதன், எம்.ஏ.,**





**1-11-97** அன்று முதலமைச்சர் ஏழு எய்ட்ஸ் பிரச்சார வேன்களை கொடியசைத்து மாவட்டங்களுக்கு அனுப்பிவைத்தார்.

# தெரிந்து கொள்வோமா !

**காற்றாலைகள் எப்பொழுது முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டன ?**

காற்றாலை என்பது காற்றின் சக்தியைப் பயனுள்ள பணிகளுக்கு மாற்றுவதாகும். காற்றாலையின் மிக முக்கியமான பொதுப்பயன் யாதெனில், தானியங்களை அரைப்பதும், தண்ணீர் இறைப்பதுமாகும். காற்றுத் திசைகாட்டி அல்லது கப்பற் பாய் போன்ற சமச்சீர் நிலையிலுள்ள காற்றால் இயங்கும் சக்கரங்கள் மத்தி யிலுள்ள நீண்டகம்பியுடன் கூடிய அச்சில் இணைக்கப் பட்டிருக்கும். காற்றடிக்கும் பொழுது இவைகள் இயங்கி மைய அச்சினைத் திரும்பச் செய்யும். இதனால், ஏற்படும் உந்துசக்தி பல்சக்கரங்களை இயக்குவதன் மூலம் அதனுடன் இணைக்கப் பட்டுள்ள இயந்திரம் செயல்படத் தொடங்கும்.



காற்றாலையின் நியமம், பழங்காலத்திலேயே, தெரிந்திருந்தாலுங்கூட 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான், இதனுடைய பயன் ஓரளவிற்குத் தெரிந்திருந்தது. இக்காலகட்டத்தில், ஐரோப்பாவில், காற்றாலைகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

தொடக்க காலத்தில் உருவாக்கப்பட்ட காற்றாலை ‘கம்பம்’ அல்லது ‘ஜெர்மன் காற்றாலை’ என அழைக்கப்பட்டது; இவ்வகைத்தான அமைப்பில், நிலையான ஒரு செங்குத்தான கம்பத்தைச் சுற்றி காற்றாலை முழுவதும் காற்றை எதிர்த்துச் சுழலக்கூடிய அமைப்பில் இருக்கும். பிரிதொரு வகையிலான காற்றாலை, கோபுரம் அல்லது டச்சு ஆலை என்றழைக்கப்பட்டது; இவ்வகையிலான ஆலையில், காற்றுச் சக்கரமும், அச்சும், அசையாது நிலையாக நிற்கும் ஒரு கோபுரத்தின் உச்சியில் சுழலும் சிறு கோபுரத்துடன் இணைத்து அமைக்கப் பட்டிருக்கும்.

ஜெர்மன் வடிவக் காற்றாலை, 2-லிருந்து 8 குதிரைசக்தி திறனுடையதாகவும், டச்சு வடிவுக் காற்றாலையானது 6-லிருந்து 14 குதிரைசக்தி திறனுடையவைகளாகவும் இருந்தன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட காற்றாலைகளில் பாதிக்கு மேலான குதிரை சக்திகள், இயந்திரத்திற்குச் செலுத்தப்படும் பொழுது வீணாகியதால், அத்தகு இயந்திரங்கள் மிகுந்த திறனுடையவைகளாக இருக்கவில்லை. ஆனாலும், 18-ஆம் நூற்றாண்டில், நீராவி சக்தி உருவாக்கப்படும் வரை காற்றாலையால் இயங்கும் கருவிகள் அதிக அளவிலேயே பயன்படுத்தப்பட்டன. 17ஆம் நூற்றாண்டில், நெதர்லாந்தில் மட்டும், ஏறத்தாழ 8,000-க்கும் மேற்பட்ட காற்றாலைகள் இருந்தன.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், நீர் இறைக்கும் சிறிய காற்றாலைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில், மிகவும் புகழ் பெற்று விளங்கின. விவசாயம், கால்நடைகளுக்கு மற்றும் வீட்டு உபயோகம் ஆகியவற்றிற்கு நீர் இறைக்கவும் இவைகள் பயன்படுத்தப்பட்டன.

**தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்**

காற்று, சூரியன், உயிரியல் போன்ற புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களையும், அதனுடைய பயன்களையும் செயல்விளக்கம் வாயிலாகப் பிரபலப் படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தமிழக அரசால் 1985-ல் ஏற்படுத்தப்பட்டது.

அவ்வகையில் காற்று சக்தியைப் பயன்படுத்தி, காற்றாலை இயந்திரத்தை இயக்கி அதன் மூலம் மின் உற்பத்தி செய்யும் முதல் காற்றாலைப் பண்ணை தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காட்டில் 1986 ஜனவரியில் ஏற்படுத்தப்பட்டது.

தூத்துக்குடி, கன்னியாகுமரி, ஈரோடு, திருநெல்வேலி மாவட்டங்களில் அரசின் சார்பில் 19.555 மெ.வா. திறன் கொண்ட 120 காற்றாலைகளும், தனியார் சார்பில் 70.6 மெ.வா.திறன் கொண்ட 2,458 காற்றாலைகளும் நிறுவப்பட்டுள்ளன.


காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதற்காக அகில இந்திய அளவில் முதல் பரிசினை தமிழ்நாடு 1991-லிருந்து 1994-95 வரை தொடர்ந்து பெற்று வருகிறது.

**எவ்வாறு விளம்பரங்கள் முதன்முதலில் வெளியிடப்பட்டன ?**

சிலவற்றை மக்களுக்குத் தெரிவிக்கும் முறையே விளம்பரமாகும். ஒருவரை மக்களின் முன் நிறுத்தி, அவருடைய பெயரை விளம்பரப்படுத்துவதற்கும், அல்லது ஒரு தயாரிப்புப் பொருளை விற்பதற்கும் அல்லது ஒரு சேவையைப் பற்றியும் அல்லது மக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டியவைகளை அறிவுறுத்துவதற்கும், இத்தகையானவற்றிற்கென விளம்பரம் பயன் பெற்றது.

எனவே, விளம்பரம் தோன்றும் பொழுதே, இயற்கையாக வெளிவந்த பொழுதே, பல்வேறு முறைகளைக் கொண்டே வெளிவந்தது.

கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன்பு, பல்வேறு கட்டணச் சேவைகளை எங்கு ? எவ்வாறு பெறலாம் ? என்பது குறித்து மக்களுக்கு அறிவிக்கும் வகையில், கிரேக்கத்திலும், எகிப்திலும் விளம்பரப் பலகைகள், வெளியிடங்களில் வைக்கப்பட்டிருந்தன; இது ஒரு விளம்பர முறையாகும்.



அச்சடிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டதால், 1477ல் விளம்பரத்தின் ஒரு புது வகையாக, லண்டனில், ஒரு வழிபாட்டுப் புத்தக விற்பனை தொடர்பாக, ஆங்கிலத்தில் முதலாவதான, அச்சடிக்கப்பட்ட விளம்பரம் வெளியிடப்பட்டது. 1625-ல், லண்டனில், செய்திப் பத்திரிக்கையில் முதல் விளம்பரமாக, கடைசிப் பக்கத்தில் அச்சிடப்பட்டு வெளியானது.

1704-ஆம் ஆண்டு வரையிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில், கட்டணத்துடன் கூடிய விளம்பரம் ஏதும் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. 1771-ல் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளில் அச்சிடப்பட்ட 31 செய்தித்தாள்களிலும், விளம்பரங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

ஆனால், தற்பொழுது நாளிதழ்களில் மட்டுமல்லாமல், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலமாகவும் விளம்பரங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. 1920-ல், முதன் முதலில் வானொலிகள், வர்த்தக ஒலிபரப்புகளைத் தொடங்கின.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே, தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டன. இந்த யுக்தி வெகு விரைவாகப் பரவியது மட்டுமல்லாமல், தொலைக்காட்சியில் நாம் பார்க்கும் பிற காட்சிகளை விட விளம்பரக் காட்சிகளைப் பலரும் நினைவில் நிறுத்திக் கொள்ளுமளவுக்கு, தொலைக்காட்சி விளம்பரங்கள் புகழடைந்துள்ளன.


### எப்பொழுது முதன்முதலில் தேர்தல்கள் நடைபெற்றது ?

தேர்தல் என்ற வார்த்தை 'தேர்ந்தெடு' என்ற அர்த்தத்தில் இலத்தீன் மொழியில் இருந்து வந்ததாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தங்களுடைய தலைவர்களைத், தாங்களாகவே, தேர்வு செய்துகொள்ள உரிமை உண்டென்று மக்கள் உணர்ந்தனர்.

பழங்கால ஹீப்ரூ மற்றும் கிரேக்க நாட்டு மக்கள் இந்த உரிமையைப் பெறப் போராடினார்கள். தொடக்க கால இஸ்ரேலிய மன்னர்கள், பொதுமக்களாலேயே தேர்வு செய்யப்பட்டனர். அதேபோன்று, கிரேக்கப் போர்ப்படைத் தளபதிகளும் பொதுமக்களாலேயே தேர்வு செய்யப்பட்டனர்.

1500 ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கிலேய சாக்ஸன் போராளிகளால், பிரிட்டனில் சுதந்திரமாகத் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் முறை, கொணரப்பட்டது. இவ்வாறு உள்ளூர் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆங்கிலேய சிந்தனைக்குட்பட்டு, தொடக்ககாலக் காலனி ஆதிக்கத்தினரால், அமெரிக்காவிற்கும் கொண்டுவரப்பட்டன. அமெரிக்கப் புரட்சிக்கு முன்னரேயே, அமெரிக்கர்கள், தங்களுடைய நகரியக் கூட்டங்களிலும், காலனி அமைப்புகளிலும், வாக்களித்து வந்தனர்.

ஆனால், தேர்தல் என்பது எப்பொழுதும், ஒரு பெரிய பிரச்சினையாகவே காட்சியளித்தது; யாருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு ? சொத்துரிமை பெற்றவர்களே, ஒரு சமயத்தில், வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர்; வரலாறு முழுவதிலும் இத்தகைய, வித்தியாசமான வரைமுறைகள் இருந்து வந்தன. உதாரணமாக ஒருவரின் வசதி வாய்ப்பைப் பொறுத்து அவருக்கு, வாக்குரிமை வழங்கப்பட்டது. வெகுகாலமாகப் பெண்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. பலநாடுகளில் முதலாவது உலகப்போருக்குப் பின்னர், பொது வாக்குரிமை என்பது எய்தப்படாமலிருந்தன. பெண்கள் வாக்குரிமையைக் கோரும் அமைப்பினர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகு கருத்துக்களைப் பொதுமக்களிடம் வலியுறுத்தி வந்தனர். இதற்கென அவர்கள் கடுமையான கட்டங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.



புதிய மக்கள் பிரிவினர்களுக்கு வாக்களிக்கும் உரிமம் வழங்கிட ஏதுவாக வாக்களிப்பதற்கென வரைமுறைகள் இன்னமும் அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. அண்மையில்கூட, வாக்களிக்கும் வயது 21லிருந்து 18ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், குறிப்பாக - சோழப் பேரரசில், அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த - சங்ககாலம் முதலாகவே, தம்முடைய கிராம அமைப்புகளுக்குரிய தலைவர்களை, பிரதிநிதிகளை பொதுமக்களே வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 'குடவோலை' என்னும் ரகசிய வாக்கெடுப்பு முறையும் அக்காலத்தில்- கி.பி. 1300க்கு முன்பே இருந்திருப்பதாக வரலாறு கூறுகிறது.

தொகுப்பு 'இளவல்'

# நூல் நயம்

## விடுதலைச் சுடர்கள்

ஆசிரியர் : ருக்மணி சேஷசாயி
வெளியிட்டோர் : சாயி பதிப்பகம்,
6 - 43வது தெரு,
அசோக் நகர், சென்னை-600 083

பக்கம் : 80 விலை : ரூ.15.00

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா கொண்டாடும் வேளையில் - 10 சுதந்திரப் போர்த் தியாகிகள் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் இந்த நூலில் சுருக்கித் தரப்பட்டுள்ளன. மாணவ மணிகளுக்கேற்ப, எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

## பெருங்கவிஞர் நெ.அ.பூபதி கவிதைகள்

ஆசிரியர் : நெ.அ. பூபதி
வெளியிட்டோர் : தேன்மொழி வெளியீடு,
22, பாரதிதாசன் தெரு,
குமரன் காலனி,
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

பக்கம் : 160 விலை : ரூ.35.00

மொழி, இனமானம், இயற்கைக் கவின், காதல், வீரம் எனப் பலதுறைக் கவிதைகள் பலவற்றின் தொகுப்பு நூல் இது. மரபுக் கவிதைகள், சந்தக் கவிதைகள் எல்லாம் இனிய தமிழில் யாக்கப்பட்டுள்ளன. தனிக் கவிதைகள்-பல ஏடுகளில் இனிதாக இடம் பெற்றவை யாவும் இதில் அடக்கம்.

## வெற்றியின் வெளிச்சம்

ஆசிரியர் : டாக்டர் பி.கே.ராம்கமால்
வெளியிட்டோர் : கிள்ளிவளவன்
பிரேமாவதி பதிப்பகம்,
மகுடஞ்சாவடி,
சேலம் மாவட்டம்-637 103

பக்கம் : 131 விலை : ரூ.30.00

விரக்தியுற்ற மனத்தை வீரத்தின் விளைநிலமாக்கிடும் தன்னம்பிக்கையூட்டும் வாழ்வியல் கட்டுரைகள் - அறிவுரைகள் பல கொண்டுள்ள நூல் இது. ஒவ்வொரு கட்டுரை முடிவிலும் உலகப் பேரறிஞர் ஒவ்வொருவர் பொன்மொழி கொடுக்கப்பட்டிருக்கிறது.

## கொஞ்சும் தமிழ்

ஆசிரியர் : தமிழ்மணி கமலம்
வெளியிட்டோர் : வெற்றிக்கனி பதிப்பகம்,
'தென்றல் இல்லம்',
அரியலூர்,
திருச்சி மாவட்டம்-621 704

விலை : ரூ.12.00
பக்கம் : 87

## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை : 25-10-97, வேலூர் மாவட்ட நீதிமன்ற கட்டடத் திறப்பு விழா

இரண்டாவது அட்டை : ஜவஹர்லால் நேரு பிறந்த தினம்- (நவம்பர் 14)
**குழந்தைகள் தினம்**

நான்காவது அட்டை : 23-10-97 அன்று, சென்னை - சேப்பாக்கத்தில், வேளாண்மைத்துறை இயக்குநரகப் புதிய கட்டடத்தை திறந்துவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்.

அழகு மலர், புதுமலர், புகழ் மலர், அறிவு மலர் - ஆகிய 4 பகுதிகளின் கீழ் நூலாசிரியர் படைத்த குழந்தைப் பாடல்கள் தொடுக்கப்பட்ட மாலையாக விளங்குகிறது இந்த நூல். குழந்தைப் பாடல் தொகுப்பு என்பதால் ஒவ்வொரு பாடல் தலைப்பிலும் அதற்கான ஓவியம் அணி செய்வது பொருத்தமாக இருக்கிறது.

## கவிஞர் பார்வையில் பசும்பொன் தேவர்

தொகுப்பாசிரியர் : கவிஞர் சிந்தனைச் செல்வன்
வெளியிட்டோர் : கார்த்திகேயன் பதிப்பகம்,
டி-112,எம்.ஜி.ஆர்.நகர்,
வியாசர்பாடி, சென்னை-600 039

பக்கம் : 100 விலை : ரூ.20.00

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி 100 கவிஞர் பெருமக்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது. மரபுக் கவிதைகள் - சந்தக் கவிதைகள் இதில் தொடுக்கப்பட்டுள்ளன.

## சிதைந்த சிலை

ஆசிரியர் : கவிஞர் காவனூர் வேலன்

வெளியிட்டோர் : பாவலன் பதிப்பகம்,
211, காயிதேமில்லத் நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

பக்கம் : 102 விலை: ரூ.25.00

'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்ற ஏட்டில் வெளிவந்த நாடகத்தைச் சற்று விரிவாக்கித் தந்திருக்கிறார், ஆசிரியர்; 13 கதாபாத்திரங்களோடு, பைந்தமிழ்ப் பண்பாட்டு நெறிபோற்றுவதாக எழுதப்பட்டிருக்கிறது.

-'இந்திரன்'



# குழந்தைகள் மனநலம்

ஆசிரியர் : டாக்டர் எம்.திருநாவுக்கரசு
வெளியீடு : வானதி பதிப்பகம்,
13, தீனதயாளு தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை-17.

பக்கம் : 275 விலை ரூ.55.00

குழந்தைகள்மனம் எழுதப்படாத வெள்ளைத் தாளைப் போன்றது. குழந்தைப் பருவம் வாழ்க்கையின் வைகறைவேளை. குழப்பங்களும், கவலைகளும் மன அழுத்தங்களும் தொடாத, தொடக்கூடாத தூய மலர்கள் அவர்கள்! பிரச்சினைகளால் பீடிக்கப்படுகின்ற பெரியவர்களுக்குப் பல்வேறு வகையில் மன நலம் பாதிக்கப்படலாம். ஆனால் குழந்தைகள் மனநலம் பாதிக்கப்படக் கூடுமா? கூடும் என்பதுதான் அதிர்ச்சி அளிக்கக்கூடிய நிலைமை.

டாக்டர் எம். திருநாவுக்கரசு அவர்களின், 'குழந்தைகள் மன நலம்' என்னும் இந்த நூல் இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்கிற அரிய நூலாக அமைந்திருக்கிறது.

குழந்தைகள் மன நலம் என்னும் தலைப்பை அதிலும் குறிப்பாக, இதை எழுதி இருப்பவர் ஒரு மருத்துவர் என்ற குறிப்பை, பார்த்தவுடனே, இது ஏதோ ஒரு மருத்துவக் கட்டுரையாகத்தான் இருக்கும் என்ற மேலோட்டமான தீர்மானத்துடன்தான் இப்புத்தகத்தைத் திறந்து பார்க்கத் தோன்றியது.

ஆனால், அணிந்துரை, சிறப்புரை மற்றும் முகவுரையை படித்தவுடன் நூல் முழுவதையும் படிக்க வேண்டும் என ஆர்வம் மேலிட்டது. ஏனெனில், ஆங்கில முறை மருத்துவம் தமிழுக்குத் தொடர்பற்றது என்றும், அறிவியலும், பொறியியலும் ஆங்கிலத்துக்கே சொந்தம் என்றும் நினைக்கும் ஆங்கில மோகத்தின் ஆணி வேரையே அசைத்துப் பார்க்கும் ஓர் அரிய முயற்சியாகவே இந்த நூல் அமைந்துள்ளது. தமிழால் முடியும் என்னும் நம்பிக்கையின் நல் விளைச்சல் தான் இந்த நூல்.

அறிவியலும், பொறியியலும், மருத்துவமும் தாய்த் தமிழில் கற்பிக்கப்பட்டாக வேண்டும் என்று வலியுறுத்தி வரும், நமது தமிழாய்ந்த தலைவர்களின் இலட்சியப் பிரகடனங்களுக்கு வலுவூட்டும் சான்றாகவே இந்த நூல் விளங்குகிறது.

குழந்தை மனம் என்னும் இந்த நூல் குழந்தையை மட்டும் தொட்டுப் பார்க்கவில்லை; தனி மனிதனை, குடும்பத்தை, ஏன், நமது சமூக அமைப்பையே நாடி பிடித்துப் பார்க்கிறது. இது இந்த மருத்துவரின் எழுதுகோல் சாதனை.

மன நோயின் பல்வேறு நிலைகள் குழந்தைப் பருவத்தில் எவ்வாறு தாக்குகின்ற, மன நோயின் குறிகள் யாவை, அவற்றை அணுக வேண்டிய நுண் முறைகள் யாவை என்பவற்றை உள்ளடக்கி, மன நோய் மருத்துவருக்கு, ஒரு தொழில்நுட்பக் கால அட்டவணையாக இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

'ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அது தாண்டா வளர்ச்சி'

என்ற மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையாரின் விழிப்புணர்வுச் சிந்தனையை நினைவூட்டும் வகையில் மன வளர்ச்சியின்மையின் இயல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மழலைப் பருவம் தொட்டு, வளர் இளம் பருவம் வரை, தேவையற்ற அச்ச உணர்வுகள் மன இயல்பில் ஏற்படுத்தும் கோளாறுகள் பல. அவற்றை விவரிக்கு பகுதிகளை படிக்கிறபோது.

"வேப்ப மர உச்சியில் நின்று பேய் ஒண்ணு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க"

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகள் நம் எண்ணத் திரையில் மின்னி வருகின்றன.

நூலாசிரியர் தொழிலால் மருத்துவர் என்றாலும், அவருடைய பார்வை வெறும் தொழில்நுட்பப் பார்வையாக மட்டும் அமையாமல் சகோதர மருத்துவருக்குச் சமூக அக்கறையோடு வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் விளங்குகின்றது. குழந்தையின் மன நோய்க்கு, வெறும் மருந்து மற்றும் மாத்திரைகள் மட்டுமே பயன்தரா. பெற்றோர்களும் உரிய பயிற்சியைப் பெற்றிருந்தால் தான் மன நோயை வெல்லலாம் - என்பது போன்ற கருத்துக்கள், குழந்தை வளர்ப்பு பற்றிய வழிகாட்டியாய் இந்த நூலை ஆக்கியுள்ளன.

குழந்தை மனநோய்ச் சிகிச்சை என்பது பெற்றோர், சுற்றத்தார், மருத்துவர் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இந்த முத்தரப்பு ஒத்துழைப்பே நோய் நீக்கும் அருமருந்தாகும் என்று நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ ரீதியில், பிரசவத்தில் தோன்றி, தொடரும், உடற்கூறு இயல்புகளின் மாற்றங்கள் குழந்தையின் மனநோய்க்குக் காரணமாகும் என்று விவரிக்கப்படுகின்றது. அதே நேரத்தில், சமூக அமைப்பில், இன்றைய சூழலில், 'கூடி வாழ்தல்' என்ற நிலை மாறி, 'தனிக் குடித்தன' முறையால், கணவன் மனைவியிடையே எழும் கருத்து வேற்றுமையின் விளைவாக குழந்தையானது தனிமைப்படுத்தப்பட்டு அகம் மற்றும் புற இறுக்கங்கள் காரணமாக மன நோய் உண்டாகிறது என்பதும் நெஞ்சைத்தொடும் வகையில் விளக்கப்படுகிறது. இத்தகைய சமூக அவலம் பற்றிய ஆசிரியரின் ஆதங்கம் நியாயமானதே.

நோய், மருந்து ஆகியவை பற்றிய விளக்க ஏடாக மட்டும் அமையாமல், மன ஊனம் அடைந்தவர்களை, குடும்பமும், சமூகமும் புறக்கணித்தாலும் கூட மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட நமது அரசமைப்பில் அவர்களுக்கு அளிக்கப்படுகிற அரசுச் சலுகைகளின் குறிப்பேடாகவும் இந்த நூல் விளங்குகிறது. ஊனம் என்பது ஒரு குறையல்ல என்பதை உணர்த்தி அவர்களை அரவணைக்க, ஆதரவுக் கரம் நீட்டுகிற அரசால் வழங்கப்படும் பேருந்து, ரயில் கட்டணச் சலுகைகள், பயின்றிடத் தனித்த வாய்ப்புகள், வேலைவாய்ப்பில் முன்னுரிமை போன்ற பல்வேறு சலுகைகள் பற்றி ஆசிரியர் குறிப்பிடுவது பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் தேடித் தந்துள்ள இந்தத் தகவல்கள் அவரது பொதுநல ஈடுபாட்டை விளக்குகின்றன.

மேலும், தன்னார்வ அமைப்புகள், இப்பிரச்சினையில் அணுக வேண்டிய முறைகள் மற்றும் அரசிடமிருந்து நிதி உதவி பெற்றிட வேண்டிய வழிமுறைகள் ஆகியவற்றையும் விளக்குவதன் மூலம் தன்னார்வ அமைப்புகளுக்கு இந்நூல் ஒரு தகவல் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

ஆசிரியரின் சமூக அக்கறைக்குச் சான்று பகரும் இன்னொரு அம்சத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். பாதிப்புக்குள்ளாகும் பெற்றோர்கள் மக்களாட்சியின் மாண்பாக விளங்கிவரும் 'நமக்கு நாமே' என்ற நியதியைக் கடைப்பிடித்து, வட்டார அளவு வரை தாங்களாகவே ஒருங்கிணைந்து, அத்தோடு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, மன நலம் பேணும் அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற ஆசிரியர் இதுகுறித்து, ஆரம்பத் திட்டமிடுதல், வழிமுறைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் தம்மையே அணுகலாம் என்றும் உதவிக் கரம் நீட்டியுள்ளார்.

'குழந்தை மன நோய்' என்கின்ற புரியாப் புதிருக்கு தீர்வை வழங்கி நம்பிக்கை ஒளியையும் வழங்குகின்ற டாக்டர் எம். திருநாவுக்கரசு அவர்களின் தாய்மொழிப் பற்றும், பகுத்தறிவுச் சிந்தனைகளும் பாராட்டப்பட வேண்டியவை.

படித்து, பலரையும் படிக்கவைத்து, பாதுகாக்கப் படவேண்டிய இந்த நூலை வாசிக்கின்ற ஒவ்வொருவரிடமும், அறிவியல், தொழில்நுட்பங்களை அன்னைத் தமிழுக்கு அள்ளி வழங்கும் அரிய கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு, தமிழரசு கேட்டுக் கொள்கிறது.

தீராப் பிரச்சினைக்குக் கிடைத்த திறவுகோல் இந்த நூல். குழந்தைகள் - நேசிக்கத்தக்கவர்கள். அவர்களைப் பற்றிய இந்த நூல் வாசிக்கத்தக்கது!

- இரா. சௌமியனிளவல், எம்.ஏ.

# எங்கள் ஊர்ப் பிரச்சினை

**பிரச்சினை:**

எங்கள் ஊர் சித்தமல்லி, நாங்கள் புத்தகரம் என்ற சிற்றூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் படிக்கிறோம். நாங்கள் சுமார் 2 கி.மீ. தொலைவு நடக்க வேண்டும். சித்தமல்லியில் இருந்து புத்தகரத்திற்கு 2.கி.மீ. தூரம் இருந்தும் ஒரு பேருந்துதான் செல்கிறது. அதுவும் 10.45க்கு புத்தகரம் வருகிறது. ஆகவே நாங்கள் பள்ளிக்குக் காலதாமதமாகச் செல்ல வேண்டியுள்ளது. பேருந்தின் எண் 27 எல்.எஸ்.எஸ். ஆகவே 9.30க்குப் பேருந்து செல்ல வேண்டுமாறு சிரம் தாழ்த்திப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*- மாணவர்கள், சித்தமல்லி,*
*தஞ்சை மாவட்டம்*

**தீர்வு:**

பட்டுக்கோட்டை நகரத்தடம் எண் 27 காலையில் 7.45க்கு பெருகவாழ்ந்தானில் நடை எடுத்து அங்கிருந்து முத்துப்பேட்டை, துவரங்குறிச்சி தட மாணவர்கள்



பட்டுக்கோட்டைக்குக் கல்வி பயிலச் செல்லும் வகையில் இயக்கப்பட்டு அத்தடத்தில் இருக்கும் மாணவர்கள் பயன் அடைகிறார்கள். சித்தமல்லி கிராமத்தில் போதிய அளவு பயன்பாடு இல்லை. கோரிக்கைப்படி தடம் எண்27ல் கால நேரத்தை மாற்றி, காலை 9.30க்குப் புத்தகரம் வரும்படி இயக்கினால் மேற்கண்ட 7.45 மணி நடையைப் பெருகவாழ்ந்தானில் காலை 6.30க்கு எடுக்கும் நிலை ஏற்பட்டு, பெருகவாழ்ந்தான்-முத்துப்பேட்டை தட மாணவர்களால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதால், கோரிக்கைப்படி நேரமாற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும் புத்தகரம் பள்ளியின் நேரத்தினை மாற்றம் செய்தால் மாணவர்களுக்குத் தற்போதுள்ள பேருந்து சரியானதாக அமையும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*- பொது மேலாளர்*
*(இயக்கம்,) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*கும்பகோணம்.)*

**பிரச்சினை:**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு, கமலாபுரம் அஞ்சல், சொ்லப்பள்ளி கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் தெருவில் சுமார் 300க்கும் மேற்பட்ட நபர்கள் வசிக்கிறார்கள். மேலும் வியாபார சம்மந்தமாக 500க்கும் மேற்பட்டவர்கள் நடக்கிறார்கள். இந்தத் தெருவில் மூன்று நபர்கள் தங்கள் வீட்டு (பாத்ரூம்) சாக்கடை நீரைக் கடந்த ஏழு எட்டு ஆண்டு காலமாகத் தெருவில்தான் விடுகிறார்கள். கேட்டால், 'தெருவில்தானே விடுகிறோம்; உங்கள் வீட்டில் விடவில்லையே? உங்களால் என்ன முடியுமோ செய்து கொள்ளுங்கள்' என்று சொல்கிறார்கள் தற்சமயம் காலரா, யானைக்கால் நோய் போன்ற கொடிய நோய்கள் கொசு உற்பத்தியினால் பெருமளவில் பெருகிவருகிறது. மேலும் தெருவில் அரசு பொது குடிநீர்க் கிணறும் இருக்கிறது. இதன் மூலம் வீணாகும் தண்ணீரும் தெருவில்தான் பாய்கிறது. எனவே தெருவே எப்பொழுதும் சேறும் சகதியுமாகவே காட்சியளிக்கிறது. எனவே இச்சுகாதாரச் சீர்கேட்டைச் சரிசெய்து, எங்கள் பிரச்சினையைத் தீர்க்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- பொதுமக்கள்,*
*சொ்லப்பள்ளி கிராமம்,*
*வேலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த டி.டி.மோட்டூர் ஊராட்சியின் சொ்லப்பள்ளி கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய்கள் இரண்டு தெருக்களில் மட்டும் உள்ளது. மற்ற தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய் இல்லை.போதுமான இடவசதியற்ற வீடுகளாக உள்ளன. தங்கள் வீட்டுக் கழிவுநீரை வீட்டு வெளியில் சிறிய குழி எடுத்துத் தேக்கியுள்ளனர். மழைக்காலங்களில் குழிகள் நிரம்பி வெளியில் வர வாய்ப்புள்ளது. இதனால் மக்களுக்குச் சுகாதாரச் சீர்கேட்டால் விளையும் தீமைகள் பற்றியும் சுகாதாரத்துடன் வாழ அறிவுரைகளும் வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்) மற்றும் ஊராட்சி விரிவு அலுவலர் ஆகியோரால் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் தெருக்களில் கழிவுநீரை விடாமல் தங்கள் வீட்டின் அருகே உறிஞ்சுகுழிகள் அமைக்குமாறும் அருகே உள்ள கழிவுநீர்க் கால்வாயுடன் தங்கள் வீட்டுக் கழிவுநீர் கால்வாயை இணைக்குமாறும் அறிவுரை வழங்கப்பட்டது. அவர்களிடம் கழிவுநீரைத் தெருக்களில் இனிமேல் விடமாட்டோம் என உறுதிமொழியும் எழுதி ஒப்புதல் பெறப்பட்டது.

வரும் நிதியாண்டில் இக்கிராமத்தில் புதிய கழிவுநீர்க் கால்வாய்கள் கட்ட 65% ஒதுக்கீட்டில் சேர்க்குமாறு அந்த ஊராட்சியின் தலைவருக்குத் தெரியப்படுத்தி ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*- மா.காசிநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்*
*(கிராம ஊராட்சிகள்), பேர்ணாம்பட்டு.*

பிரச்சினை:

விழுப்புரம் மாவட்டம், வழுதாவூர் பெரிய கிராமம். இங்கு மேல்நிலைப்பள்ளி, மின்வாரிய அலுவலகம், வள்ளலார் கிராம வங்கி, ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் கால்நடைக் கிளை மையம் போன்ற அரசு அலுவலகங்கள் உள்ளன.

1. விழுப்புரம் வழுதாவூர் தடம் எண் 13 நகரப்பேருந்து இரவு வழுதாவூரில் நிறுத்த வேண்டிய பேருந்து;இரண்டு சிங்கிள் (இரவு) இயங்காமல் திருக்கனூரில் நிறுத்தப்படுகிறது. அது காலையில் வழுதாவூரில் புறப்படாததால் பெரும்பாலான மக்கள் விழுப்புரம் செல்லமுடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். இரவு இரண்டு சிங்கிள் இயக்கப்படுவதுடன் வழுதாவூரில் தங்க ஆவன செய்ய வேண்டுகிறோம் (முன்பு இந்தப் பேருந்து வழுதாவூரில் தங்கியது) .

2. விழுப்புரத்திலிருந்து வழுதாவூர் வழியாகப் புதுவைக்கு 248-டி தடம் எண்ணுள்ள பேருந்து இயங்கி வந்தது. அது நிறுத்தப்பட்டுள்ளது. அது மீண்டும் இயக்கப்பட வேண்டும்.

3. புதுவையிலிருந்து வழுதாவூர் வழியாகச் சென்னை சென்ற 87-டி பேருந்து இரண்டு நிறுத்தப்பட்டுள்ளது.

இவையனைத்துமே தனியார் பேருந்து உரிமை யாளர்களின் நெருக்குதலால் நிறுத்தப்படுகிறது என்று பொதுமக்களால் பரவலாகப் பேசப்படுகிறது.

எனவே, இவை அனைத்தையும் மீண்டும் இயக்கி, இப்பகுதி மக்களுக்கும், வியாபாரிகளுக்கும், கல்லூரி மாவணவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் உதவிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*- ஏ.சொக்கலிங்கம், ஆசிரியர்,*
*பக்கிரிப்பாளையம், விழுப்புரம் மாவட்டம்*

தீர்வு:

*டி-13 நகரப்பேருந்து விழுப்புரத்திலிருந்து வழுதாவூருக்குச் செல்லும். இரவு தங்கல், இரவு நடையினையும் காலை வழுதாவூரிலிருந்து புறப்பட்டு விழுப்புரம் அடையும் நடையினையும் போதிய அளவு பொதுமக்கள் பயன்படுத்தாத காரணத்தாலும், பொம்பூர் கிராம மக்களுக்கு இரவுப் பேருந்து வசதி தேவை இருந்த காரணத்தாலும் இந்நடைகள் பொம்பூருக்கு அளிக்கப்பட்டன.*

*மேலும் விழுப்புரத்திலிருந்து வழுதாவூருக்கு இரவு 19.37, 19.57, 20.15, 20.40, 21.05, 21.45, 22.30 மற்றும் 23.05 மணி வாக்கில் பேருந்து வசதியும், வழுதாவூரிலிருந்து விழுப்புரம் வந்தடைய பாண்டிச் சேரியில் காலை 02.15, 03.25, 03.40, 05.00, 05.15, 05.25, 05.55, 06.30 மணி வாக்கில் பேருந்து வசதியும் இருக்கின்ற காரணத்தால்தான், இம்மாற்றம் செய்யப்பட்டது.*

*87-டி புறநகர் பேருந்து பாண்டி-சென்னை (வழி) திருக்கனூர் வழித்தடத்தில் 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*- மேலாண் இயக்குநர்,*
*தமிழநாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*(விழுப்புரம் கோட்டம்-1)*

பிரச்சினை:

எங்கள் ஊர் பட்டுக்கோட்டை வட்டம், நாட்டுச்சாலை கிராமம் ஆகும். இங்கு தமிழ்நாடு அரசின் பொது நூலகத்துறையின் பகுதிநேர நூலகம் 1989-90 முதல் செயல்பட்டு வருகின்றது. இதில் பகுதி நேர நூலகராக திரு எஸ்.பாலசுப்பிரமணியம் என்பவர் பணியாற்றி வருகிறார். அரசு 30.1.96-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்கும் திட்டத்தில் எங்களது நாட்டுச்சாலையும் உள்ளது என்பது தெரிந்ததே. ஆணை பிறப்பிக்கப்பட்டு ஓராண்டு ஆகியும் இன்னும் இந்தக்கிராமப்புற நூலகங்கள் திறக்கப்படவில்லை. இது எப்பொழுது திறக்க உள்ளீர்கள்? மேலும் அரசு கோரியிருந்தபடி அனைத்து நிபந்தனைகளையும் எங்கள் கிராமத்தில் பூர்த்தி செய்துள்ளோம் என்பதுடன் நூலக பெயர்ப் பலகை வரை எழுதித் தயார் நிலையில் வைத்துள்ளோம். ஆனால், சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி எப்பொழுது இந்தக் கிராமப்புற நூலகங்கள் திறக்க இருக்கின்றீர்கள் என



வினவும்போது அரசு இன்னும் திறக்கத் தகுந்த உத்திரவு பிறப்பிக்கவில்லை என்று கூறுகின்றனர். எனவே, இது குறித்து எப்பொழுது எங்கள் ஊரில் கிராமப்புற நூலகம் திறக்க உள்ளீர்கள் என்பதைக் கிராமம் சார்பாகவும், எனது சார்பாகவும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

*- வி.நமச்சிவாயம்,*
*முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்,*
*நாட்டுச்சாலை-614 906,*

தீர்வு:

*அரசாணை எண் 66 கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 30.1.96ல் மாநிலம் முழுவதும் அனுமதிக்கப்பட்டுள்ள 625 ஊர்ப்புற நூலகங்களில் தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஊர்ப்புற நூலகங்களில் நாட்டுச்சாலையும் இடம் பெற்றுள்ளது.*

*ஊர்ப்புற நூலகங்கள் திறப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் நாட்டுச்சாலை கிராம மக்கள் பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர்.*

*நூலகர் நியமனம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசிடமிருந்து ஆணை கிடைக்கப்பெற்றதும்*

உடனடியாக ஊர்ப்புற நூலகம் விரைவில் திறக்க ஆவன செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வமயம் நாட்டுச்சாலையிலும் நூலகம் உடன் திறக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

- இரா.கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை

பிரச்சினை:

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் துங்கபுரம் ஊராட்சியில் 1975ஆம் ஆண்டு தோலிஸ்வரபுரம் காலனியில் வானொலிக் கட்டடம் சீரணித் திட்டத்தில் கட்டப்பட்டு உள்ளது. நாளது வரை பழுது பார்க்கப்படாது இருக்கிறது. இந்த ஊராட்சியில் கிளியப்பட்டு கிராமத்தில் சீரணித் திட்டத்தில் கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. துங்கபுரம் காலனியிலும் சீரணித் திட்டத்தில் கட்டடம் கட்டப்பட்டு உள்ளது. நாளது வரை இந்த மூன்று கட்டடங்களையும் பழுது பார்க்காதது குறிப்பிடத்தக்கது. உடன் பழுது பார்க்க வேண்டுகிறேன்.

- க. சிவலிங்கம், துங்கபுரம்

தீர்வு:

துங்கபுரம் ஊராட்சியில் உள்ள கிளியப்பட்டு, துங்கபுரம் காலனி, கோவில்பாளையம் காலனி ஆகிய 3 கட்டடங்களையும், துங்கபுரம் ஊராட்சிக்கு வரும் நிதியாண்டில் (98-99) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் 65 சதவிகிதம் ஊராட்சிக்கு உரிய நிதி ஒதுக்கீட்டில் முதல் வேலையாக எடுத்துச் செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தற்போது துங்கபுரம் காலனி வானொலி மன்றமும் கோவில்பாளையம் காலனி வானொலி மன்றமும், தொலைக்காட்சி அறையாகச் செயல்பட்டு வருகின்றன.

- பொ.கருப்பையா,
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றியம், வேப்பூர்

பிரச்சினை:

எங்கள் ஊர் ஜே.கிருஷ்ணாபுரம் பல்லடம் தாலுகாவில் அமைந்துள்ள பின்தங்கிய பகுதியாகும். இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில் வெளியூர்களில் சென்று வியாபாரம் செய்வதாகும். முக்கியமாக இப்பகுதி மக்கள் பொள்ளாச்சி வழியாகக் கேரளம் பகுதியில் வியாபாரம் செய்துவிட்டு, இரவிலோ மறுநாளோ ஊர் திரும்பும் வழக்கம் உடையவர்கள். பொள்ளாச்சியிலிருந்து 36 கி.மீ. தொலைவில் இருக்கும் எங்கள் ஊருக்கு நேரடியாக பஸ் வசதி கிடையாது. செஞ்சேரி மலையோ அல்லது சுல்தான்பேட்டையோ வந்துதான் பஸ் மாற்றி ஏறவேண்டும். இதன் காரணமாகக் காலவிரயமும், பொருள் விரயமும் ஏற்படுகிறது.

எங்கள் ஊர்ப்பகுதியில் படிக்கும் மாணவர்கள் உயர்படிப்பிற்காகப் பொள்ளாச்சியில் அமைந்துள்ள கலைக்கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்திட இடம் கிடைத்தாலும் போக்குவரத்தின் காரணமாக மிகுந்த இன்னலுக்கு ஆளாகிறார்கள். தற்போது செஞ்சேரி மலை வரை பொள்ளாச்சியில் இருந்து வந்து கொண்டிருக்கும் தடம் எண் 48, 48-ஏ ஆகிய இரண்டு பஸ்களையும் 7 கி.மீ. தூரம் வரை நீட்டித்து, இப்பகுதி மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு விடியலைத் தருமாறு மிகப் பணிவுடன் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

- ஆர்.கண்ணன், ஜே.கிருஷ்ணாபுரம்

தீர்வு:

தடம் எண் 48 - பொள்ளாச்சி-
கப்பினிபாளையம் - 8 சிங்கிள்கள்

பொள்ளாச்சி-பெரியகழந்தை - 6 சிங்கிள்கள்

பொள்ளாச்சி-காட்டம்பட்டி - 2 சிங்கிள்கள் எனவும்,

தடம் எண் 48-ஏ - பொள்ளாச்சி-செங்சேரிமலை (வழி)
நகரக்கழந்தை - 8 சிங்கிள்கள்

பொள்ளாச்சி-செஞ்சேரிமலை (நேர்வழி) - 4 சிங்கிள்கள் எனவும் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மனுவில் கோரியுள்ளபடி இப்பேருந்துகளை ஜே.கிருஷ்ணாபுரம் வரை நீட்டித்து இயக்கும்பட்சத்தில் வழித்தட நீளம் 30 கி.மீ.க்கு மேல் அமைவதால் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ள பகுதிக்கு 30 கி.மீ.க்கு மேல் வழித்தட நீட்டிப்புச் செய்ய இயலாது. எனவே, மேற்படி பேருந்துகளை மனுவில் கூறியுள்ளபடி நீட்டித்து இயக்கிட இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை-கோட்டம் 1) லிமிடெட், கோயம்புத்தூர்

பிரச்சினை:

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா, கறம்பக்குடி ஒன்றியம் மாங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த காத்தான்விடுதி கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் 1990-91-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு, பூர்த்திச் செய்யப்படாமல் உள்ளது. நாங்கள் பலமுறை மனுக்கொடுத்தும் பலனில்லை. பள்ளிக் கட்டடம் பழுதடைந்து வருகிறது. இந்த ஆண்டு மழையில் இடிந்துவிழுந்துவிடும். ஆகவே எங்கள் பள்ளிக் கட்டடம் முழுமையாகப் பூர்த்திபடைய வழிசெய்து தருமாறு மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- அ.கருப்பையா,
ஊராட்சி மன்ற உறுப்பினர்.
மாங்கோட்டை ஊராட்சி,புதுக்கோட்டை மாவட்டம்

தீர்வு:

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாங்கோட்டை ஊராட்சி காத்தான்விடுதி கிராமத்தில் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தின் பழுதினை நீக்க, ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து ரூ.30,000/- மதிப்பீட்டில் டெண்டர் மூலம் பழுது பார்த்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் பழுது பார்த்துக் கொடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

- க.சண்முகம்,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை

பிரச்சினை:

எங்கள் ஊர் திருச்சி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வீரமணிப்பட்டி கிராமம் ஆகும். ஊரில்

மொத்தம் 2,500 பேர் வசிக்கின்றோம். ஊரின் பாதி கிழக்கே மூன்று அடி பைப்புகள் அமைந்துள்ளன. ஊரின் பாதி மேற்கே உள்ள பொதுமக்கள் அரை மைல் தூரம் நடந்து சென்று, தொலைவிலுள்ள அண்டை கிராமத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்றனர். எனவே, தெற்கு-வடக்கு சாலை ஓரமாக அடி பைப் ஒன்று போட்டுத் தருமாறு பல மனுக்கள் கொடுத்தும், எவ்விதப் பலனுமில்லை. எனவே, எங்கள் குறையைத் தீர்க்கத் தக்க நடவடிக்கை விரைவில் எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், எங்கள் ஊரில் மின்விளக்குக் கம்பங்கள் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை எல்லாம் இருண்டுள்ளன. வீரமணிப்பட்டியிலிருந்து முசிறி செல்லும் பள்ளிக் குழந்தைகள் இரவு 8 மணிக்கு பஸ்ஸில் இருந்து இறங்கி இருட்டில் நடக்க வேண்டியிருக்கிறது. எனவே, மின் விளக்கு (தெருவில்) வசதிகளையும் செய்து தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- கிராமப் பொதுமக்கள்,*
*வீரமணிப்பட்டி, திருச்சி மாவட்டம்.*

**தீர்வு:**

*1997-98ஆம் ஆண்டு முசிறி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட 10வது நிதிக்குழு மானியத் தொகை மூலம் புதிய ஆழ்குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு, தற்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகள் நன்முறையில் பழுது பார்த்து இயக்க, திண்ணக்கோணம் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுரை கூறியுள்ளேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*- என்.சீனிவாசன்,*
*ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முசிறி,*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*

**பிரச்சினை:**

எங்கள் ஊர் திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு தாலுக்காவில் உள்ள பாப்பாந்தாங்கல் கிராமம் ஆகும். இது 3 கிராமங்களைக் கொண்ட ஓர் சிற்றூராட்சியாகும். இங்கு 4,000 மக்கள் வசிக்கின்றார்கள். இங்கு படித்தவர்கள் தங்கள் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள ஒரு நூலகம் அமைத்துத் தருமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*- கிராம மக்கள், பாப்பாந்தாங்கல்*

**தீர்வு:**

*1948ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படியும், தற்போது அரசாணை எண் 66, கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை நாள் 30.1.96ன் படியும், 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் மட்டுமே நூலகம் திறக்க அரசு வழிவகை செய்துள்ளது. பாப்பாந்தாங்கல் கிராமத்தில் மக்கள் தொகை 4,000. எனவே அங்கு கிளை நூலகம் திறக்க வாய்ப்பில்லை.*

*எனினும் பாப்பாந்தாங்கல் கிராமம் மக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், ஒரு பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*1. நூலகம் இயங்க வாடகையில்லாத இலவசக் கட்டிடம் தருதல் வேண்டும்.*

*2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.*

*3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.*

*4. ரூ.1000/- தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.*

*5. ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.*

*மேற்காணும் நிபந்தனைகளை முழுமையான அளவில் பாப்பாந்தாங்கல் கிராம மக்கள் நிறைவேற்றித் தரும் பட்சத்தில் திருவண்ணாமலை மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால் மேற்படி கிராமத்தில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- இரா.கண்ணன்,*
*பொது நூலக இயக்குநர், சென்னை*

**பிரச்சினை:**

1990ஆம் ஆண்டு தங்களின் அரசால் இரண்டாம் நிலை காவலர் பணிக்குத் தேர்வு பெற்றிருந்தோம். பின் வந்த ஆட்சியினரால் பழிவாங்கப்பட்டு, பணிநியமனம் பெறாமல் புறக்கணிக்கப்பட்டோம். பின் அதே தகுதியுடன் தங்களின் மாசற்ற நிர்வாகத்திறன் மிக்க ஆட்சி வரும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தோம். மீண்டும் தங்களின் தூய ஆட்சி சென்ற துணை நிதி நிலை அறிக்கையின்போது வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் அனைவருக்கும் தகுதியின் அடிப்படையில் பணி நியமனம் கிடைக்கும் என 27.8.96 அன்று சட்டசபையில் அறிவித்ததைத் தொடர்ந்து எங்களுக்கு மீண்டும் தகுதி சோதனை, மருத்துவப் பரிசோதனை மற்றும் காவல் பூர்வாகங்க விசாரணை முடித்துப் பணி நியமன உத்திரவை எதிர்நோக்கி உள்ளோம். இவ்வேளையில் 1996-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் தேர்வு பெற்ற காவலர்களுக்குப் பணி நியமனம் செய்து உத்தரவு அனைவருக்கும் வந்துள்ளது. எனவே, அதே தகுதியுடன் காத்திருக்கும் எங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பணி நியமன உத்திரவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாய் உள்ளத்தோடு வழங்கி, எங்களின் இருள் விலகச் செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- 1990ஆம் ஆண்டு காவலர் தேர்வு பெற்றவர்கள்,*
*விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*1989-90ஆம் ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற இரண்டாம் நிலை காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்து அரசின் அனுமதிகோரி கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் ஆணைக்காக எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் அரசின் ஆணை கிடைக்கப்பெற்றதும் பயிற்சி அளிக்கப்படும்; மற்றும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட தேர்ச்சி பெற்ற நபர்கள் அனைவருக்கும் இவ்வலுவலகத்திலிருந்து குறிப்பாணை மூலம் காவலர் பயிற்சிக்கு வெகு விரைவில் அழைக்கப்படுவீர் எனத்தகவலும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.*

- காவல்துறை இயக்குநர்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.


பதிவு எண். M. 867
Licence No. TN/MS(C)/P